Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 111 • 24.09.2017

இலங்கையின்
முதல் தர தமிழ்
வார இதழில் உங்கள்
வணிக விளம்பரங்கள்
நியாயமான விலைகளில்
இடம்பெற வேண்டுமா



உடனே அழையுங்கள்
0768255563, 0214927561

தீபம் எப்பொழுதும் உங்களுக்கான
தன்னிகரில்லா சேவையை வழங்க முன்னிற்கும்



## பலாலிக்கு வந்த ஆபிரிக்க இராணுவம்

ஆனந்தசங்கரி எழுதும் அனுபவங்கள்

## புதிய தொடர்... ராஜிவ் கொலையில் நடந்தது என்ன?

## முஸ்லிம் கூட்டமைப்பு

சட்டி சுட்ட கதையாகுமா?



## மஹிந்த வடக்கில் உருவாக்கும் 'சிலிப்பர் செல்கள்'!



## A/L பரீட்சைக்கு பின் என்ன படிக்கலாம்?



# பிரபாகரனை மறந்த சிவாஜி கணேசன் டக்ளஸை விரட்டிய கமல்ஹாசன்

உலகமகா நடிப்புடா சாமி

தலைமைக் காரியாலயம்
இல. 57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
077 722 6247

கிளைக் காரியாலயங்கள்
வேலணை, வங்களாவடிச் சந்தி
021 221 5472
மல்லாகம். கே.கே.எஸ் வீதி
021 224 3393
சங்கானை, ஓடக்கரை வீதி
021 225 1664

சசிகா
லேணர்ஸ்



இல. 281C
மணிக்கூட்டுக் கோபுர வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி
021 222 8004



# TOPAZ

No. 01 Shop in Jaffna



திருமண பட்டுச்சேலை காஞ்சி புரம் பட்டுச் சேலை
சுடிதார் மற்றீயல்கள் மற்றும் ரெடிமேட் ஆடைகள்

ஆண்களிற்கான சூட் மற்றும் ரெடிமேட் ஆடைகள்

மிஸ் சுட்டி மிஸ் பியூட்டியாக வலம் வரும் சுட்டிச்
சிறுமியர்களிற்கான பஷன் ஆடைகள்

We are specialist in in
Wedding suits, Wedding Sarees , Party Sarees,
Wedding Frocks, Party Frocks and all kinds of Items

**TOPAZ**
No 72, Grand Bazaar
Jaffna
Tel 021 222 4743
Fax 021 222 7645

**TOPAZ TAILORING**
No 80/24, Kasthuriyar Road
Jaffna
Tel 021 222 4643

**TOPAZ MALL**
No 195, Power House Road
Jaffna
Tel 021 222 4933
021 221 9833



# தீபம் குடும்பத்துடன் இணைந்து பணியாற்ற விருப்பமா?

தமிழின் முதல் தர வார இதழ் தீபத்துடன் இணைந்து பணியாற்ற
துடிப்பான இளைஞர்கள், யுவதிகளை வரவேற்கின்றோம்

பின்வரும் பதவிகளில் கடமையாற்ற விரும்புவர்கள் இன்றே விண்ணபியுங்கள்

| பதவிகள் | எண்ணிகை |
|---|---|
| நிர்வாக உத்தியோகத்தர். | (1) |
| மாவட்ட இணைப்பாளர்கள். | (6) |
| சந்தைப்படுத்தல் முகாமையளார் | (1) |
| சந்தைப்படுத்தல்உத்தியோகத்தர்கள் | (6) |


(மாவட்டத்திற்கு ஒருவர் என்ற வகையில் தேர்வு முக தேர்வு இடம் பெறும்)

அலுவலக உதவியாளர் (1)

கிழக்கு மாகணத்தில் கடமையாற்ற விரும்புவர்களுக்கு
மட்டகளப்பில் இடம்பெறும்.

13/09/2017 திகதிக்கு முன்
விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி
நிர்வாகப் பணிப்பபாளர் (தீபம் வார மலர்)
நோர்சி மீடியா(பிறைவேற்) லிமிற்றட், 989/1 பருத்தித்துறை வீதி கல்வியங்காடு,
நல்லூர். யாழ்ப்பாணம் 0768255560,0214927561

யாழ் புகையிரத
நிலையத்துக்கு அருகாமையில்
சகல வசதிகளுடனும்
அதி உயர்தர
வலம்புரி ஹோட்டல்.



Green Grass

# The Valampuri

148/10 Railway Station Rd, Jaffna 40000 Phone: 021 2 220111


# TILKO

## JAFFNA CITY HOTEL

TILKO hotels

Address: 70/6, K.K.S. Road, Jaffna, Sri Lanka
Tel: 021 222 5969, Fax: 021 222 7291
e-mail: tilko.tilak@gmail.com Web: www.cityhoteljaffna.com

**Mob : 077 780 393, 0777 696 443**



கே.ராகோத்தமன்

**இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கு மிக ஆழமானது. ராஜிவ் கொலை முயற்சி எப்படி திட்டமிடப்பட்டது, எப்படி அரங்கேற்றப்பட்டது, இந்திய புலனாய்வு அதிகாரிகள் எப்படி அதை துப்பு துலக்கினார்கள், அப்பொழுது நடந்த சம்பவங்கள், சவால்கள் என்ன என்பதை வழக்கின் தலைமை அதிகாரி கே.ரகோத்தமன் விபரமாக எழுதியுள்ளார். முழுமையான ஆதாரத்துடன் தீபம் வாசகர்களிற்காக புதிய தொடர் ஆரம்பிக்கிறது.**




# ராஜிவ் காந்தி கொலை

## எப்படி... என்ன நடந்தது? 1

கொலையும் படுகொலையும் ஒன்றல்ல. படுகொலைக்கான காரணங்கள் என்னவாக வேண்டுமானாலும் இருக்கலாம்.

பழி வாங்குவதற்காக. வெகுமதி பெறுவதற்காக. எதிரி என்று கருதப்படுபவரை நீக்குவதற்காக. லட்சியத்தை நிலை நாட்டுவதற்காக. சித்தாந்தத்துக்காக.

மகாத்மா காந்தி, கென்னடி, மார்ட்டின் லூதர் கிங், முஜிபுர் ரஹ்மான் என்று சரித்திரத்தில் பதிவான, சரித்திரத்தை உலுக்கிய படுகொலைகள் ஏராளம்.

இந்தப் படுகொலைகளுக்குப் பின்னால் பழிவாங்கும் வன்மத்தைக் காட்டிலும் அரசியலே பிரதானமாக இருந்தது. காந்தி, இந்திரா, ராஜிவ். இந்தியாவை உலுக்கியெடுத்த மூன்று பிரதான படுகொலைகள் இவை.

ஜனவரி 30, 1948 அன்று நாதுராம் கோட்ஸேவால் காந்தி சுட்டுக்கொல்லப் பட்டார். இந்திரா காந்தி அவருடைய சீக்கியப் பாதுகாவலர்களால் அக்டோபர் 31, 1984 அன்று சுட்டுக்கொல்லப்பட்டார்.

பஞ்சாபில் நடைபெற்ற ஒப்ரேஷன் ப்ளூஸ்டார் அதிரடிக்குப் பழிவாங்கும் வகையில் இந்தப் படுகொலை நிகழ்த்தப் பட்டது. இந்திராவின் மகன், ராஜிவ் காந்தி, ஸ்ரீபெரும்புதூரில் மே 21, 1991 அன்று படுகொலை செய்யப்பட்டது அரசியல் இன்னமும் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த வகையில், மற்ற இரு படுகொலைகளைக் காட்டிலும் இது கூடுதல் முக்கியத்துவம் பெறுகிறது.

ராஜிவ் காந்தி கொல்லப்பட்டபோது, இந்தியா நாடாளுமன்ற தேர்தலுக்குத் தயாராகிக்கொண்டிருந்தது ஒரு முரண்நகை. உலகின் மிகப் பெரிய ஜனநாயக தேசமான இந்தியா, தடுமாறிய தருணம் அது.

இந்தியாவின் ஜனநாயகம் கேள்விக்கு உட்படுத்தப்பட்ட தருணமும்கூட. ராஜிவ் கொலை வழக்கின் தலைமைப் புலனாய்வு அதிகாரியாக நான் நியமிக்கப்பட்டேன்.

இந்தியா சந்தித்த மிகப் பெரிய வழக்கு அது. உலகளவில்கூட, இந்த வழக்கு முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த வழக்கில் ஈடுபட்டிருந்த காலத்தில், ஏகப்பட்ட சிக்கல்களை, சவால்களை, புதிர்களை நான் சந்திக்கவேண்டியிருந்தது.

அந்த அனுபவங்களை வாழ்நாள் முழுவதும் என்னால் மறக்கமுடியாது. மிகக் கவனமாகத் திட்டமிட்டு, மிகத் துல்லியமாக நடத்தி முடிக்கப்பட்ட படுகொலை அது.

ராஜிவைக் கொன்றது ஏன் என்பதற்கு வலுவான காரணங்கள் விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்படுகின்றன. இந்திய அமைதிப்படை (ஐ.பி.கே.எஃப்) இலங்கையில் நிகழ்த்திய ஆபரேஷன் பவானுக்குப் பழி தீர்க்கவேண்டும். தேர்தலில் வெற்றி பெற்று ராஜிவ் பிரதமர் ஆகியிருந்தால், தனி ஈழம் சாத்தியமாகாது. எனவே, அவர் நீக்கப்படவேண்டியவர். எனவே, நீக்கப்பட்டார்..

கொன்றவர்கள் விடுதலைப் புலிகள் என்பதைக் கண்டுபிடித்த பிறகும், ஆதாரங்கள் அகப்பட்டபிறகும், வாக்கு மூலங்கள் பெறப்பட்ட பிறகும், பல மர்ம முடிச்சுகள் அவிழ்க்கப்படாமலே இருந்தன. இன்னமும்கூட, சில சந்தேகங்கள், சந்தேகங்களாகவே நீடிக்கின்றன. சில குழப்பங்கள் தீர்க்கப்படாமலே கிடக்கின்றன. அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த பலர் விசாரிக்கப்படவில்லை.

சிலர் காப்பாற்றப்பட்டனர். சிலர், தங்களைக் காப்பாற்றிக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர். வழக்கு விசாரணை ஆரம்பித்த தினம் தொடங்கி, வழக்கு முடிவுக்கு வந்த திகதி வரையிலான அத்தனை முக்கிய விவரங்களையும் இங்கு பதிவு செய்கிறேன்.



### 1. செய்தியாக வந்த குண்டு

பொதுவாக பெங்களூரிலிருந்து சென்னை வருவதற்கு இரவு பத்தரை மணி பெங்களூர் மெயிலைத்தான் விரும்புவேன். ஏறிப் படுத்துவிட்டால் நிம்மதியாகத் தூங்கலாம். விடியும் நேரம் சென்னை சென்ட்ரலுக்கு வந்து சேரும். பதற்றமின்றி அப்போதும் தூங்கலாம். ரயில்வே ஊழியர்கள் வந்து எழுப்பி இறக்கி அனுப்பி வைப்பார்கள். சுகமான பயணம். நிம்மதியான தூக்கம்.

வீட்டுக்குப் போய்க் குளித்துவிட்டு அலுவலகம் போனால் பயணக் களைப்பு சற்றும் தெரியாது. அன்றைக்கும் அப்படித்தான். ஒரு பழைய கேஸ் விஷயமாக பெங்களூர் சென்றிருந்தேன். போன வேலை முடிந்ததும் இரவு பெங்களூர் மெயிலில் ஏறிப் படுத்தேன்.

இரண்டாம் வகுப்பு ஏசி பெட்டி. வண்டி கிளம்பியதுதான் தெரியும். தூங்கிவிட்டேன். காலை சென்னை சென்ட்ரலுக்கு வண்டி வந்து நின்று இறங்கியபோது சட்டென்று என்னவோ புதிதாகப் பட்டது.

ரயிலில் இருந்து இறங்கிச் சென்றவர்களைத் தவிர, ரயில் ஏற வருகிற மக்கள் யாரையுமே காணோம். போர்ட்டர்கள்? பிளாட்பாரக் கடைகள்? அட, யாராவது ரயில்வே ஊழியர்கள்? என்ன ஆயிற்று சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு? மெல்ல நடந்து வெளியே வந்தேன்.

வாசலில் எப்போதும் கார் நிற்கும் இடத்தில், காரையும் காணோம், டிரைவரையும் காணோம். அடக்கடவுளே, நான் எப்படி கேகே நகர் சிபிஐ குவார்ட்டர்ஸுக்குப் போய்ச் சேருவேன்? என்ன சார், எதாவது பிரச்னையா? கடந்து போன ஒரு ரயில்வே ஊழியரின் தோள் தொட்டுச் சட்டென்று கேட்டேன்.

திரும்பியவர் முகத்தில் பதற்றம் தெரிந்தது. ஏதோ அவசர காரியத்தை முடித்துவிட்டு எங்கோ ஓடத் தவிக்கிற பதற்றம். 'ஆமா சார்! ராஜிவ் காந்திய கொன்னுட்டாங்க!' என் கார் ஏன் வரவில்லை என்பது புரிந்துவிட்டது.

இன்றைய பொழுது அசாதாரணமாக மட்டுமே கழியப்போகிறது. ஏதாவது வண்டி கிடைக்குமா என்று பார்த்தபடியே சாலையில் நடக்கத் தொடங்கினேன்.

பஸ்கள் ஓடவில்லை. கார்கள் கிடையாது. ஆட்டோ இல்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக டூ வீலர்கள் மட்டும் கடந்து போயின. யாரையாவது கைகாட்டி நிறுத்தி ஏறிச் செல்வது தவிர வேறு வழியில்லை என்று தோன்றியது. நிறுத்தலாமா என்று யோசித்தபடியே எழும்பூர் வரை நடந்துவிட்டேன்.

அதற்குமேல் நடக்க முடியாது என்று தோன்றிவிட்டது. ஒரு பி.சி.ஓவில் நுழைந்து டிராவல் ஏஜென்சி வைத்திருக்கும் என் நண்பர் ஒருவருக்கு போன் செய்தேன். எக்மோரில் இருக்கிறேன். நான் வீட்டுக்குப் போயாக வேண்டும். ஏதாவது உதவி செய்யுங்கள்.

நண்பர் கார் அனுப்புவது கஷ்டம் என்று சொன்னார். எங்கும் கலவரம். ஓடுகிற வண்டிகளையெல்லாம் அடித்து நொறுக்குகிறார்கள். யார்?. தெரியாது. கலவரக்காரர்கள். அவ்வளவுதான்.

சரி, 'ஒரு டூ வீலராவது அனுப்புங்கள் என்று சொல்லிவிட்டுக் காத்திருந்தேன். சற்று நேரத்தில் நண்பர் யாரையோ பிடித்து அனுப்பி வைத்தார். கேகே நகர் சிபிஐ குவார்ட்டர்ஸுக்கு நான் வந்து சேர்வதற்குள் ஒருவாறு எனக்கு நிலவரம் புரிந்துவிட்டிருந்தது.

தமிழகத்துக்குத் தேர்தல் பிரசாரம் செய்ய வந்திருந்த முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தியை ஸ்ரீபெரும்புதூரில் கொன்றுவிட்டார்கள். குண்டு வெடித்திருக்கிறது. அவரோடு சேர்த்து வேறு பலரும் பலி. காயமுற்றோர் இன்னும் நிறைய. தேசத்தை ஏன், உலகத்தையே அதிரச் செய்த அந்த மாபெரும் படுகொலைச் சம்பவம் நடந்த இரவு, எந்த விவரமும் தெரியாமல் நான் பெங்களூர் மெயிலில் தூங்கிக்கொண்டிருந்திருக்கிறேன்.

(தொடரும்)

# அஷ்ரப் மர்மம் துலங்கும்: தாருஸ்ஸலாம் மீளும்!

## ● பஷீர் சேகுதாவூத் சூளுரை

**நிந்தவூர், செப்.24**

ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரசின் முன்னாள் தலைவர் எம்.எச்.எம் அஷ்ரப்பின் மரணம் விபத்தா அல்லது சதியா என்பதை வெகுவிரைவில் வெளிச்சத்திற்கு கொண்டு வருவேன் என சூளுரைத்துள்ளார் முஸ்லிம் காங்கிரசின் முன்னாள் தவிசாளரும் தூய முஸ்லிம் காங்கிரசின் பிரமுகருமான பஷீர் சேகுதாவூத். அஷ்ரப்பின் 17வது வருட நினைவுதினத்தில் உரையாற்றும் போதே இதனை தெரிவித்தார். அத்துடன் தாருஸ்ஸலாம் கட்டடத்தை மோசடி பேர்வழிகளிடம் இருந்து மீட்டெடுப்பேன் என்றும் கூறினார்.

அஷ்ரப்பின் 17வது நினைவுதினம், தூய முஸ்லிம் காங்கிரசின் ஏற்பாட்டில் கடந்த 16ம் திகதி நிந்தவூர் பிரதேசசபை மண்டப கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. முஸ்லிம் காங்கிரசின் முன்னாள் செயலாளர் நாயகமும், தூய முஸ்லிம் காங்கிரசின் பிரமுகருமான எம்.ரி.ஹசன் அலி தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதில் பஷீர் சேகுதாவூத் லந்து கொண்டு உரையாற்றியபோதே இதனை தெரிவித்தார். தமிழ் தேசியத்துடன் அஷ்ரப் சேர்ந்தியங்கிய போதும், அது வன்முறையாக மாற்றமடைய தொடங்கிய பின்னர் முஸ்லிம் தேசியம் குறித்து சிந்திக்க தொடங்கியதாகவும் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் "அஷ்ரப்பின் அரசியல் ஆளுமை ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்தின் அரசியல் அளுமையாக உள்ளது. ஆனால் அஷ்ரப் என்கிற அரசியல் ஆளுமை இன்னமும் மரணித்துவிடவில்லை என்பதும், முஸ்லிம் சமூகத்தின் அரசியல் அளுமைதான் அஸ்தமித்து விட்டது என்பதும் புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

ஆரம்பத்தில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் செயற்பட்டார். பிரபுத்துவ அரசியலில் அவருக்கு இருந்த வெறுப்பே இதற்கு காரணமாக அமைந்தது. தமிழ் தேசிய விடுதலை ஊடாக முஸ்லிம்களின் விடுதலையை அடைய முடியுமா? என்கிற பரிசோதனையை 1970 களில் தமிழர் விடுதலை கூட்டமைப்புடன் சேர்ந்து செயற்பட்டதன் மூலம் மேற்கொண்டார். அதனால்தான் அண்ணன் அமிர்தலிங்கம் தமிழீழத்தை பெற்று கொடுக்கா விட்டால் தம்பி அஷ்ரப் அதை பெற்று கொடுப்பான் என்று முழங்கினார்.

ஆயினும் தமிழ் தேசியவாதம் கால ஓட்டத்தில் வன்முறையாக மாற்றம் பெற்ற போது முஸ்லிம் தேசியம் குறித்து சிந்திக்க தொடங்கினார். முஸ்லிம்களுக்கென்று தனித்துவமான அரசியல் வேண்டும், அதன் இயங்குதளமாக கிழக்கு மாகாணம் இருத்தல் வேண்டும், இதன் மூலமாக வடக்கு மாகாண முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்று முடிவெடுத்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் மேட்டுக்குடி அரசியலுக்கு எதிராக செயற்பட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியுடன் இவர் ஒப்பந்தம் செய்து கொண்டாராயினும், சில சதி வேலைகள் காரணமாக ஒப்பந்தம் இவரின் ஒப்புதல் இன்றி மாற்றப்பட்டபோது ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான மேட்டுக்குடி வர்க்கத்தை சேராதவரான ஆர். பிரேமதாஸவை ஆதரிக்கின்ற தீர்மானத்தை எடுத்தார். 2000 ஆம் ஆண்டு தேர்தல் காலத்தில் அவருடைய சிந்தனையில் மிக முக்கியமான மாற்றம் நேர்ந்தது. அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று வியூகம் அமைத்தார்.

தாருஸ்ஸலாமை கட்டினார். சிங்கள பௌத்தத்தின் அடையாளமாக அறியப்பட்ட சோம தேரருடன் நேரடி விவாதம் செய்து வெற்றி ஈட்டினார். ஆனால் இச்சூழ்நிலைகளில்தான் இவரின் மரணம் இடம்பெற்றது என்பது அவதானத்துக்கு உரியது. இவருடைய மரணத்தில் மர்மம் உண்டு என்று அன்றைய ஜனாதிபதி சந்திரிகாவும் எண்ணியதால்தான் இவரின் மரணத்தை விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு அமைத்தார். இந்த ஜனாதிபதி ஆணைக்குழு மூன்று மாதங்களில் அதன் அறிக்கையை ஜனாதிபதிக்கு சமர்ப்பித்து விட்டபோதிலும் கடந்த 17 வருடங்களாக இவ்வறிக்கை பகிரங்கப்படுத்தப்படவில்லை.

எனவேதான் தலைவர் அஷ்ரப்பின் மரணத்தில் மர்மம் உள்ளது என்று நாம் வலுவாக சந்தேகிக்கின்றோம். தகவல் அறியும் சட்டத்தின் கீழ், தலைவர் அஷ்ரப்பின் மரணம் தொடர்பான அறிக்கையை பகிரங்கப்படுத்த வேண்டும் என்று கேட்டு விண்ணப்பித்து உள்ளேன். இது தொடர்பாக எதிர்வரும் மாதம் எனது நேரடி வாக்குமூலத்தை பதிவு செய்வார்கள். தலைவர் அஷ்ரப்புக்கு நான் தனிப்பட செய்ய வேண்டிய இரு கடமைகள் உள்ளன. இவரின் மரணம் தொடர்பான அறிக்கையை வெளியிட வேண்டும், தாருஸ்ஸலாமை மோசடி பேர்வழிகளிடம் இருந்து மீட்டு சமுதாயத்துக்கு கொடுக்க வேண்டும் என்பனவே இக்கடமைகள் ஆகும்.

தலைவர் அஷ்ரப்பின் மரணம் விபத்தா? சதியா? என்பதை வெகுவிரைவில் நான் வெளிப்படுத்துவேன். அதே நேரம் தாருஸ்ஸலாமை மோசடி பேர்வழிகளிடம் இருந்து மீட்டு சமுதாயத்துக்கு கொடுப்பேன்.

தலைவர் அஷ்ரப்பின் மரணத்துக்கு பின்னர் முஸ்லிம் அரசியலில் வெறுமை ஏற்பட்டு உள்ளது. அரசியல் வெறுமை உள்ளவரிடம் தலைமை வந்து சேர்ந்து விட்டது. தலைவர் அஷ்ரப் இல்லாத காலத்தில் அவர் விட்டுப் போன பாதையில் தொடர்ந்து நடக்க நாம் தவறி விட்டோம். அண்மையில் தமிழ் தேசியமும், முஸ்லிம் தேசியமும் அரசியல்மைப்பன் 20 ஆவது திருத்த சட்டமூலத்துக்கு பலியாகி விட்டன" என்றார்.

இதில் பேராளர்களாக நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எம்.ஏ.எம். தாஹிர், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சட்டத்தரணி எம்.ஏ. அன்சில், தொழிலதிபர் நஸார் ஹாஜியார் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

# மாகாணசபை கலைக்கப்பட்டாலும் பணி தொடரும்!

**திருகோணமலை, செப்.24**

மாகாணசபை கலைக்கப்பட்டாலும் சிறுபான்மைச் சமூகங்களுக்கான அரசியல் உரிமையையும், அபிவிருத்தியையும் அடைந்துகொள்ளும் எமது பயணத்திலிருந்து ஒருபோதும் ஒதுங்கப் போவதில்லை என கூறியுள்ளார் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட். சமகால அரசியல் நிலவரம் தொடர்பாக குறிப்பிடும்போது இதனை தெரிவித்துள்ளார்.

"சிறுபான்மை சமூகத்தை சேர்ந்த சில அரசியல்வாதிகள் மாகாணசபை கலைக்கப்பட போகிறதென பீரங்கி பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர். மாகாண சபை ஆட்சி எப்போதாவது கலைக்கப்படத்தான் வேண்டுமென்பதை இவர்கள் சொல்லித்தான் மக்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதில்லை. அரசியலமைப்பின்படி எப்போதாவது மாகாண சபையும், பாராளுமன்றமும், உள்ளூராட்சி சபைகளும் கலைக்கப்படத்தான் வேண்டும்.

மாகாண ஆட்சி நீடித்தாலும், கலைக்கப்பட்டாலும் பாதிக்கப்பட்ட சிறுபான்மை சமூகங்கள் சார்பாக அவர்கள் அரசியல் அதிகார உரிமைக்காகவும், அபிவிருத்திக்காகவும் நாம் தொடர்ந்து பாடுபடுவோம். சிறுபான்மை சமூகங்களின் ஒன்றுபட்ட அரசியல் விடுதலைக்காக நாம் குரல் எழுப்புவதை இந்த சோரம் போன அரசியல்வாதிகளால் தடுக்க முடியாது" என குறிப்பிட்டார்.

# கிரானில் காணி பறிக்க முயற்சியாம்!

**மட்டக்களப்பு, செப்.24**

மட்டக்களப்பின் பூலாக்காடு கிராம சேவகர் பிரிவில் உள்ள பட்டியடிவெளி விவசாய கண்டத்தில் உள்ள தமது விவசாய நிலங்களை கையகப்படுத்த முயற்சி நடப்பதாக விவசாயிகள் குற்றம் சுமத்தியுள்ளனர். தமது 27 ஏக்கர் நிலத்தை அரசகாணியாக அடையாளப்படுத்த முயற்சிகள் நடப்பதாக அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கோரளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பூலாக்காடு கிராம சேவகர் பிரிவில் உள்ள பட்டியடிவெளி விவசாய கண்டத்தில் தமக்கு சொந்தமான 27 ஏக்கர் விவசாய நிலம் உள்ளதாக மூன்று முஸ்லிம் விவசாயிகள் குறிப்பிட்டுள்ளனர். எனினும் அதனை அரசகாணியாக அடையாளப்படுத்தி அந்த காணிகளை தமிழ் வழங்க முயற்சிக்கப்படுவதாக குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதேவேளை, கிரான் கிராமசேவகர் பிரிவிற்குட்பட்ட மரைக்கார்திடல் பகுதியில் முஸ்லிம்களிற்கு சொந்தமான முன்னூறு ஏக்கர் காணிகளை அரசகாணிகளாக அடை யாளப்படுத்தும் முயற்சி நடப்பதாக அநத பகுதி மக்களும் குற்றம் சுமத்தியுள்ளனர். இந்த காணிகள் தமக்கு சொந்தமானதென்பதற்கு 1913ம் ஆண்டில் அரசு வழங்கிய காணி உறுதிகள் உள்ளபோதும், தமது காணிகளை பறிமுதல் செய்யும் நடவடிக்கை தொடர்வதாக அந்த பகுதி மக்கள் மிகுந்த வேதனையுடன் கவலை தெரிவித்துள்ளனர்.

# தனித்தா? கூட்டா?

## ● குழப்பத்தில் முஸ்லிம் காங்கிரஸ்

**அம்பாறை, செப்.24**

எதிர்வரும் கிழக்கு மாகாணசபை தேர்தலில் தனித்து போட்டியிடுவதா, கூட்டணி அமைப்பதா என்பதில் முஸ்லிம் காங்கிரசிற்குள் குழப்பமான நிலையேற்பட்டுள்ளது. தற்போதைய நிலையில் யாருடனும் கூட்டணி வைப்பது புத்திசாலித்தனம் அல்லவென்ற அபிப்பிராயம் பரவலாக கட்சிக்குள் எழுந்துள்ளது. அண்மையில் நடந்த அம்பாறை மாவட்ட மத்திய செயற்குழு கூட்டத்திலும் இது எதிரொலித்தனது.

முஸ்லீம் காங்கிரசின் அம்பாறை மாவட்ட மத்திய செயற்குழு சம்மாந்துறை நகர மண்டபத்தில் கடந்த 17ம் திகதி நடைபெற்றது. கட்சி தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் இந்த கூட்டம் நடந்தது.

கூட்டத்தின் ஆரம்பத்தில் ஹக்கீம் உரையாற்றினார். எதிர்வரும் கிழக்கு மாகாணசபை தேர்தல்களை எப்படி எதிர்கொள்வது, தேர்தலை தனித்து எதிர்கொள்வதா அல்லது கூட்டணி அமைப்பதா, கூட்டணி அமைப்பதெனில் யாருடன் கூட்டணி அமைப்பதென்பது பற்றிய அபிப்பிராயங்களை சொல்லுமாறு ஹக்கீம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதனையடுத்து நீண்ட வாதப்பிரதிவாதங்கள் நடந்தன. ஐக்கிய தேசியக்கட்சியுடன் கூட்டணிவைப்பதை ஒரு பகுதி செயற்குழு உறுப்பினர்கள் விரும்பவில்லை. நீலக்கல்லி மலை புத்தர் சிலை விவகாரம், முஸ்லிம்களின் காணிப்பிரச்சனை என்பன முடிவின்றி தொடரும் நிலையில் ஐதேகவுடன் கூட்டணி வைக்க கூடாது. மக்கள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என அவர்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

இதேவேளை, தமிழ் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து தேர்தலை சந்திப்பதை இன்னொரு தொகுதி செயற்குழு உறுப்பினர்கள் விரும்பவில்லை. கிழக்கு மாகாணசபையில் 20வது திருத்தத்தை முஸ்லிம் காங்கிரசும், தமிழ் தேசிய கூட்டமைப்பும் இணைந்து ஆதரித்திருந்தன. வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்பிற்கு முஸ்லிம் காங்கிரஸ் சம்மதித்ததற்கு பிரதிபலனாகவே தமிழ் தேசிய கூட்டமைப்பு 20வது திருத்தத்தை ஆதரித்தது என்ற பிரசாரங்கள் எழலாம். காங்கிரசிற்கு எதிரான அணியில் உள்ள பஷீர் சேகுதாவூத், அதாவுல்லாஹ் போன்றவர்கள் இப்போதே இந்த பிரசாரத்தை ஆரம்பித்துவிட்டனர் என அவர்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

இந்த இழுபறியையடுத்து முடிவின்றி கூட்டம்முடிவடைந்துள்ளது. இன்னொரு தடவை மத்திய செயற்குழுவை கூட்டி இந்த விடயத்தை ஆராய்வதென்றும், அதற்கு முன்னர் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்ட செயற்குழுவை கூட்டி அபிப்பிராயத்தை பெறுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. மூன்று மாவட்ட செயற்குழு தீர்மானங்களின் பின், கட்சியின் உயர்பீடம் இறுதி முடிவை எடுப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

# பொறுப்புக்கூறலின் அவசியம்!

ஐநா மனித உரிமைகள் பேரவை அமர்வுகளில் இலங்கை விவகாரம் வழக்கத்தை விட கொஞ்சம் சுருதி குறைவாக பேசப்பட்டுள்ளது. வழக்கம் போலவே இலங்கை மீதான குற்றச்சாட்டுக்கள், சாட்சியங்கள் அரங்கில் ஒலித்தன. யுத்தம் முடிந்ததற்கு பின்னர் ஒலித்த இலங்கை அரசுகளின் குரலையே இம்முறை மைத்திரியும் சற்று மென்மையாக எதிரொலித்துள்ளார். இனப்பிரச்சனை தீர்விற்கு காலஅவகாசம் கோரியுள்ளார்.

இனப்பிரச்சனை தீர்விற்கு காலஅவகாசம் கோருவது நியாயம்தான். குறுகிய அவகாசத்தில் அதை செய்ய முடியாது. அதற்கு அவகாசம் தேவை. ஆனால் இனப்பிரச்சனை தீர்வு படிமுறையில் பல கட்டங்கள் உள்ளன. இனப்பிரச்சனை தீர்வென்பது தனியே அரசியலமைப்பு மாற்றமல்ல. அதற்கு முன்னர் நிகழ்த்தப்பட வேண்டிய நல்லிணக்கப் படிமுறைகள் பலவுள்ளன. இலங்கை அதை செய்ததா என்பது பெரிய கேள்வி.

ஆட்சிமாற்றத்தின் பின் இரண்டு இனங்களின் தலைமைகளிற்கு மிடையில் புரிதலும், இணக்கமும் அதிகரித்துள்ளது என்பது உண்மை. ஆனால் அது இலங்கையின் இனங்களிற்கிடையிலான புரிதலாகவும், இணக்கமுமாக மாற்றமடையவில்லை. இதை செய்வதில் நிகழ்ந்த தாமதமும் இன்றைய நெருக்கடிகளிற்கு ஒரு காரணம்.

யுத்தத்தின் பின் நல்லிணக்க செயற்பாட்டில் இலங்கையிடம் தெளிவான வரைபடம் இருக்கவில்லை. மோசமான வரைபடம் ஒன்றினாலேயே மகிந்த ராஜபக்ச வீடு செல்ல வேண்டியிருந்தது. இது சாம்ராஜ்ய யுகங்கள் இல்லை. தோல்வியடைந்தவர்களை அடிமைகளாக நடத்திய காலத்தை மனிதர்கள் கடந்து அரைநூற்றாண்டிற்கு. மேலாகி விட்டது. புதிய சூத்திரங்கள் இந்தக்காலத்தில்

**தீபம்**

989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்
(கல்வியங்காடு இலங்கை வங்கி கட்டிட தொகுதி)
ஆசிரியர்பீடம்: 0214927562
அலுவலகம்: 0214927561
விநியோகம்: 0214927542
விளம்பரம்: 0768255560
செய்திகளிற்கு: deepamdesk@gmail.com

அறிமுகமாகி விட்டன. வெற்றி பெற்றவர்களின் பெருந்தன்மையே, அவர்களின் வெற்றியை தொடர் வெற்றியாக்கும். மகிந்த ராஜபக்ச தோற்கடிக்கப்பட்டாலும், அவர் விட்டுச்சென்ற கூறுகளுடன் மல்லுக்கட்டுவதிலேயே இந்த அரசின் காலமும் முடிந்து செல்கிறது.

காணி விடுவிப்பு விவகாரத்தில் ஓரளவு முன்னேற்றம் இருக்கிறது. ஆனால் போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிற்கான விசேட அபிவிருத்தி திட்டம், காணாமல் போனவர்கள் விவகாரம், யுத்த குற்றங்களிற்கு பொறுப்புகூறல் விடயங்களில் குறிப்பிடும்படியான முன்னேற்றங்கள் இல்லை. பாதிக்கப்பட்டவர்களின் காயங்கள் ஆற்றப் படும் வரை நிரந்தர சமாதானத்தை நோக்கி நகர்வது சிரமமான ஒன்று.

காணாமல் போனவர்கள் இருக்குமிடத்தை சொன்னால் அவர்களை மீட்டுத்தருவதாக ஜனாதிபதி அண்மையில் காணாமல் போனவர்களின் உறவுகளிடம் தெரிவித்திருந்தார். காணாமல் போனவர்கள் உயிருடன் இருக்க வாய்ப்பில்லையென்ற அர்த்தத்தில் ஜனாதிபதி அப்படி சொல்லியிருக்கலாம். யதார்த்தம் அதுவென்றால், காணாமல் போனவர்களிற்கு என்ன நடந்ததென பொறுப்புக்கூறுவதுதான் அரசாங்கத்தின் தார்மீக கடமை. ஆனால், அதை செய்ய அரசாங்கம் தயாராக இல்லை. பாதுகாப்பு படைகளின் தளபதிகளை குறிப்பாக பெயர் குறிப்பிட்டு யஸ்மின் சூக்காவின் அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. சூக்காவின் அறிக்கைக்கு நெருக்கமாக, விடுதலைப்புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ் செல்வனின் மனைவி சசிரேகாவின் சாட்சியம் அமைந்திருந்தது. சரணடைந்ததில் இருந்து இராணுவ விசாரணை வலயத்தை விட்டு வெளியில் வந்தது வரையான காலத்தை பற்றி முதன்முறையாக பகிரங்கமாக பேசியிருக்கிறார். அதில் யோசெப் முகாம் பற்றிய பகுதிகள் உள்ளன. அங்கு சித்திரவதை நடந்ததாக சசிரேகாவும் குறிப்பிடுகிறார்.

இலங்கையின் பொறுப்புக்கூறலின் அவசியத்தை மேலும் அதிகரிக்கும் சம்பவங்கள்தான் நடந்து கொண்டிருக்கின்றன. இவற்றை இலங்கை புறந்தள்ள முடியாது.

இலங்கையின் பொறுப்புக்கூறலை வலியுறுத்தும் பாதிக்கப் பட்டவர்களின் சாட்சியங்களை இலங்கை எதிர்நிலையில் அணுகத் தேவையில்லை. புரிந்துணர்வின் அடிப்படையில் முன்னெடுக் கப்பட வேண்டிய பணியிது. இலங்கையின் பொறுப்புக்கூறலும், சர்வதேச சமூகத்திற்கு அளித்தவாக்குறுதிகளையும் நிறைவேற்றினாலே நல்லிணக்க பயணத் தில் கணிசமான தூரத்தை கடந்து விடலாம். இது அரசியலமைப்பு உரு வாக்க பணிகளையும் வலுப்படுத் தும். இதை செய்யாமல் தனியே அரசிய லமைப்பு மாற்றத்தினால் மட்டும் நீடித்த சகோதரத்துவ இலங் கையை கட்டியெழுப்ப முடியாது.



## அக்கம் பக்கம்

நந்தனார்

# நானும் ரௌடிதான்

மீண்டும் சர்ச்சையை கிளப்பியிருக்கிறார் டான் பிரியசாத். ரோஹிங்ஞா முஸ்லீம்களிற்கு எதிராக பச்சையான இனவாத பதிவை சமூகவலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார். "நாங்கள் ஒன்றிணைந்து அவர்களை கொன்றுவிடுவோம்" என்பதே அவரது பதிவு.

மியான்மரில் பௌத்தமத பெரும்பான்மையின ஆட்சி நடப்பதும், ரைகன் மாநிலத்தில் வாழும் குடியுரிமையற்ற ரோஹிங்ஞா சிறுபான்மையினர் மீது கொலைவெறி தாக்குதல் நடப்பதும் ஊரறிந்த, உலகறிந்த செய்தி. வாழும் உரிமை, அரசியல் உரிமை என எல்லாமும் மறுக்கப்பட்ட ரோஹிங்ஞாக்கள் சமகால உலகத்தின் கண்ணீர்த்துளிகள். அவர்களின் துயரத்தை, மதத்தின் பெயராலோ இனத்தின் பெயராலோ கொண்டாடுவது மனிதர்களால் முடியாது.

டான் பிரியசாத் கடந்த ஒரு சில வருடங்களில்தான் "பேமஸ்" ஆனவர். இன்றும் அவரை இலங்கையில் பலரிற்கு தெரியாது. சமூகவலைத்தள பாவனையாளர்கள், தீவிர அரசியல் அவதானிப்பில் இருப்பவர்களிடம் இவர் பரிச்சயம். முஸ்லிம்களிற்கு எதிரான அரசியலும், நடவடிக்கைகளும் கடந்த ஆறு வருடங்களில் தீவிரம் பெற்றுள்ளது. இந்த போக்கின் "லேற்றஸ்ட் ரென்ட்" டான் பிரியசாத்.

ஞானசார தேரர், பொதுபலசேன, ராவண பலசேன, சிங்கள ராவய போன்ற அமைப்புக்களின் தொடர்ச்சியான அமைப்புரீதியாக அல்லாமல் சமூகவலைத்தளங்களின் மூலமும், சிறிய குழுக்களின் மூலமும் டான் பிரியசாத் கொடிகட்டி பறக்கிறார். அவர் புகழ்விரும்பியாக இருக்க வேண்டும். அதுவே நாளடைவில் இந்த நிலைக்கு கொண்டு வந்து விட்டிருக்க வேண்டும்.

மோசமான இனவாத நடவடிக்கைகளிற்காக நீதிமன்றத்தால் ஏற்கனவே இவர் எச்சரிக்கப்பட்டவர். ஆனாலும் அவரது வேகம் குறையவில்லை. சுமணரத்ன தேரர், ஞானசார தேரர் போன்றவர்கள் சில மாதங்களிற்கு முன்னர் வரை மதம் கொண்டு சன்னதம் ஆடினார்கள். ஆடிக்கறந்தார்களா... பாடிக்கறந்தார்களா தெரியவில்லை. இப்பொழுது ஆட்கள் இருப்பதே தெரியாமல் இருக்கிறார்கள். ஆனால் டான் பிரியசாத் போன்றவர்கள் அடங்கவில்லை.

ஞானசாரரின் பின்னணியில் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச இருந்ததாக அப்பொழுது கூறப்பட்டது. விஜேதாச பதவியிலிருந்து சென்றதும், ஞானசாரரை காணவே முடியவில்லை. டான் பிரியசாந் போன்றவர்களின் பின்னணி என்னவென்பதை அரசாங்கம் முறையாக ஆய்வு செய்ய வேண்டும். இவர் தொடர்ந்தும் இனங்களிற்கிடையே குரோதம் வளர்ப்பதை அனுமதிக்ககூடாது. சமூகவலைத்தளங்களில் அவர ஒரு கதாநாயகனாக உருவெடுத்து வரும் அபாயம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

சமூகவலைத்தளங்களிற்குள் முதன்முதலாக நுழையத் தொடங்கும் ஒரு தொகுதியினர் டான் பிரியசாந்தின் வட்டத்திற்குள் அள்ளிச்செல்லப்படுவார்கள். சமூகநீதி, மனிதநேயம் பற்றிய புரிதல்களை அவர்கள் அறிந்துகொள்ளும் வாய்ப்பு இல்லாமல் போவதுடன், இனவாதத்தின் வேர்கள் நீண்டுகொண்டே செல்ல வழியேற்படுத்திவிடும்.

ஞானசார தேரரையே வாயை மூட வைத்த அரசாங்கத்தால் டான் பிரியசாந்தை ஏன் அடக்க முடியவில்லை. ●

# வன்னியாராச்சியை வைத்து நடக்கும் அரசியல்

மாகாணசபை தேர்தல்களை ஒத்திவைப்பதற்கு எந்தெந்த உத்திகளை பாவிக்கலாமென அரசாங்கம் புதிதுபுதிதாக சிந்திக்கிறது. அரசாங்கத்தின் முயற்சிக்கு நீதிமன்றம் குறுக்கே வந்தபோது, அதனுடனும் ஓடிப்பிடித்து விளையாட தொடங்கிவிட்டது. அரசாங்கத்தின் இப்போதைய நோக்கம் சட்டங்களிற்கு உட்பட்டு மாகாணசபை தேர்தல்களை ஒழுங்கமைப்பதல்ல. மாகாணசபை தேர்தல்களை பிற்போடுவதற்கு ஏற்றவிதத்தில் சட்டங்களை ஒழுங்கமைப்பதே.

இந்தவருடத்திற்குள் மூன்று மாகாணசபைகளின் பதவிக்காலம் முடிகிறது. கிழக்கு, வடமத்தி, சப்ரகமுவ மாகாணங்களின் ஆட்சியை நீடிக்கவே அரசாங்கம் இவ்வளவு பிரயத்தனப்படுகிறது.

கிழக்கு மாகாணசபை அரசாங்கத்திற்கு பிரச்சனையில்லை. எவ்வளவுதான் அரசாங்கம் வலுவாக இருந்தாலும், அங்கு தீர்மானிக்கும் சக்தி தமிழ், முஸ்லிம்கள்தான். கிழக்கு மாகாணசபையின் பெரும்பாலான மாகாணசபை உறுப்பினர்களிற்கு உடனடியாக தேர்தலிற்கு போகாமல், ஆட்சியை நீடிப்பதில் சந்தோசம்தான். அவர்கள் 20வது திருத்தத்தை ஆதரித்ததற்கு காரணம் அதுதான். கிழக்கை பற்றி அரசிற்கு கவலையில்லை.

வடமத்திய, சப்ரகமுவ மாகாணங்கள்தான் அரசாங்கத்திற்கு சிக்கலை கொடுக்கிறது. இரண்டு பிரதான கட்சிகளுமே தேர்தலை ஒத்திவைக்க விரும்புகின்றன. வடமத்திய மாகாணம் மைத்திரியின் மாகாணம். அங்கு சரிவை சந்திக்க மைத்திரி விரும்பவில்லை. அதேபோல, வீழ்ச்சியடைந்துள்ள ராஜபக்ச ரெஜிமென்றிற்கு சப்ரகமுவ மாகாண தேர்தலின் மூலம் புத்துணர்ச்சி கொடுக்க ரணில் விரும்பவில்லை.

வடமத்திய மாகாண நிலவரம் மைத்திரிக்கு திருப்தியாக இல்லை. கணிசமான உறுப்பினர்கள் மகிந்த ராஜபக்சவுடன் தொடர்பை பேணுகி றார்கள். தேர்தல் ஒன்று நடக்குமாக இருந்தால், சுதந்திரக்கட்சியின் வாக்குகள் இரண்டாக பிள வடையும். அதில் மைத்திரிக்கு எத்தனை வீதம் கிடைக்குமென்பதுதான் குழப்பத்தை ஏற்படுத்தி யுள்ளது. ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து மாகாணசபையை ஆட்சிசெய்வது மேலும் விமர் சனங்களை அதிகப்படுத்தும். அதனால் தேர்தலை தாமதப்படுத்தலாமென மைத்திரி நினைக்கிறார்.

சப்ரகமுவ மாகாணசபை தேர்தல் நடத்தினால் அதில் மஹிந்த அணிதான் வெற்றியடைய தெளிவான வாய்ப்புண்டு.வன்னியாராச்சிகுடும்பம் அங்கு மிக வலுவாக காலூன்றி விட்டது. அங்கு மஹிந்த அணியுடன் போட்டியிடுவதென்பது முயலுக்கும் ஆமைக்குமான போட்டியாக இருக்குமென்பது அரசுக்கு தெரியும்.

இதையெல்லாம் கணக்கு போட்டுத்தான், ஜனாதிபதி பதவிக்கு வந்ததும் மைத்திரி ஒரு வியூகம் வகுத்தார். பவித்ரா வன்னியாராச்சியை அரசுக்குள் கொண்டு வந்து, அமைச்சு பதவி கொடுப்பது. பவித்ராவுடன் நடந்த பேச்சுக்களும் சாதகமாக முடிய, சில நாட்களில் பதவியேற்பதற்கு தயாராக இருந்தார். அதற்குள் இரத்தினபுரியில் உள்ள தனது சொந்த இடத்திற்கு சென்றுவர திட்டமிட்டார்.

நகர்வுகளை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்த மஹிந்த ராஜபக்ச, பொன் முட்டையிடும் வாத்தை எப்படியாவது கைக்குள் வைத்திருக்க திட்டமிட்டார். ஒன்றிணைந்த எதிரணியின் வேறு உறுப்பினர்கள் மூலம் பெருமளவு மக்களை திரட்டி பவித்ராவின் வீட்டுவாசலில் குவித்துவிட்டார். அவர்கள் அரசுக்கெதிராக கோசமிட, மகிந்த அணியுடன் இருக்கும் பவித்ராவிற்கான வரவேற்பாக மாறிவிட்டது. அந்த கணத்திலிருந்து மஹிந்த அணியுடன் பவித்ரா தொடர்கிறார்.

இப்போதைய நிலையில் சப்ரகமுவ மாகாண தேர்தல் நடத்தி, மஹிந்த அணியை வெல்ல வைக்க ரணிலும் விரும்பவில்லை. பொதுவாக மஹிந்த ராஜபக்சவின் ஆதரவு 35 40 வீதம் வரை இருக்கலாமென கணிக்கப்படுகிறது. இந்த வரிசையில் மைத்திரி அணி மூன்றாமிடத்தில்தான் இருக்கும்.

இப்போதைய நிலையில் ஒரு தேர்தல் நடந்தால் அது அரசியலமைப்பு உருவாக்கத்தை முற்றாக சீர்குலைக்கும் என்பது அடுத்த கசப்பான யதார்த்தம். அரசியலமைப்பிற்கான சர்வஜன வாக்கெடுப்பிற்கு முன்னர் தேர்தல் நடந்து, அதில் மஹிந்த அணி வெற்றிபெற்றால், சர்வஜன வாக்கெடுப்பு தோல்வியில் முடியவே வாய்ப்புண்டு. மாகாணசபையில் எதிரணிக்கு கிடைக்கும் வெற்றி, படிப்படியான அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தவும் வாய்ப்புள்ளது. இந்த இடத்தில் மைத்திரியுடன், ரணிலும் ஒத்துப்போகிறார். புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்காகவேனும் மாகாணசபை தேர்தலை பின்தள்ள அரசு விரும்புகிறது.

ஆனால் தேர்தலை தள்ளிவைப்பது ஜனநாயக விரோதமனாதென்ற அபிப்பிராயம் வெகு ஜனங்களிற்குள் ஏற்படுவதால் எழும் அதிருப்தியை அரசு கணக்கில் எடுப்பதாக தெரியவில்லை. ●

# முஸ்லிம் கூட்டமைப்பு ➡ தமிழ் முதலமைச்சர்

## சட்டி சுட்டதடா... கை விட்டதடா கதையாகுமா?

நஜீம் ஏ. சம்சுடீன்

கிழக்கு மாகாசபைக்கு அடுத்தமுறை தேர்தல் நடக்கும்போது போட்டி பலமாக இருக்கப் போகிறது என்பது மட்டும் நிச்சயம். ஏற்கனவே பல்லின மக்கள் வாழும் கலவையான மாகாணம் அது. பல்லினத்திற்குள் பல கட்சிகள், கூட்டணிகள் தோற்றம் பெற... அடுத்த தேர்தல் அதிக சிக்கலான நிலைமையை தோற்றுவிக்கப் போகிறது.

இதுவரை கிழக்கில் இரண்டு விதமான போட்டிதான் இருந்தது. ஒன்று தமிழர்கள். மற்றது முஸ்லிம்கள். தமிழர்களிற்குள் பல அணிகள் இருக்கும். தமிழ் தேசிய கூட்டமைப்பு ஒரு பக்கம் நிற்க, அதற்கு போட்டியாக தேசிய கட்சிகளும், உதிரிகளும் களமிறங்குவார்கள். சின்ன சேதாரத்துடன் தமிழ் தேசிய கூட்டமைப்பு வெற்றியடைந்து விடும்.

முஸ்லிம் சமூத்திடமும் பல கட்சிகள் இருக்கும். ஆனால் எல்லா நதிகளும் கடலில் சங்கமிப்பதைபோல தேசிய கட்சி கூட்டணி வைத்து கொள்கிறார்கள். தேசிய வாக்காக மாறுமா என்பதை உறுதியாக சொல்ல முடியாது. அதற்காக அதை நிராகரிக்கவும் முடியாது.


முஸ்லிம் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டால் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், தூய முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன கூட்டணியில் இணைவது உறுதியென தெரிகிறது. நல்லாட்சிக்கான தேசிய முன்னணியை இணைத்துக்கொள்ள அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் விரும்புகிறது, கடுமையாக முயற்சிக்கிறது. தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலியும் இந்த கூட்டணிக்கு வர சம்மதித்துள்ளதாக தெரிகிறது. கிழக்கு அடையாளத்திற்கு வெளியில் பரந்துபட்ட முஸ்லிம் கூட்டமைப்பாக அடையாளப்படுத்த இது உதவுமென அவர்கள் கருதக்கூடும். தவிரவும், அசாத் சாலி கிழக்கின் ஒரு தொகுதி தீவிர வாக்காளர்களை கவரக்கூடும் என்றும் கணக்கிட்டிருக்கலாம்.

சமூகமட்டத்தில் வெளிப்படையான உரையாடலில் காங்கிரஸ் மீது விமர்சன உள்ளாகிறது. மக்கள் காங்கிரஸ் எம்மிடம் வரவில்லையென்ற விமர்சனம் உருவாகவில்லை. ரிசாட் பதியுதீன் நம்மிடம் வரவில்லையென்ற அபிப்பிராயம் கிழக்கில் பரவலாக உருவாக ஆரம்பிக்கிறது. One man show நடத்தினால் இப்படியான சிக்கல்களை சந்திக்க நேரிடும்.

இந்த இரண்டு அணிகளிற்கு அப்பால், தேசிய கட்சிகளுடன் இருக்கும் தலைவர்களும் ஒரு தொகுதி வாக்குகளை பிரித் தெடுப்பார்கள். குறிப்பாக காத்தான்குடியில் ஹிஸ்புல்லாஹ் தெளிவான ஆளுமையை செலுத்துவார்.

இந்த பிளவுகள் நிச்சயம் கிழக்கு மாகாண ஆட்சியிலும் எதிரொலிக்கும். கிழக்கில் தமிழ் முதலமைச்சர் தேவையென்ற கருத்து பரவலாக தமிழர்களிற்குள் உருவாகி வருகிறது. ஆனால் கிழக்கில் முஸ்லிம் முதலமைச்சர் ஒருவரை உருவாக்கும் புரிந்துணர்வின் அடிப்படையில்தான் தமிழ் தேசிய கூட்டமைப்பு செயற்படும் என்பது நிச்சயம். தமிழ் முதலமைச்சர் கருத்து தமிழ் தேசியக்கூட்டமைப்பிற்கு வரும் தேர்தலில் செயற்பட வேண்டுமென தமிழ் தேசிய கூட்டமைப்புடன் அவர்கள் கேட்ககூடும். ஆனால் இது தனியே கிழக்கு மாகாணசபை ஆட்சியுடன் தொடர்புடைய விடயமல்ல. இனப்பிரச்சனை தீர்வுடனும், தொடர்புடைய விவகாரம்.

வடக்கு கிழக்கு இணைப்பை தமிழர்கள் விரும்புகிறார்கள். அதை நோக்கி செயற்பட வேண்டிய தேவை கூட்டமைப்பிற்கு உள்ளது. முஸ்லிம் கூட்டணி தமிழ் தேசிய கூட்டமைப்புடன் நெருங்கி செல்ல விரும்பினால், வடக்கு கிழக்கு இணைப்பு தொடர்பான தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும். ரவூப் ஹக்கீமும் வடக்கு கிழக்கு இணைப்பை விரும்பவில்லை. அதாவுல்லாவும் விரும்பவில்லை. ஆனால் இரண்டிற்குமிடையில் நிறைய வேறுபாடு உள்ளது. இனப்பிரச்சனையை சிக்கலாக்காமல், தமிழர்களும் முஸ்லீம்களும் பொருத்தமான தீர்வொன்றை பெற்றுவிட வேண்டுமென்ற ராஜதந்திரமும், பொறுப்புணர்வும் ஹக்கீமிடம் உள்ளது. ஆனால் அதாவுல்லாஹ் பரந்த அரசியல் நோக்கத்துடன் செயற்படுவதாக தெரியவில்லை. அவர் ஒரு பிரதேச அரசியல்வாதியாக தன்னை உணர்கிறார். ரிசாட் பதியுதீனும் வடக்கு கிழக்கு இணைப்பிற்கு கடுமையான எதிர்ப்பாளராக காண்பித்தாலும், அண்மைக்காலத்தில் அதன் தீவிரத்தை கணிசமாக குறைத்து கொண்டு விட்டார்.







கட்சியொன்றின் பின்னணியிலேயே ஆட்சி அமைகிறது. முஸ்லிம் காங்கிரஸ் அதிக ஆசனங்களை வெல்வது, தேசிய கட்சியொன்றின் கூட்டணியே கிழக்கு ஆட்சியை கைப்பற்றுவது போன்றவற்றால் முஸ்லிம்களிற்குள் இருந்த பிளவும் பெரிய தாக்கத்தை செலுத்தவில்லை.

ஆனால் இம்முறை நிலைமை தலைகீழாக மாறும் வாய்ப்புள்ளது. முஸ்லிம் கூட்டமைப்பு உருவாக்கும் பணிகள் கிட்டத்துட்ட முடியும்தறுவாயில் உள்ளதாக தெரிகிறது. முஸ்லிம் கூட்டமைப்பு கிழக்கில் எப்படியான தாக்கத்தை ஏற்படுத்துமென்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஆனால் முஸ்லிம் காங்கிரஸ் தனது சமூகத்திற்குள் எதிர்கொண்ட அதுவரையான தேர்தல் சவால்களை விட, முஸ்லிம் கூட்டமைப்பின் சவால் அதிகபட்சமானதாக இருக்கவாய்ப்புள்ளது.


கிழக்கில் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் அண்மைக்கால செயற்பாடுகளின் பிரதிபலன், காங்கிரசில் இருந்து ஒதுக்கப்பட்ட முக்கியஸ்தர்களின் செல்வாக்கு, காங்கிரஸ் மீதான அதிருப்தி என்பவற்றின் அளவை அறிய இந்த தேர்தல் உதவும்.

முஸ்லிம் காங்கிரசில் இருந்து பிரமுகர்கள் சிலர் ஒதுங்கிச்சென்றதன் பின்னர் கட்சி மீதான அதிருப்தி சற்று அதிகரித்திருப்பதாக ஒரு தோற்றம் தெரிகிறது. சமூகவலைத்தளங்கள், இணையத்தளங்கள் ஏற்படுத்தும் தோற்றம் இது. நிஜ உலகமும், இணைய உலகமும் வேறுவேறானவை. இணைய அதிருப்தி போக்கு ஒன்று அதிகரித்துள்ளதென்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் அது "செல்ல" விமர்சனமாகவும் இருக்கலாம். ஏனெனில், காங்கிரசிற்கு மாற்றான தெளிவான தலைமை வெளியில் உருவாகவில்லையென்ற யதார்த்தத்தையும் புரிந்து கொள்ள வேண்டும். அப்படியொரு தலைமை உருவாகியிருந்தால், இப்பொழுது முஸ்லிம் கூட்டணி உருவாகியிருக்காது. ஆனால், காங்கிரசை கடுமையாக சோதிக்கும் வல்லமை வெளியில் உள்ள தலைமைகளிற்கு இருக்கலாம்.

முஸ்லிம் காங்கிரசின் மீதான அதிருப்தியை அறுவடை செய்து கொள்ளலாமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் நினைக்கிறது. ஆனால், மக்கள் காங்கிரசின் செயற்திறன் அதற்கு ஈடுகொடுக்கவில்லை. மக்கள் காங்கிரசின் தளம் வடக்கு, வடமேல் மாகாண முஸ்லிம் மக்கள். கிழக்கில் கடந்த சில வருடங்களாகத்தான் தீவிரமாக பணியாற்ற தொடங்கியிருக்கிறார்கள். ஆனால், கிழக்கில் வலுவான கட்சிக்கட்டமைப்பை அவர்கள் உருவாக்கவில்லை. முஸ்லிம் காங்கிரசிற்குவலுவான கட்சிக்கட்டமைப்பு உள்ளது. அதை பிரதிநிதித்துவப்படுத்த உள்ளூரில் பிரமுகர்கள் உள்ளனர். மக்கள் காங்கிரசில் அப்படியில்லை. ரிசாட் பதியுதீன், அமீர் அலிதான் காங்கிரசின் பிரதான அடையாளம். அவர்களிற்கு பின்னால் தெளிவான இரண்டாம் மட்ட ஆளுமைகள் உருவாக்கப்படவில்லை. இதனால் ரிசாட் பதியுதீன் கிழக்கிற்கு வராவிட்டால் அது விமர்சனத்திற்கு நெருக்கடி கொடுக்கும் அளவிற்கு வளராது. ஆனால் இந்த ஆட்சிக்காலத்தை போலவே அடுத்த ஆட்சிக்காலத்தையும் கிழக்கு முஸ்லிம் முதலமைச்சர்கள் நடத்துவார்கள் எனில், எதிர்காலத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு நெருக்கடியை சந்திக்கும். தமிழ் முதலமைச்சரை நோக்கி நகர வேண்டிய நிலைமை ஏற்படலாம்.

இவை எல்லாவற்றிற்கும் முன்னர், வரப்போகும் தேர்தல் முடிவுகள் எப்படி அமையும் என்பதை பொறுத்தே எதிர்காலம் அமையும். முஸ்லிம் காங்கிரஸ் தெளிவான பலத்தை பெற்றால் மாத்திரமே இவையெல்லாம் சாத்தியம். முஸ்லிம் காங்கிரசிற்கும், தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குமிடையில் உள்ள புரிந்துணர்வு அவ்வளவு விரைவில் கெட்டுப்போகாது. முஸ்லிம் சமூகத்திற்குள் காங்கிரஸ் தெளிவான பெரும்பான்மையை பெற்றிருக்கும் வரை தந்திரோபாயத்தின் நிமித்தமும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறவுகெடாது.

ஒருவேளை, முஸ்லிம் கூட்டமைப்பு கணிசமான வாக்கை பிரித்து, முஸ்லிம் பிரதிநிதித்துவத்திற்குள் பலமான சக்தியாக உருவெடுத்தால் சிக்கலான நிலைமை ஏற்படும். அது தமிழ் முதலமைச்சரை உருவாக்கலாம். இந்த சிக்கலை புரிந்துதான், தமிழ்தேசியகூட்டமைப்புடன் பேச்சுநடத்த முஸ்லிம் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது. விரைவில் இருதரப்பும் பேசுமென தெரிகிறது. கிழக்கு தேர்தலில் தீர்மானம்மிக்க முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை தாம் பெற்றால், தம்முடன் புரிந்துணர்வுடன்



அதாவுல்லா ஹ் போன்றவர்களை சமாளித்து, இனப்பிரச்சனை தீர்வில் விட்டுக்கொடுப்புடன் செயற்படும் உபாயத்தை முஸ்லிம் கூட்டணி உருவாக்காத வரை தமிழ் தேசிய கூட்டமைப்புடன் நெருங்கிச்செயற்படுவது கடினமே. இந்த கடின நிலையை நீடித்துக்கொண்டு, கிழக்கு மாகாணசபை தேர்தலில் பலமான நிலையை முஸ்லிம் கூட்டமைப்பு பெறுமாக இருந்தால், அது கிழக்கில் தமிழ் முதலமைச்சர் உருவாகும் நிலைமையை நோக்கி நகரலாம்.



# முதலிரவில் புலிவீரன் உருவாகிய கதை

## வன்னியை கலக்கிய நகைச்சுவை கதைகள்

மருசலீன்

என்னதான் நகைச்சுவை உணர்வு ஒன்றாக இருந்தாலும், நகைச்சுவைகள் பிரதேசத்து பிரதேசம், காலத்திற்கு காலம் வேறுபட்டுக் கொண்டேயிருக்கும். நகைச்சுவையின் ஸ்பெசலே இதுதான். நகைச்சுவைகள் சிரித்துவிட்டு கடப்பவை அல்ல. ஒரு பிரதேசத்தின் வாழ்வையும், காலத்தையும் கண்முன்னால் கொண்டு வருபவை.

வன்னி நகைச்சுவைகள் என்று தனி புத்தகமே தயாரிக்கலாம். விடுதலைப் புலிகளின் காலத்தில் நடந்த இப்படியான நகைச்சுவை சம்பவங்கள் இப்பொழுது நினைத்தாலும் விழுந்து விழுந்து சிரிக்க வைப்பவை. காலம் அந்த நகைச்சுவைகளை காவு கொண்டுடிருக்கும் இந்த காலத்தில், நினைவில் தோன்றும் சிலவற்றை இங்கு பதிவுசெய்கிறேன்.விடுதலைப் புலிகள் அமைப்பிற்குள்ளும், வெளியிலும், அமைப்புடன் தொடர்புபட்டுமிருந்த நகைச்சுவை சம்பவங்கள் இவை.

2001 அளவில் கிளிநொச்சியில் ஒரு சம்பவம் நடந்தது. புறநகர் கிராமமொன்று. அந்த பகுதியின் அரசியல்துறை பொறுப்பாளராக சிறீநாத் என்பர் இருந்தார். என்னதான் விடயங்கள் தெரிந்து, அறிவாளியாக இருந்தாலும், சில கேள்விகளிற்கு என்ன பதில் என சொல்ல தெரியாது. உதாரணத்திற்கு, சேலை தலைப்பை ஏன் வலது தோள்ப்பக்கம் போடுகிறோம் என்று கேட்டால் உடனடியாக பதில் சொல்ல முடியுமா?

அப்படியான சம்பவம்தான் இது. கிராமத்தில் நடந்த நிகழ்வொன்றில் தேசியக்கொடி ஏற்றப்பட்டது. பின்னர், மக்களிற்கு அரசியல் விழிப்புணர்வு கருத்தரங்கு நடத்தப்பட்டது. பின்னர் மக்களின் கேள்வி நேரம். பலரும் அரசியல் கேள்விகள் கேட்டனர். ஒரு வயதானவர் மட்டும், ஏதோ ஒரு பலத்த சந்தேகத்துடன் நீண்டநேரமாக இருந்தார்.

கூட்டம் முடிவதற்கு கிட்டவாக தயங்கி தயங்கி எழுந்து கேட்டார் "தம்பி ஏன் நிகழ்வுகளில் தேசியக்கொடி ஏற்றப் படுகிறது?"

சிறிநாத்திற்கு தலைக்குள் கிளைமோர் வெடித்திருக்க வேண்டும். என்ன பதில் சொல்வதென தெரியாமல் சில நொடி திகைத்து விட்டு சொன்னார் "ஐயா... அது இயக்க இரகசியம். வெளியில சொல்ல கூடாது". இயக்க இரகசியம் என்றால், பதில் கேள்வி வராது... பதில் சொல்லாமல் தப்பிக்கலாமென சிறிநாத்திற்கு தெரிந்திருந்தது!

இது சற்று வித்தியாசமான சம்பவம். அந்த உலகம் தனித்து, தனித்துவமாக இருந்ததற்கு சாட்சியாக ஒரு சம்பவம் உள்ளது. இதுவும் கிளிநொச்சியில்தான் நடந்தது.

இன்றுவரை கிளிநொச்சியில் நல்ல தியேட்டர் கிடையாது. 2000 இன் முதல் சில வருடங்களில் சொல்லத் தேவையில்லை. அப்போது முப்பது, நாற்பது அடி கொட்டகைக்குள் ரிவியில் அல்லது சிறிய வெள்ளைத்துணி கட்டி புறஜெக்டரில் படம் திரையிடப்படும். கொட்டகைக்குள் வெளிச்சம் வராமல் மூடிக்கட்டியிருப்பார்கள்.

படம் ஆரம்பிப்பதற்கு இருபது நிமிடங்கள் வரை பாடல்கள், இசை நிகழ்ச்சிகள் ஒளிபரப்புவார்கள். ஆட்கள் சேரும் வரை நடக்கும். இப்படித்தான் ஒருமுறை உன்னி கிருஸ்ணனின் இசைநிகழ்ச்சி ஒன்றை ஒளிபரப்பினார்கள். உன்னி கிருஸ்ணன் மேடையில் "என்னவளே அடி என்னவளே" பாடலை பாடிக் கொண்டிருந்தார். ஒரு சமயத்தில் ஒரு கையால் காதை பொத்திக்கொண்டு உச்சஸ்தாயிக்கு போனார்.

தியேட்டரில் இருந்த ஒருவர் பெரிய குரலில் "ச்சாய்... சனியன் சாந்தன்ர எடுவை எடுக்குது" என்றார்.

அப்போது புரட்சிப்பாடல்கள் பாடி சாந்தன் மிகப்பிரபலம்.இசைக்கச்சேரிகளில் சாந்தனின் ட்ரேட்மார்க் கையால் காதைப்பொத்துவது. முன்னரெல்லாம் தென்னிந்திய பாடகர்களின் இசை நிகழ்ச்சி வீடியோக்கள் நமக்கு பார்க்க கிடைப்பதில்லை. கையால் காதை பொத்துவது சாந்தன் அறிமுகப்படுத்தியதென அவர் நினைத்திருக்க வேண்டும்.

இன்னொரு பகிடி ஒரு போராளி சம்மந்தப்பட்டது. கொஞ்சம் ஏடாகூடம்தான். ஆனால் ரசிக்கலாம்.

சமாதானகாலம். விடுதலைப்புலிகள் அமைப்பின் போராளிகள் பலர் திருமணம் செய்தனர். போராளியொருவருக்கும் திருமணம் நடந்தது. அவரது நண்பர்கள் முகாமில் இருந்து வந்திருந்தனர். பகல் முழுவதும் பாட்டும், பகிடியுமாக உற்சாகமாக கழிந்தது. மாலையில் போராளிகள் முகாமிற்கு செல்ல தொடங்கினர்.

ஆனால் அவரது நெருக்கமான நண்பர்கள் சிலர் வீட்டிலேயே நின்றனர். வீட்டுக்கு முன்னால் கதிரைகள் போடப்பட்டிருந்தன. திருமணமான போராளியும் அவர்களுடன் உட்கார்ந்து கதைத்து கொண்டிருந்தார். திருமணம் முடித்தவர், எவ்வளவு நேரத்துக்குத்தான் நண்பர்களுடன் உட்கார்ந்து கதைத்து கொண்டிருப்பது? முதல் நாளிலேயே குடும்பத்திற்குள் வில்லங்கம் வராதா?

தனக்கு நித்திரை வருவதாகவும்,போராளிகளை முகாமிற்கு செல்லுமாறும் பட்டும் படாமலும் அவர் சொல்லிக்கொண்டிருந்தார். ஆனால் நண்பர்கள் கேட்பதாக இல்லை. அவர்களிற்கு ஏதோ நோக்கம் இருக்கிறது என்பது மட்டும் புரிந்தது. ஏனெனில், திருமணமான போராளி கவனிக்காத சமயங்களில் ஏதோ சைகைகளில் இருந்தனர். இரண்டு பெரிய பொக்ஸ் வைத்து ஓரளவான சத்தத்தில் பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது. சினிமாப்பாடல்கள்தான். ஆனால் காதல், திருமண பாடல்கள்.

புதுமாப்பிள்ளை இருந்து இருந்து பார்த்தார்... நண்பர்கள் கிளம்புவதாக தெரியவில்லை. ஒரு கட்டத்தில் நேராகவே சொன்னார் "எனக்கு நல்ல நித்திரை வருது. நான் படுக்க போறன். நீங்கள் இருந்திட்டு போங்கோ" என. நண்பரை கொஞ்சம் கலாய்த்து, முதலிரவுக்கு அனுப்பிவைத்தனர் போராளிகள்.

நண்பர் வீட்டுக்குள் போய் உறவுகளுடனும் கதைத்துவிட்டு, புதுமண தம்பதிகள் அறைக்குள் சயனத்திற்கு போய் விட்டனர். அவர்கள் அறைக்கதவை தாளிட்டு இரண்டு மூன்று நிமிடம் இருக்கும்...

பொக்ஸில் அதிக சத்தத்தில் ஒரு பாடல் ஒலிக்கத் தொடங்கியது. இதுதான் அந்தப்பாடல் "புலிவீரன் புலிவீரன் உருவாகுகின்றான்"!

புதுமாப்பிள்ளைக்கு வெட்கம் வந்திருக்க வேண்டும். அறைக்கதவை திறந்து கொண்டு வந்தார். தலைக்கு மேலே கையை கூப்பி "தயவுசெய்து வெளிக்கிடுங்கோடா" என்றபடி விழுந்துவிழுந்து சிரித்தார்.

1983இல் இந்தியாவில் புலிகளின் முதலாவது பயிற்சி முகாம் நடந்தது. இந்திய இராணுவம் இயக்கங்களிற்கு இந்த பயிற்சியை ஒழுங்கு செய்திருந்தது. பின்னாளில் பேசப்பட்ட புலிகளின் தளபதிகள் பெரும்பாலானவர்கள் இங்குதான் பயிற்சியெடுத்தனர். விக்டர், பொன்னம்மான், புலேந்திரன், பொட்டம்மான், ராதா, கணேஸ் என பலர். இவர்களிற்கான சமையல் பொறுப்பு கிட்டுவிடம். யார் முகாமில் சமைப்பதென்ற கேள்வியெழுந்த போது கிட்டுவே அதை பொறுப்பேற்றார். கிட்டுவும் இன்னும் ஒன்றோ இரண்டு பேர்தான் சமையல். சமையலிற்கு ஆளணி போதாது.

பயிற்சி முகாமில் தவறுகள் விடுபவர்கள் ஒருநாள் சமையலிற்கு உதவி செய்ய வேண்டுமென்ற விதியிருந்தது. போராளிகளும் கவனமாக இருந்து தவறுகளை தவிர்த்து கொண்டனர். இதனால் சமையலிற்கு ஆள் இல்லை.

கிட்டு ஒரு ஐடியா போட்டார்.

பயிற்சியின் இடையில் சாப்பாட்டு நேரம் மிக குறுகியது. அவசர அவசரமாக ஓடி வந்து சாப்பிட்டுவிட்டு ஓடிச்செல்வார்கள். அவர்கள் வரும்போது சாப்பாடு தட்டுகளில் போடப்பட்டு வைக்கப்பட்டிருக்கும். சாப்பாட்டு தட்டுகளில் ஒவ்வொருவருக்குமுரிய இலக்கம் இருக்கும். இலக்கம் மாறி தட்டுக்களை எடுத்து சாப்பிட்டாலும் தண்டனை.

விக்டருக்கு 6ம் இலக்கம். புலேந்திரனுக்கு 9ம் இலக்கம். இலக்கங்கள் தலைகீழாக தெரியும் விதமாக இந்த இரண்டு தட்டுக்களையும் மாற்றி வைத்துவிடுவார் கிட்டு. பின்னர், அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது, "எல்லோரும் இலக்கம் சரியாக எடுத்துள்ளார்களா பார்ப்போம்" என பரிசோதித்து, இருவரையும் சமையலுக்கு அழைத்து விடுவார்!

எவ்வளவுதான் அவதானமாக இருந்தாலும், இருவரும் அடிக்கடி சமையலுக்கு சென்று கொண்டிருந்தனர். ●





▶ வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தின் 2017ம் வருடத்திற்கான பொலிஸ் பரிசோதனை பொலிஸ் நிலைய வளாகத்தில் இடம்பெற்றது. பொலிஸ் பரிசோதனை மற்றும் பொலிஸ் வாகனப் பரிசோதனை வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றதுடன், இந்நிகழ்வில் வாழைச்சேனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தம்மிக தயானந்த கலந்து கொண்டார்.

# என்னை சுலபமாக ஏமாற்றலாம்!

## ஆனந்தசங்கரி தனது அனுபவங்களை எழுதுகிறார்



சொல்ல மறந்த கதைகள் 07

எனது அப்பா ஆசிரியராக இருந்தவர். பின்னர், புத்தூர் சோமஸ்கந்தா பாட சாலை அதிபராக இருந்தார். இந்தகாலத்தில் பாடசாலையை முன்னேற்ற வேண்டுமென தனது பொறுப்பை இன்னொருவரிடம் கையளித்தவர். அவர் அச்சுவேலி. அம்மா பருத்தித்துறை. நான் பிறந்தது பருத்தித்து றையில். சைவப்பிரகாச வித்தியாலயத்தில் ஆரம்ப கல்வியை கற்றேன்.

ஒரு சாதாரண குடும்பம். அப்பாவின் உறவுகளிற்கு அதிகமாக உதவி செய்ய வேண்டியிருந்ததால், எங்கள் குடும்பம் சிக்கனமாக இருந்தது. சாப்பாட்டிற்கு குறையில்லாமல் வாழ்ந்தோம். இரண்டாம் உலகப்போர் காலத்தில்தான் கடுமையான நெருக்கடி ஏற்பட்டது. அப்பொழுது கடுமையான உணவுத்தட்டுப்பாடு ஏற்பட்டது. கப்பலில் பொருட்கள் இலங்கைக்கு வராததால் இந்த பஞ்சம் ஏற்பட்டது. கூப்பனில் கொஞ்ச அரிசி கொடுப்பார்கள். அது போதாது. எட்டு, பத்து வயதுகளில் அப்போது நடந்தவை இன்றும் நன்றாக நினைவிலுள்ளது. கொஞ்சம் சோறும், மிச்சம் மரவள்ளி கிழங்கு, வத்தாளம் கிழங்கும்தான் சாப்பிட்டு வாழ்ந்தோம்.

எந்த நேரமும் குண்டு விழலாம் என்ற நிலைமை. யுத்தத்திற்கு தயாராக ஆபிரிக்க இராணுவம் பலாலியில் முகாம் அமைத்து தங்கியிருந்தனர். மொத்தமாக பத்தாயிரத்திற்கும் அதிகமானவர்கள் இலங்கையில் தங்கியிருந்தனர்.

பஞ்சத்தையடுத்து ஆங்கிலேயர்கள் ஒரு பிரசாரம் செய்தனர். எங்கெல்லாம் எழுத இடம் கிடைக்கிறதோ அங்கெல்லாம் அதிக உணவு பயிரிடுக என ஆங்கிலத்தில் எழுதினார்கள். இதை பார்த்து வீடுகளில் கிடைக்கும் இடங்களில் எல்லாம் மரவள்ளி, வத்தாளை, தக்காளி என பலதையும் பயிரிட்டார்கள்.

முக்கியமான இடங்களில் அகழி வெட்டினார்கள். V,W வடிவத்தில் அகழி இருக்கும். அச்சுவேலி நகரம், யாழ்ப்பாண சந்தை, கிளிநொச்சி சந்தைகளில் இது அமைக்கப்பட்டிருந்தது நினைவில் இருக்கிறது. குண்டு தாக்குதலில் இருந்து தப்பிக்க இந்த ஏற்பாடு.

விமானம் குண்டு போடுவதற்கு முன்னர் எச்சரிக்கை ஒலியெழுப்ப ஒரு ஏற்பாடு இருந்தது. அப்பொழுது நான் அச்சுவேலி அமெரிக்கன் மிசன் கல்லூரியில் (கிறிஸ்தவ கல்லூரி) படித்துக்கொண்டிருந்தேன். அப்பாவும் அங்குதான் படிப்பித்தார்.

வான் தாக்குதலில் இருந்து தப்பும் எச்சரிக்கை கொடுக்க ஒரு படையணி உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு பாட சாலையிலும் ஒரு அதிகாரி இருந்தார். உயர்தர மாணவர்கள்தான் தொண்டர்கள். ஒவ்வொரு பாடசாலைகளிலும் வாளி, சவள் வழங்கப்பட்டிருந்தது. வான் தாக்குதல் ஒத்திகைகள் பாடசாலைகளில் நடந்தது.

திடீரென ஒருநாள் ஒத்திகைக்கு அரசாங்கம் அறிவிக்கும். அந்த நாளில் எச்சரிக்கை அதிகாரிகள் குறிப்பிட்ட நேரத்தில் விசில் அடிப்பார்கள். வகுப்பில் இருப்பவர்கள் காதைப் பொத்திக்கொண்டு, முழங்காலில் உட்கார்ந்து மேசைக்கு கீழே போய் விட வேண்டும். வகுப்பறைக்கு வெளியில் நிற்பவர்கள் ஏதாவது குழிக்குள் இறங்கிவிட வேண்டும். அப்பொழுது மாணவர்கள் எல்லோரும் கழுத்தில் ஒரு நூல் கட்டி முன்பக்கமாக நெஞ்சளவில் தடியொன்றை குறுக்காக கட்டியிருப்போம். தடியின் இரு முனையிலும் சிறிய குஞ் சத்தில் பஞ்சு. விசில் அடித்ததும், தடியை வாயில் கௌவிக்கொண்டு, பஞ்சை காதில் அடைந்து விடுவோம்.

எச்சரிக்கை முடிந்து விசில் அடித்ததும், ஏற்கனவே அமைக்கப்பட்ட சிறிய கொட்டகை ஒன்றை எரிப்பார்கள். அது குண்டு விழுந்த இடமாம். உடனே உயர்தர வகுப்பு மாணவ தொண்டர்கள் ஓடிவந்து தண்ணீர் ஊற்றி, சவளால் மண் வீசி நெருப்பை அணைக்க வேண்டும்.

அந்த காலத்தில் வண்டில்களில் கொண்டு திரிந்துதான் மண்ணெண்ணெய் விற்பார்கள். ஒவ்வொரு சந்தியில் நின்றும், ஒரு குழாயின் மூலம் அறிவிப்பார்கள். அது தூரத்திற்கும் கேட்கும்.

அரை வயிற்று சாப்பாட்டுடன்தான் உலகப்போர் காலத்தை கழித்தோம். கூட்டுறவு சங்க முறை அப்பொழுதுதான் வந்தது. அச்சுவேலி கூட்டுறவு சங்கத்தின் முதலாவது உறுப்பினர் அப்பாதான். கூட்டுறவு சங்க தலைவராகவும் இருந்தார்.

**மக்கள் பிரதிநிதிகள், பொதுவாழ்வில் உள்ளவர்களின் அறியப்படாத பக்கங்களை புரட்டும் பகுதி இது. வாழ்வில் நடந்த, அடிக்கடி நினைக்கும், மெய்சிலிர்க்கும் நிகழ்வுகளை இந்த பகுதியில் ஒவ்வொரு வாரமும் உங்களுடன் பகிர்ந்து கொள்ளவுள்ளார்கள் அவர்கள். மனதின் மூலைக்குள் மறைத்து வைத்திருந்த சம்பவங்களை முதன்முறையாக அவர்கள் அச்சில் பேசவுள்ளனர். நீங்கள் இதுவரை கேட்காத கதைகள் இவை.**

அப்பொழுது 55 புள்ளிகளையுடைய கூப்பன் வழங்கப்பட்டு, அதற்கு பொருள் வழங்கப்பட்டது.

உலகமகா யுத்த காலத்தில்தான் பாண் யாழ்ப்பாணத்திற்கு வந்தது. அதற்கு முன் பாண் என்றாலே யாருக்கும் தெரியாது. அரசாங்கம் தரும் உணவு போதாமல் இருந்ததால், பேக்கரிகளில் வரிசையில் நின்று பாண் வாங்கி சாப்பிட்டு பழகினோம்.

அப்பொழுது கொமியூனிற்றி சென்ரர்கள்தான் இருந்தன. அங்கு அரசாங்கம் வானொலி பெட்டி கொடுத் திருந்தது. செய்தி கேட்க அங்குதான் போக வேண்டும். மகாத்மா காந்தி இறந்ததையும் இப்படியொரு சந்தர்ப்பத்தில்தான் கேட்டேன்.

பதினாறு, பதினேழு வயதுகளில் இருந்தே சமூகத்தொண்டனாக செயற் பட தொடங்கிவிட்டேன். ஏதாவது அனர்த்தங்கள் நடந்தால் அந்த இடத்தில் நிற்பேன். பாடசாலை நாட்களிலேயே என்னை கொம்யூனிஸ்ற் என அழைப் பார்கள். சமூக வேறுபாடுகள் பார்க் காதவன், சமூக தொண்டன் என்ற அடிப்படையிலேயே அப்படி அழைத் தார்கள். கொம்யூனிஸம் பற்றிய அப்போதைய புரிதல் அப்படித்தான் இருந்தது. இப்போதிருந்த ஒரே இடதுசாரி கட்சி லங்கா சமசமாஜ கட்சி. மற்றைய

இடதுசாரிகள் கட்சிகள் எல்லாம் சுதந்திரத்தின் பின்னர்தான் உருவாகின.

சிறுவயதில் இருந்தே காந்தி ஜெயந்தி கொண்டாடும் வழக்கம் எனக்கு ஏற்பட்டிருந்தது. 1950களில் இருந்து நண்பர்கள் சிலருடன் இணைந்து ஊரில் பணம் திரட்டி காந்தி ஜெயந்தி கொண்டாடுவோம். அப்போது இந்திய தூதரகத்தில் படப்பிரிவு இருந்தது. முன்னரே தகவல் கொடுத்தால், அவர்கள் காந்தியின் வரலாறு பற்றிய படம் திரையிடுவார்கள். இப்போது இந்திய தூதராக இருந்தவர் பி.வி.கிரி. பின்னர் இந்திய ஜனாதிபதியாக இருந்தவர்.

ஒருநாள் நண்பர்களுடன் தியேட்டருக்கு படம் பார்க்க சென்றிருந்தேன். ஒரு சிறுவன் பிச்சையெடுத்து கொண்டிருந்தான். அவனை கூப்பிட்டு விசாரித்தேன். பெற்றோர் இல்லையென்றான். எனது வீட்டுக்கு கூட்டிப்போனேன். அம்மா என்னுடன் சண்டைபிடித்தார். அவனை சலூனிற்கு கொண்டு சென்று முடிவெட்டி வீட்டில் தங்க வைத்தேன். மூன்றாம் அழுதான். விசாரித்தால் வீட்டுக்கு போகப் போவதாக சொன்னான். அவன் என்னை ஏமாற்றி விட்டான். எனது வாழ்க்கையில் ஏமாற்றுக்கள் நிறையவுள்ளன. என்னை சுலபமாக ஏமாற்றலாம். எதையும் மறைக்கமாட்டேன், எல்லோரையும்

**அரசியல் ஆர்வம் காரணமாக அனேகமான கட்சி கூட்டங்களிற்கு செல்வேன். சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஆரம்ப கூட்டத்திற்கும் சென்றிருந்தேன். கட்சியின் முதல் செயலாளராக ஒரு தமிழர் தேர்வான நினைவு. நான் அப்போது நல்ல பேச்சாளர். அதனாலோ என்னவோ 1959 ஆம் ஆண்டு கொழும்பு நகரசபை தேர்தலில் என்னையும் லங்கா சமசமாஜ கட்சி களமிறக்கியது.**

நம்புவேன். எனது அலுவலகத்திலும் எதுவும் பூட்டி வைக்கப்படுவதில்லை.

பல்கலைகழகத்திற்கு போக வேண்டும், உயர்கல்வி கற்க வேண்டுமென்ற விருப்பமிருந்தது. அதற்கு போதிய வசதி கிடைக்கவில்லை. நாங்கள் பிள்ளைகள் ஏழு பேர். அதிபராகஇருந்த அப்பாவின் சம்பளம் முன்னூறு ருபாவோ என்னவோதான். எஸ்.எஸ்.ஸியுடன் படிப்பை தொடர முடியாமல் போய்விட்டது.

பின்னர் ஜா எலவில் ஆசிரியராக நியமனமானேன். ஜோசெப் மைக்கல் பெரேரா உள்ளிட்ட என்னுடைய மூன்று மாணவர்கள் பின்னாளில் பாராளுமன்றம் சென்றனர். ஜா எலவில் இருந்தபோது லங்கா சமசமாஜ கட்சி கூட்டங்களிற்கு தொடர்ந்து செல்வேன். அங்குதான் அரசியல் பரிச்சயம் ஏற்பட்டது. பீற்றர் கெனமன், கொல்வின் ஆர் டி சில்வா, என்.எம்.பெரேரா போன்றவர்களுடன் அறிமுகம் ஏற்பட்டது.

1952இல் அரிசியின் விலை 25 சதம். இந்த விலையை அதிகரிக்க முயன்றபோது இலங்கை ம்முழுவதும் வேலைநிறுத்தம் நடந்தது. சமசமாஜ கட்சி ஒழுங்கமைத்தது. இலங்கையில் நடந்த முதலாவது பெரிய வேலைநிறுத்தமாக இதுதான் இருந்திருக்கும். இதற்கான ஏற்பாடுகளில் நானும் ஈடுபட்டேன். வேலைநிறுத்தம் சில இடங்களில் வன்முறையாகி மூன்றோ, நான்கு பேர் மரணமாகினார்கள். அப்போது டட்லி சேனநாயக்கா பிரதமராக இருந்தார். இந்த சம்பவத்திற்கு பொறுப்பேற்று உடனடியாக பதவி விலகினார்.

டி.எஸ்.சேனநாயக்கா இறந்து விட்டார். அப்போது கவர்னர் ஜெனராக இருந்தவர் சோல்பரி. அவர் இலங்கைக்கு வந்து, அமைச்சர்களிடம் கையெழுத்து வாங்கி டட்லியை பிரதமராக்கினார். பதவியேற்ற சில நாளிலேயே அரசாங்கத்தை கலைத்தார். மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத அரசாங்கம் தேவையில்லையென்பதால் அப்படி செய்தார். இலங்கை அரசியலில் அப்படியான இன்னொருவரை காட்டலாமெனில், அது நான்தான்!

கையில் தந்த எம்.பி பதவியை வேண்டாம் என நிராகரித்தவன் நான்!

அரசியல் ஆர்வம் காரணமாக அனேகமான கட்சி கூட்டங்களிற்கு



செல்வேன். சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஆரம்ப கூட்டத்திற்கும் சென்றிருந்தேன். கட்சியின் முதல் செயலாளராக ஒரு தமிழர் தேர்வான நினைவு.

நான் அப்போது நல்ல பேச்சாளர். அதனாலோ என்னவோ 1959 ஆம் ஆண்டு கொழும்பு நகரசபை தேர்தலில் என்னையும் லங்கா சமசமாஜ கட்சி களமிறக்கியது. ஏற்கனவே நான்கு, ஐந்து வருட அரசியல் அனுபவமிருந்தாலும் இதுதான் எனது முதல் தேர்தல். ஐக்கிய தேசியக்கட்சியின் சுகததாசவும் (பின்னர் விளையாட்டு அமைச்சராக இருந்தவர்) போட்டியிட்டார். கொச்சிக்கடைதான் எனக்கு ஒதுக்கப்பட்டது. அதை விட்டுத் தருமாறு பிரிற்றோ என்பவர் வந்து காலில் விழுந்து கெஞ்சினார். இந்த தொகுதியில் போட்டியிட்டால் மாத்திரமே தனக்கு எதிர்காலமுள்ளதாக அழுதார். நான் விட்டுக்கொடுத்தேன். பின்னர் கொட்டஹேனா தெற்கில் போட்டியிட்டேன். கொச்சிக்கடையில் போட்டியிட்டிருந்தால் நான் வென்றிருக்கலாம். கொட்டஹேனாவில் வெல்ல முடியவில்லை. பிரிற்றோ வென்றார்.

1960ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் வந்தது. சமசமாஜ கட்சியின் யாழ்ப்பாண கிளை என்னை அங்கு வருமாறு கட்சி தலைமை மூலம் அழைத்தது. தேர்தல் வேட்பாளர் பெயர் பட்டியல் வழங்கும் நேரம் முடியும் தருவாயில்தான் யாழ்ப்பாணம் வந்தேன். எனக்கு கிளிநொச்சி தொகுதி தரப்பட்டிருந்தது. எழுதுமட்டுவாளிற்கு அப்பால் கிளிநொச்சி தொகுதி. சிபாரிசு செய்ய இரண்டு கையெழுத்து தேவை. எழுதுமட்டுவாளில் ஒருவரை மறித்தேன். அவரிடம் விடயத்தை சொல்ல, கையெழுத்து வைத்தார். அவரது பெயர் ஆழ்வார் ஆறுமுகம். புதுக்காட்டு சந்தியில் இன்னொருவரை மறித்து கையெழுத்து வாங்கினேன். அடுத்தநாள், காரொன்றை வாடகைக்கு எடுத்து தேர்தல் பிரசாரங்களை தொடங்கினேன்.

எட்டில் ஒரு வீத வாக்கெடுத்தால்தான் கட்டுப்பணம் கிடைக்கும். எனக்கு ஒரு வாக்கினால் கட்டுப்பணம் கிடைக்கவில்லை. அதிக வேட்பாளர்கள் போட்டியிட்டதால் இரண்டாயிரத்து சொச்சம் வாக்கெடுத்தவர் எம்.பியானார். ஆயிரத்து சொச்சம் எடுத்த நான் கட்டுக்காசை இழந்தேன். மறுநாள் ரைம்ஸ் பத்திரிகையில், ஒரு வாக்கால் கட்டுக்காசை இழந்த ஆனந்தசங்கரி என்ற செய்தி வந்திருந்தது. பின்னர் மூன்று மாதத்தில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் வந்தது. அதிலும் தோல்விதான். ஆனால் வாக்கு அதிகரித்திருந்தது.

பின்னர் உள்ளூராட்சி தேர்தல் வந்தது. கிளிநொச்சியில் எமது கட்சி வெற்றியடைந்தது. நான் கரைச்சி தவிசாளர் ஆகினேன். அங்கு எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அனைத்தையும் நிறைவேற்றினோம். கிளிநொச்சியை நகரசபையாக்க வேண்டுமென அப்பொழுது தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தினர். பாராளுமன்றத்திலும் அந்த தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டு விட்டது. பரந்தனில் இருந்து முறிகண்டி வரையும் வீதியின் இரண்டு பக்கமும் நூறு மீற்றர் அகலத்தில் உள்ளவர்களை கணக்கெடுத்தால் தொளாயிரம் பேர் கூட வரமாட்டார்கள். எப்படி நகரசபையாக்குவதென்பது எனது நிலைப்பாடு. கரைச்சியில் வாக்கெடுப்பு நடந்தபோது நகரசபையாக்க ஆதரவ்ாக 14 வாக்கும், எதிராக 5 வாக்கும் கிடைத்தது. பின்னர், ஆதரவாக வாக்களித்தவர்களிற்கு விளக்கம் சொன்னென். மறுவாரம் நடந்த வாக்களிப்பில் ஏகமனதாக திட்டம் எதிர்க்கப்பட்டது.

அப்போது அமைச்சராக இருந்த திருச்செல்வம் இதில் தலையிட்டு, இரண்டு பக்கத்தையும் தன்னிடம் வருமாறு அழைத்தார். கிளிநொச்சியின் மக்கள் தொகை குறைவு. ஆனால் பரந்த பிரதேசம். தியேட்டர், சந்தை உள்ளிட்ட பல சிறிய நிலமான புதிய நகரசபைக்குள் சென்றுவிட, ஏனைய பகுதிகளுக்கு வருமானம் கிட்டாத நிலையேற்படும். ஆனால் அவர்கள் இதை பொருட்படுத்தவில்லை. அப்போது நான் குறினேன் ஒரு வேலை செயய்லாம். நான் செய்யப்போவதில்லை. தண்டவாளத்தை கடந்தால் கரைச்சி பிரதேசசபை. சந்தை,

**எட்டில் ஒரு வீத வாக்கெடுத்தால்தான் கட்டுப்பணம் கிடைக்கும். எனக்கு ஒரு வாக்கினால் கட்டுப்பணம் கிடைக்க வில்லை. அதிக வேட்பாளர்கள் போட்டி யிட்டதால் இரண்டாயிரத்து சொச்சம் வாக்கெடுத்தவர் எம்.பியானார். நான் கட்டுக்காசை இழந்தேன். மறுநாள் ரைம்ஸ் பத்திரிகையில், ஒரு வாக்கால் கட்டுக்காசை இழந்த ஆனந்தசங்கரி என்ற செய்தி வந்திருந்தது.**

தியேட்டர் என எல்லாவற்றையும் கரைச்சி எல்லைக்கு மாற்றுவேன். ஆனால் நான் அப்படி செய்யப்போவதில்லை என்றேன். சிரித்துவிட்டு, நான் சொல்வது சரியென திருச்செல்வம் சொன்னார். திருச்செல்வம் கிளிநொச்சி பக்கமே வரக்கூடாதென பண்டிதர் க.பொ.இரத்தினம் சொன்னார்.

பின்னர் கரைச்சிக்கும், கிளிநொச்சி நகரசபைக்கும் தலைவராக இருந்த காட்டுகிறேன் என சவால் விட்டு, தேர்தலில் இறங்கினேன். பிரதேசசபைக்குள் நகரசபை அமைந்திருந்தது. அந்த தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றேன். ஆனால் பின்னர் விடயம் நீதிமன்றம் போனது. அதில் எனக்கு பதகமான தீர்ப்பு வெளியானது. ஆனந்தசங்கரி எதிர் முருகேசு என்ற வழக்கை இப்போழும் படிக்கலாம்.

இந்தகாலப்பகுதியில் தந்தை செல்வாவும், ஜீ.ஜீ. பொன்னம்பலமும் இணைந்து கூட்டணியொன்றை ஆரம்பித்தனர். பின்னர் 1970 பாராளுமன்ற தேர்தல் நடந்தது. எங்களிற்கான அப்படியொரு ஆதரவு இருக்குமென நினைக்கவில்லை. இதில் தமிழ் கட்சிகளிற்கிடையில் ஒரு இணக்கப்பாடு எட்டியது. நான் கொங்கிரஸ் சார்பில் களமிறங்கினேன். **(தொடரும்)**



# மஹிந்த வடக்கில் உருவாக்கும் ‘சிலிப்பர் செல்கள்’!

## கருப்பாகுமா ஈ.பி.டி.பீ?... அதை மீறி வாக்காகுமா?

**தமிழ் கட்சிகளிற்குள் ஈ.பி.டி.பி தொடர்பாக மஹிந்த ராஜபக்சவிற்கு எப்பொழுதும் ஒரு “ஷொப்ற் கோனர்” இருந்து வருகிறது. மஹிந்த ஜனாதிபதியாக வர முன்னரே அவருடன் ஈ.பி.டி.பி நெருக்கமாக இருந்ததே அதற்கு காரணம்.**

ஸ்ரான்லி பிருந்துவி

மஹிந்த ராஜபக்ச இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

மெதமுதலவிலோ, விஜேராம மாவத்தையிலோ உட்கார்ந்து அரசாங்கத்தை வீழ்த்த திட்டம் தீட்டிக் கொண்டிருப்பார்... சிறைச்சாலைகளில் கம்பி எண்ணும் தோஸ்துக்களிடம் மாறிமாறி போய்வரவே பொழுது சரியாகிவிடும்...அரசாங்கத்தின் விசாரணைகளிற்கு பயந்து கொஞ்சம் பம்பிக்கொண்டிருக்கிறார் என பலவிதமாக பதில் சொல்வீர்கள். உண்மையில் மஹிந்த எப்பிடியிருக்கிறார் எனில், இதெல்லாம் கலந்த கலவையாக.

ஆட்சிமாற்றத்திற்கு முயற்சிக்கிறார் எனில், எப்படி முயற்சிக்கிறார்? மைத்திரி அணியை பின்கதவால் அழைத்து... விமல் வீரவன்சவுடன் குசுகுசுத்தபடி திட்டம் போடுகிறார் என நினைத்தால், நீங்கள் மஹிந்த ராஜபக்சவை குறைவாக எடைபோடுகிறீர்கள்.

மஹிந்தவின் நகர்வுகளை அறிந்தால் தலைசுற்றும். சத்தமில்லாமல் உங்கள் ஊர்களிற்கும் மஹிந்தவின் அலைவீச ஆரம்பிக்கிறது என்றால் நம்புவீர்களா?

நம்ப சிரமம்தான். ஆனால் தொடர்ந்து படித்தால் உண்மை புலப்படும்.

மஹிந்த ராஜபக்ச 2015 ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்ததற்கு பிரதான காரணம் என்ன தெரியுமா?

விலைவாசி உயர்வு... ஒரே ஆட்சி சலிப்புஞ். மனிதஉரிமை மீறல்கள்ஞ். ஊழல் இவைதான் காரணமா? இல்லை. நிச்சயமாக இல்லை. இவை துணைக்காரணங்கள்தான். முக்கிய காரணம் சிறுபான்மையினங்களின் வாக்குகளை இழந்தது.

இனி அதிகாரத்திற்குவருவதற்குசிறுபான்மையினங்களின் துணை அவசியம், அது இல்லாமல் ஆட்சிக்கு வர முடியாதென்பதை மஹிந்த ராஜபக்ச அணி தெளிவாக தெரிந்து கொண்டு விட்டது. சிறுபான்மையினங்களை கைக்குள் போடும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். இந்த நாட்களில் அவரது பிரதான வேலையே இதுதான்!

முஸ்லிம் மக்கள், கட்சிகளுடன் மஹிந்த சந்திக்கும் செய்திகள், படங்கள் வெளிவந்து கொண்டிருக்கிறது. தமிழ் தரப்பு சந்திப்பு படங்கள் வெளிவரவில்லை. தமிழர்களை வளைத்தெடுக்க மஹிந்த ராஜபக்ச முழுமூச்சாக முயன்றாலும், அதை இரகசியமாக பேணவே தற்போது விரும்புகிறார்.

தீபத்திற்கு கிடைத்த தகவலின்படி பல தமிழ் கட்சிகளின் பிரமுகர்கள் மஹிந்த ராஜபக்சவின் வீட்டிற்கு விசிற் அடித்து வந்துவிட்டனர். மஹிந்த வீட்டில் சாப்பிட்டு, அரசியல் பேசிவிட்டு வந்த வடக்கை சேர்ந்த நான்கு அரசியல் பிரமுகர்களை தீபம் அடையாளம் கண்டு அவர்களை தொடர்பு கொண்டது. முதலில் சப்பைக்கட்டு கட்டி மறுத்தார்கள். எனினும், சில ஆதாரங்களை தீபம் வைத்திருந்ததையடுத்து, இறுதியில் விடயத்தை ஏற்றுக்கொண்டனர். அவர்களுடன் பேசியதிலிருந்து திரட்டிய தகவல்கள் இவை.

பசில் ராஜபக்சவின் தலைமையில் இயங்கும் பொதுஜன பெரமுனவில் இணைய யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு குழு முன்னாள் ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் சென்றது என்ற செய்தியை படித்திருப்பீர்கள். அந்த குழு பற்றிய தகவல் அல்ல இது. கட்சி செயற்பாட்டாளர்கள் என்ற அளவிலேயே அவர்கள் இருந்ததால், அவர்களை பசில் ராஜபக்ச கூட்டமாக இருத்தி கதைத்துவிட்டு அனுப்பிவிட்டார். ஆனால், நாம் சொல்வது வேறு சம்பவம்.

பாராளுமன்ற தேர்தலோ, ஜனாதிபதி தேர்தலோ எதுவென்றாலும் தமிழர்களின் ஆதரவு தேவையென்பதை மஹிந்த அணி உணர்ந்துள்ளது. ஆனால் தமிழர்கள் தம்முடன் நெருக்கமாகுவார்களா என்ற சந்தேகம் இந்த நொடி வரையும் அவர்களிடம் உள்ளது. எப்படியும் தமிழர்களை வசப்படுத்த வேண்டும் என்ற தேவையுள்ளதால்... கட்சிகளின் பிரமுகர்கள் சிலருடன் நெருக்கமாகி கொழும்பிற்கு அழைத்து பேச்சு நடத்தியுள்ளார்.

இதில் ஒரு ஒற்றுமையுள்ளது எல்லா சந்திப்புக்களுமே பின் மாலை வேளையில்தான் நடந்தன. சிலருடன் இரவு உணவையும் மஹிந்த எடுத்திருக்கிறார்.

இந்த சந்திப்புக்களிற்கு பாலமாக நாமல் ராஜபக்ச மற்றும் ஒரு கூட்டு எதிரணி முக்கியஸ்தர் இருந்திருக்கிறார். தமிழ் பிரதிநிதிகளுடன் இவர்கள் நெருக்கமான தொடர்பை ஏற்படுத்திய பின்னர்தான், மஹிந்த சந்திப்பு நடந்துள்ளது.

நாமல் ராஜபக்சவுடன் முதற்கட்ட சந்திப்புக்களை முடித்தபோது, தாம் திருப்தியடைந்ததாக மறைமுகமாக தீபத்திடம் தெரிவித்தனர் அந்த பிரமுகர்கள். தமிழ் மக்களின் பிரச்சனையை இரண்டாக வகுத்து அன்றாட பிரச்சனையை விரைவாகவும், அரசியல் பிரச்சனையை பேச்சின் மூலமும் தீர்க்க வேண்டுமென்பதே தமது நிலைப்பாடு, தமது அடுத்த ஆட்சிக் காலத்தில் அரசியல் தீர்வு காணப்படும் என நாமல் ராஜபக்ச வாக்குறுதியளித்துள்ளார்.

காணாமல் போனவர்கள் விவகாரம், காணி விடுவிப்பில் உடனடி கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதையும் நாமல் அடிக்கடி வலியுறுத்தியதாக அவர்கள் தெரிவித்தனர்.

இதன்பின்னர், வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வடக்கு அரசியல் பிரமுகர்கள் மஹிந்த ராஜபக்சவை சந்திக்க அழைக்கப்பட்டிருந்தனர். நான்கிற்கு குறையாத அரசியல் முக்கியஸ்தர்கள் சந்திப்பிற்கு சென்று வந்துள்ளனர். இவர்களிடம் வடக்கு அரசியல் நிலைமைகள் பற்றி நாடி பிடித்து பார்ப்பதற்கே மஹிந்த அதிகமும் முயன்றிருக்கிறார். தமிழ் தேசிய கூட்டமைப்பின் மீது வடக்கு மக்கள் எப்படியான அபிப்பிராயத்தை தற்போது கொண்டுள்ளனர், மாற்று அணி வாய்ப்புள்ளதா, மத்திய ஆட்சி தொடர்பில் என்ன நினைக்கிறார்கள் என்பதை அறியவே முயன்றிருக்கிறார்.

இந்த சந்திப்புக்களில் கலந்து கொண்டவர்கள் எல்லோருமே ஒரே விடயத்தை சொல்கிறார்கள் மஹிந்தவை காலம் நன்றாக மாற்றிவிட்டது!

முன்னரை போல இறுக்கமான நிலைப்பாடுகளில் அவர் இல்லை. தமிழர் பிரச்சனையை தீர்க்க வேண்டும் என்பதை சொல்கிறார், தமிழ் பிரதிநிதிகள் தன்னுடன் ஒத்துழைத்தால் அதை முடிப்பேன் என்றாராம். கடந்த ஏப்ரல் மாதமளவில் முதலாவது சந்திப்பு நடக்க ஆரம்பித்திருக்கிறது. இதன்போது வடக்கு தலைவர் ஒருவர் கூறியிருக்கிறார் உங்களால்தான் தமிழர் பிரச்சனையை தீர்க்க முடியும் என. அதாவது ரணில் விக்கிரமசிங்க சிறிய அதிகார பரவலாக்கல் செய்தாலும் அது தெற்கில் சந்தேகத்தை ஏற்படுத்தும். ஆனால் மஹிந்த ராஜபக்ச சமஷ்டியை வழங்கினாலும் தெற்கில் பிரச்சனை ஏற்படாது என்பதே அவரது கருத்து.

இதனை சொன்ன பிரமுகர் கடந்த மேதினத்திற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தார். அப்போது தொலைபேசியில் அழைத்த மஹிந்த அந்த கருத்து பற்றி கலந்துரையாடியிருக்கிறார். மேதின நிகழ்வில் உரையாற்றிய மஹிந்தவின் கூற்றை உன்னிப்பாக கவனிப்பவர்கள் ஒன்றை கவனித்திருக்கலாம். உரையாற்றும்போது மஹிந்த சொன்னார் தமிழ் மக்களிற்கு என்னால் மட்டுமே தீர்வு வழங்க முடியும்!

தமிழ் மக்களிற்கு தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதில் மஹிந்த ராஜபக்ச முழுமையான பற்றுறுதியை வெளிப்படுத்தினாரா என சந்திப்பில் கலந்து கொண்டவர்களை கேட்டால்... “அவரில் நிறைய மாற்றம் உள்ளது. பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும் என்கிறார். ஆனால்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

# இலுமினாட்டிகள் என்ன செய்வார்கள்?

இலுமினாட்டி பற்றி தெரியாதவர்கள் முதல் முறையாக தெரிந்து கொள்ளும் நாளில் தூக்கத்தைத் தொலைப்பது நிச்சயம். தெரியாதவர்களுக்காக இலுமினாட்டி பற்றி ஒரு சிறு அறிமுக கட்டுரை.

உலகம் முழுவதையும் தன் கட்டுப் பாட்டில் வைத்திருக்கும் சர்வதேச நாட்டாமைகள்தான் இலுமினாட்டிகள். உலக அரசியல் அமைப்புகள், மதங்கள், வங்கிகள், ஹாலிவுட், மீடியாக்கள், நுகர் பொருட்கள் எல்லாம் எல்லாம் இவர்களது கையில். எதெல்லாம் இவர்களுடையது என்று ஆராய்வதைவிட எதெல்லாம் இன்னும் இவர்களுக்கு சொந்தமாகவில்லை என்பதை வேண்டுமானால் எளிதாக எண்ணிவிடலாம். இன்றைய உலகைப் பொறுத்தவரை இயற்றலும் ஈட்டலும் காத்தலும் அழித்தலும் இவர்கள் கையில்.

எகிப்திய பார்வோனின் இரத்தவழி வம்சங்களாகிய 13 முதல் 20 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்தான் இந்த இலுமினாட்டிகள். சில உலக அரசியல் தலைவர்களும், மிகப்பெரிய பணமுதலைகளும், கலைத்துறையினரும், விஞ்ஞானிகளும் இதில் அடக்கம். இவர்கள் வரலாறு பல நூற்றாண்டுகளைக் கடந்தது. உலகில் இதுவரை நடைபெற்ற அத்தனை புரட்சிகளையும், இரு உலகப்போர்கள் உட்பட அத்தனை யுத்தங்களையும் தங்கள் சொந்த ஆதாயத்துக்காக நடத்தியவர்கள் இவர்கள்தான்.

இதை ஏன் அவர்கள் செய்ய வேண்டும்?

New World Order என்ற பெயரில் உலகம் முழுவதையும் ஒரே குடைக்குள் கொண்டு வந்து அதை ஆளவேண்டும் என்பதே இவர்கள் நோக்கம், அதில் கிட்டத்தட்ட வெற்றியும் பெற்றுவிட்டார்கள் என்றே சொல்லலாம்.

இலுமினாட்டிகளின் சிறப்பியல்புகளில் ஒன்றை நீங்கள் தெரிந்துகொள்வது இக்கட்டுரையைப் புரிந்துகொள்ள உதவும். இவர்கள் சொல்லி அடிப்பதில் கில்லாடிகள். பில்லி சூனியம், நரபலிகள், மாந்திரீகம், அஸ்ட்ராலஜி, நியூமராலஜி, occultism போன்றவற்றில் இவர்களை மிஞ்ச உலகத்தில் ஆளில்லை.

3,6,7,9, 11, 22, 33, 333, 66, 666 போன்றவை இவர்களது முக்கிய எண்கள். சைத்தானுக்கு செய்யும் சடங்குகளாக இவர்கள் குறிப்பிட்ட நாளில் சில குறிப்பிட்ட செயல்களை செய்வார்கள். அது முழுக்க முழுக்க எண்களின், வானசாஸ்திரத்தின் முக்கியத்துவத்தை உள்ளடக்கியதாக இருக்கும். இவர்கள் தாங்கள் செய்யப் போவதை ஏதேனும் ஒரு மீடியம் வழியாக ஏற்கனவே வெளியே சொல்லியும் விடுவார்கள், ஆனால் அதை கண்டுபிடிப்பது அவ்வளவு சுலபம் அல்ல.

பெரும்பாலும் சம்பவங்கள் நடந்த பின்னரே அதை உலகம் புரிந்து கொள்ளும். அப்படி முன்னரே கண்டுபிடித்தாலும் எந்தக் கொம்பனாலும் அதைத் தடுத்து நிறுத்தவும் முடியாது.

உதாரணத்துக்கு இரட்டை கோபுர இடிப்பு நடத்தப் போவது பற்றி (அதைசெய்ததும்இந்தப்புண்ணியவான்கள் தானாம்) சம்பவம் நடப்பதற்கு சில மாதங்கள் முன்னர் வெளியிட்ட 20S அமெரிக்க நோட்டில் மறைமுகமாக சொல்லிவிட்டார்களாம், மட்டுமன்றி சம்பவத்துக்கு பல ஆண்டுகளுக்கு முன் வெளியான புகழ்பெற்ற காமிக்ஸ் புத்தகங்களின் அட்டைகளிலும் ஆங்காங்கே இந்த இரகசியம் வெளியிடப்பட்டிருக்கிறது, ஆனால் அது அப்போது யாருக்கும் தெரியவில்லை.யார் இவர்கள்? ஏன் இதைச் செய்கிறார்கள்? இவர்கள் ஏன் வெளிச்சத்துக்கு வருவதில்லை? தாங்கள் செய்யப்போவதை யாருக்கு, ஏன் முன் கூட்டியே சொல்லுகிறார்கள்? அது யார் மூலம், எப்படி வெளிவுலகத்துக்கு கசிகிறது?

இலுமினாட்டிகள் யாரும் தன்னை இலுமினாட்டி என்று அறிவித்துக் கொள்ளமாட்டார்கள். இது ஒரு இரகசியக் குழு, இரகசியம்தான் இவர்கள் பலம். இதை ஏன் வெளியே சொல்லுகிறார்கள் என்றால் மக்களுக்காக அதை சொல்லுவதில்லை.

உலகம் முழுவதிலுமுள்ள இலுமினாட்டிகள் தங்களுக்குள் போன் மூலமாகவோ கடிதத்திலோ பேசிக்கொள்ள மாட்டார்கள், இதுபோன்ற சமிஞ்கைகள் மூலமே

தொடர்ச்சி 19-ம் பக்கம்...




அதை எப்படி செய்வதென்பது பற்றியெல்லாம் அவர் பேசவில்லை" என்றார்கள்.

இதேவேளை, பசிலின் சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கு ஈ.பி.டி.பி அமைப்பிலிருந்து ஒதுங்கிய சிலர் சென்று சேர்ந்திருக்கிறார்கள். ஓடு மீன் ஓடி உறு மீன் வரும் வரை ஒற்றைக்காலில் டக்ளஸ் தேவானந்தா காத்திருக்கும் சமயம் இது. இந்த அரசு ஒரு இராஜாங்க அமைச்சர் பதவி கொடுக்க தயாராக இருந்தபோதும், டக்ளஸ் அதை ஏற்கவில்லை. அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவியொன்றே ஈ.பி.டி.பியின் எதிர்பார்ப்பு. அது கிடைக்காவிட்டாலும் பாதகமில்லை, அடுத்த தேர்தலுடன் கட்சிக்கு பிடித்த தோஷம் கழியுமென்பது போட்ட கணக்கு.

இந்த சமயத்தில் அதிருப்திக்குழு மஹிந்த கூடாரத்திற்கு சென்றதை ஈ.பி.டி.பி விரும்பவில்லை. அதை சொல்வதை போல சொன்னதாகவும் தகவல்!

தமிழ் கட்சிகளிற்குள் ஈ.பி.டி.பி தொடர்பாக மஹிந்த ராஜபக்சவிற்கு எப்பொழுதும் ஒரு "ஷொப்ற் கோனர்" இருந்து வருகிறது. மஹிந்த ஜனாதிபதியாக வர முன்னரே அவருடன் ஈ.பி.டி.பி நெருக்கமாக இருந்ததே அதற்கு காரணம். அப்போதைய கட்சி தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகாவிற்கு உவப்பில்லாமல்தான் சுதந்திரகட்சி ஜனாதிபதி வேட்பாளராக மஹிந்த வந்தார். இந்த சமயத்தில் மஹிந்த வடக்கிற்கு ஒரு விஜயம் செய்தார். மஹிந்த வடக்கிற்கு வர முன்னரே வடக்கிலுள்ள தமது பங்காளிகளிற்கு சந்திரிகா போன் போட்டு, 'ஆள் வருகிறார். யாரும் கூட்டிக் கொண்டு திரியக்கூடாது' பாணியில் ஒரு அன்புக்கட்டளை இட்டுள்ளார்.

அப்போதைய அரசியல் சூழலை சரியாக கணித்தோ, அல்லது அவர்கள் எடுத்த முடிவு விதிவசத்தால் சரியானதோ தெரியவில்லை மஹிந்தவை வடக்கில் அரவணைத்த ஒரே தரப்பு ஈ.பி.டி.பி. யாழ்ப்பாணத்தில் அவரை தங்க வைத்து, சந்திப்புக்களை ஒழுங்கு செய்து கொடுத்தார்கள். அன்று தொடங்கிய நெருக்கம் இது. இனியும் அது தொடரும் என மஹிந்த அணி கருதுகிறது. மஹிந்த ராஜபக்சவுடன் பேசிய சமயத்தில் இது புலப்பட்டதாக, சந்திப்புக்களில் ஈடுபட்டவர்கள் கூறினார்கள்.

கூட்டு எதிரணி ஊடகப்பிரிவொன்றை செயற்படுத்தி வருகிறார்கள். அதில் தமிழ் பிரிவும் இயங்குகிறது. வடக்கில் நடக்கும் ஒவ்வொரு அசைவையும் அவர்கள் விலாவாரியாக மஹிந்த குடும்பத்திற்கு கவனப்படுத்துகிறார்கள். வடமாகாணசபையின் ஒவ்வொரு அமர்விலும் நடக்கும் விடயங்கள் பார்வைக்கு போனதும், நாமல் ராஜபக்ச அவற்றை நுணுக்கமாக அவதானிக்கிறார். வடமாகாணசபைக்குள் உள்ள தமது நெருக்கமானவர்களை உடனடியாக தொடர்பு கொண்டு அதுபற்றிய தெளிவுபடுத்தல்களை பெற்றுவிடுகிறார். மாகாணசபை நடந்த அன்று இரவுக்குள் இவையனைத்தும் நடந்துவிடுகிறது!

ஒன்றரை மாதத்தின் முன்னர், முதலமைச்சர் பற்றிய ஆவணமொன்றை நாமல் ராஜபக்ச வடக்கிலுள்ள தனது 'சிலிப்பர் செல்'களிடம் கேட்க, அவர்கள் அந்த ஆவணத்தை பெற ஓடித்திரிந்த சுவாரஸ்ய சம்பவமெல்லாம் நடந்தது!

சம்பவம்... சம்பவம் என்றீர்களே, கடைசி வரை அந்த சம்பவத்தை சொல்லவேயில்லையே என்பதை போல நீங்கள் பார்ப்பது புரிகிறது. யார் அந்த 'சிலிப்பர் செல்'கள் என்றுதானே கேட்கிறீர்கள்...

விரைவில் எல்லோரும் அரங்கத்திற்கு வருவார்கள்... பார்க்கத்தானே போகிறீர்கள்!



## இலக்கிய நயம்

# செம்புலப் பெயல்நீரார்

லண்டன் மாநகரில் சுரங்கப் பாதையில் ஓடும் ரயிலில், உலகின் மிகச்சிறந்த கவிதைகளை, அந்தந்த மொழியிலும் ஆங்கில மொழி பெயர்ப்போடும் எழுதி வைத்துள்ளனர். இதற்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. பின்னர் இந்த பாடல்களைத் தொகுத்து "மண்ணுக்கடியில் மலரும் பாக்கள்" (Poems on the underground) என்று நூலாக வெளியிட்டுள்ளனர்.

அப்படி அந்த ரயிலில் எழுதி வைக்கப்பட்டுள்ள கவிதைகளில் சங்க இலக்கியமான குறுந்தொகைப் பாடல் ஒன்றும் இடம் பெற்றுள்ளது.

ஆம். சங்க இலக்கியமான எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று குறுந்தொகை. இதை சங்க இலக்கியங்களுக்கு வாயில் என்று கூறலாம். மிகவும் எளிய பாடல்கள். படித்துப் புரிந்து கொள்ள எளிது. இதைப் படித்தால், சங்க இலக்கியங்களைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்படும்.

இத்தகைய சிறப்பு பெற்ற குறுந்தொகையில் இருந்துதான் ஒரு பாடலை, லண்டன் ரயிலில் எழுதி வைத்துள்ளனர்.

**யாயும் ஞாயும் யார் ஆகியரோ**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்**
**யானும் நீயும் எவ்வழி அறிதும்**
**செம்புலப் பெயல்நீர் போல**
**அன்புடை நெஞ்சம்தாம் கலந்தனவே.**

தலைவனும் தலைவியும் கூடி மகிழ்கின்றனர். அதன் பின்னர், தலைவன் தன்னைக் கைவிட்டுவிடுவானோ என்ற அச்சம் தலைவியிடம் ஏற்படுகிறது. இதை அவளது முகக்குறிப்பைக் கண்டு தெரிந்து கொண்ட தலைவன், நாம் உள்ளத்தால் கலந்துவிட்டோம். நம்மைப் பிரிப்பது அரிது என்று சொல்லி தலைவியைத் தேற்றுவதுதான் இந்தப்பாடல். பாடலின் பொருள்


என்னுடைய தாய் யாரோஞ் உன் தாய் யாரோ. என் தந்தையும் உன் தந்தையும் எந்தவகையிலாவது உறவினரா என்றால்? அதுவும் இல்லை. உன்னை எனக்கு முன்பே தெரியுமா? என்றால் தெரியாது. உனக்கும் என்னை இதுவரை தெரியாது. ஆனாலும் காதலால் நம் நெஞ்சங்கள் கலந்துவிட்டன். எப்படிக் கலந்துள்ளன தெரியுமா?

செம்மண் நிலத்தில் விழுந்த மழை நீர் எப்படி அதன் தன்மையாகிவிடுகிறதோ அதுபோல நம் நெஞ்சங்கள் கலந்து விட்டன என்று காதலியிடம் கூறுகிறான் தலைவன்.

செம்மண் நிலத்தில் விழும் மழை நீர், மண்ணின் நிறமான செந்நிறமாக மாறிவிடும். செம்மண்ணின் சுவையையும் மணத்தையும் பெற்றுவிடும். அப்படி செம்மண்ணின் தன்மை யாக மாறிய அந்த நீரில் இருந்து, செம்மண் நிறத்தையோ, மணத்தையோ, சுவையையோ பிரிக்க முடியாது.

அதுபோல காதலர் இருவர் நெஞ்சமும் கலந்துவிட்டது. இருவர் நெஞ்சமும் வேறு வேறு அல்ல. ஒரே தன்மையுடைய தாகிவிட்டது. இனி அந்தக் காதல் நெஞ்சங்களைப் பிரிக்க முடியாது என்று சொல்கிறார் சங்கப் புலவர்.

இந்த அற்புதமானப் பாடலை எழுதியவர் யார் என்று தெரியவில்லை. அதனால், இந்தப் பாடலில் வரும் அற்புத மான சொற்றொடரையே அவரது பெயராக்கிவிட்டனர். ஆம், பாடலாசிரியருக்கு சூட்டப்பட்டுள்ளபெயர், செம்புலப் பெயல்நீரார்.



# உட்கார்ந்தால் ஹாண்டே; எழுந்தால் சண்டை!

எம்ஜிஆர் ஆட்சியில் அமைச்சராக இருந்தவர் டாக்டர் ஹெச்.வி. ஹண்டே. 1971 76ல் திமுக ஆட்சியின் போது இவர் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தார். ராஜாஜியின் சுதந்திரா கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஒரே எம்.எல்.ஏ. இவர். சட்டப் பேரவையில் இவர் நடத்திய அறிவுப்பூர்வமான விவாதங்களால், மக்களிடம் இவருக்கு ஒரு மதிப்பும் மரியாதையும் இருந்தது. நாகரிகம் மிக்க அரசியல்வாதி என்ற நல்ல பெயர் இருந்தது.

ராஜாஜி மறைவுக்குப் பிறகு எம்ஜிஆர் தலைமையிலான அதிமுகவில் சேர்ந்தார். அப்போது கடும் விமர்சனத்துக்கு ஆளானார். 'என் மறைவுக்குப் பிறகு அதிமுகவில் சேர்ந்துவிடு என்று ரஜாஜி என்னிடம் சொன்னார். அதனால்தான் அதிமுகவில் சேர்ந்தேன்' என்று பதிலளித்தார் ஹண்டே. இந்த பதிலும் விமர்சனத்துக்கு ஆளானது.

சட்டப் பேரவையில் நிறைய கேள்விகள் கேட்பார் ஹண்டே. அறிவு பூர்வமாக விவாதம் செய்வார். முதல்வர் கருணாநிதியுடனும் அமைச்சர்களுடனும் மக்கள் நலனுக்காக வாக்குவாதம் செய்வார். ஒருமுறை இவரை குறிப்பிட்டு கருணாநிதி பேசுகையில், 'உட்காா்ந்தால் ஹண்டே, எழுந்தால் சண்டை' என்றார். அப்போது தீவிரமாக குடும்பக்கட்டுப்பாடு பிரச்சாரம் செய்யப்பட்டது. இதற்காக பல இடங்களில் பெரிய பெரிய விளம்பரப் பலகைகள் வைக்கப்பட்டன. அதில் கருணாநிதி படம் வரைந்து 'நாம் இருவர் நமக்கு இருவர்' என்று எழுதியிருந்தனர். இந்த பனரில் வரையப்பட்டிருந்த கருணாநிதி படம் நம்மைப் பார்ப்பது போல இருக்கும்.

இதுகுறித்து சட்டப் பேரவையில் பேசிய ஹெச்.வி. ஹண்டே, 'குடும்பக் கட்டுப்பாடு விளம்பரப் பலகையை ஒருவர் பார்க்கும்போது, அவரைப் பார்த்து நாம் இருவர் நமக்கு இருவர் என்று முதல்வர் கருணாநி கூறுவது போல உள்ளது. இந்த விளம்பரப் பலகையை ஒரு பெண் பார்த்தால் எப்படி இருக்கும்? நாகரிகமாக இல்லையே. இந்த விளம்பரம் சங்கடத்தை ஏற்படுத்துவதாக உள்ளது' என்றார். உடனடியாக, விளம்பரப்பலகையில் இருந்த 'நாம் இருவர் நமக்கு இருவர்' வாசகம் அழிக்கப்பட்டது.

**'முத்தென்றும் மணியென்றும்**
**வைரமென்றும் வைடூரியமென்றும்**
**கணக்கின்றி பிள்ளைகளை**
**பெறுதல் விடுத்து,**
**எள்ளென்றும் கொள்ளென்றும்**
**நெல்லென்றும் கரும்பென்றும்**
**கம்பென்றும் வரகென்றும்**
**உணவைப் பெருக்கிடுவீர்**
**உற்பத்தி செய்திடுவீர்'** என்ற வாசாகம் எழுதப்பட்டது.

# ஆளும் கட்சியில் அறிஞர்கள் இல்லையா?



எதிரியை தன் பேச்சால் அதள பாதாளத்துக்கு விமர்சிப்பார் திமுக பொதுச்செயலாளர் அன்பழகன். ஆனால் அது வெளிப்படையாகத் தெரியாது. அவருடைய பேச்சின் உட்பொருளை ஆழ்ந்து பார்த்தால்தான். அது புரியும்.

தமிழ்நாட்டிலும் சட்டப் பேரவை, சட்ட மேலவை என இரண்டு இருந்தது. பட்டதாரிகள், ஆசிரியர்கள், உள்ளாட்சி மன்றங்களின் தலைவர்கள் ஆகியோர் தனித்தனியாக வாக்களித்து, தங்கள் பிரதிநிதிகளை மேலவைக்கு அனுப்புவர்கள். நியமன உறுப்பினர்களும் உண்டு. மேலவையில் பெரும்பாலும் படித்தவர்களும் அறிஞர்களும் மட்டுமே இடம்பெறுவார்கள். எனவே, இதை அறிஞர்கள் சபை என்றும் சொல்வார்கள்.

"கப் அண்ட் சோசரில் கப் போன்றது சட்டப் பேரவை; சோசர் போன்றது மேலவை. கப்பில் இருக்கும் சூடான கோப்பியை சோசரில் ஊற்றி ஆற வைத்து குடிக்கிறோம். அதுபோல சட்டப் பேரவையில் விவாதம் சூடாக இருக்கும். மேலவையில், விவாதம் சூடாக இருக்காது. அறிவு பூர்வமாக இருக்கும்"என்று அண்ணா சொல்வார்.

எம்ஜிஆர் காலத்தில் மேலவை ஒழிக் கப்பட்டது. கருணாநிதி மீண்டும் முதல்வர் ஆனதும், சட்ட மேலவையை அமைப் பதற்கான தீர்மானத்தை பேரவையில் நிறைவேற்றி மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பினார். ஒப்புதல் கிடைக்கும் முன் 1990ல் அவரது ஆட்சி கலைக்கப்பட்டது. 1991ல் ஜெயலலிதா முதல்வர் ஆனதும் மேலவை வேண்டாம் என்று தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப் பினார். 1996ல் கருணாநிதி முதல்வர் ஆனதும் மேலவை அமைக்க தீர்மானம் நிறைவேற்றினார். ஆட்சி முடியும் வரை மத்திய அரசிடம் இருந்து ஒப்புதல் வரவில்லை. 2001 ஜெயலலிதா மீண்டும் முதல்வர் ஆனதும் மேலவை வேண்டாம் என்று பேரவையில் தீர்மானம் கொண்டு வந்தார்.

இந்த தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்தில், எதிர்க்கட்சித் தலைவரான திமுகவின் அன்பழகன் பேசும்போது, "மேலவை என்பது அறிஞர்கள் நிறைந்த சபையாக இருக்கும். அறிவார்ந்த விவாதம் நடக்கும். அது நல்லது. எனவே, மேலவை தேவை என்பதே திமுகவின் நிலை"என்றார்.

முதல்வர் ஜெயலலிதா எழுந்து, "மேல வையில் அறிஞர்கள் இருப்பார்கள் என்று பேராசிரியர் அன்பழகன் சொல்கிறார். இந்த அவையில் அறிஞர்கள் இல்லையா? பேராசிரியர் இருக்கிறார். எஸ்.ஆர்.பால சுப்ரமணியன் · இருக்கிறார். லத்தீப் இருக்கிறார். குமாரதாஸ் இருக்கிறார். இவர்களெல்லாம் அறிஞர்கள்தானே" என்றார். இவர்கள் அனைவரும் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தவர்கள்.

அன்பழகன், உடனே எழுந்து, "ஆளுங்கட்சியில் இருக்கும் முதல்வருக்கோ, அமைச்சர் பொன்னையன் போன்ற வர்களுக்கோ, அங்கிருந்து பார்க்கும்போது எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் நாங்கள் கண்ணில்படுகிறோம். எதிர்க் கட்சி வரிசையில் இருந்து பார்க்கும் எங்க ளுக்கு ஆளுங்கட்சி வரிசையில் இருப்ப வர்கள்தான் கண்ணில்படுகிறார்கள்" என்றார். எதிர்க்கட்சி வரிசையில் அறிஞர்கள் இருக்கிறோம். ஆனால், ஆளுங்கட்சியில் அறிஞர்களே இல்லை என்பதை வார்த்தை விளையாட்டின் மூலம் நாசூக்காக சொன்னார்.

எம்.ரமணன் LLB



# இலங்கையின் சட்டமுறையில் போலியன் வழக்கு (Paulian Action)

## ஒரு பார்வை



போலியன் வழக்கு என்பது உரோமச் சட்டத்தில் தோற்றம் பெற்று பின்னர் உரோமன் டச்சுச் சட்ட காலப்பகுதியில் வளர்ச்சியடைந்த ஒரு பொதுச்சட்டக் கோட்பாடாகும். குறித்த கடன் விடயம் தொடர்பில் கடன் கொடுத்தவர்களின் உரிமைகளைப் பாதிக்கும் வகையில் கடன்பட்டவர் தனது ஆதனங்களை கைமாற்றியிருந்தால் அத்தகைய கைமாற்றத்தினை செல்லுபடியற்றதாக்குமாறு கூறி கடன்கொடுத்தவரால் நீதிமன்றில் தொடுக்கப்படும் வழக்கே போலியன் வழக்காகும். அதாவது கடன்கொடுத்தோரை மோசடி செய்யும் நோக்கோடு கடன்பட்டவர் தன் ஆதனத்தை கைமாற்றம் செய்திருப்பின் அதனை செல்லுபடியற்றது (Null and Void) என வெளிப்படுத்தி அவ்வாதனம் மூலம் கடனாளியிடமிருந்து தனக்கு கிடைக்க வேண்டிய கடனை பெற்றுக்கொள்ளக் காணப்படும் நீதிமன்ற நடவடிக்கை ஆகும். இது இலங்கையில் குடியியல் நடபடிமுறைக் கோவையின் (Civil Procedure Code) பிரிவு 247 உடன் இணைத்து வழக்கு தாக்கல் செய்யப்படுகின்றது. தனித்த ஒரு நபர் இவ் வழக்கினைக் கொண்டுவர முடியும். விற்கப்பட்ட கடனாளியின் ஆதனத்திலிருந்து பெறப்படும் தொகை அந்தக் கடன் கொடுத்தோரையே சேருமே தவிர கூட்டுப்பொறுப்பு கிடையாது. மேலும் கடன் கொடுத்தோருக்கு ஆதனம் கைமாற்ற முன்னரும் ஆதன கைமாற்றம் நடந்த பின்னரும் போலியன் வழக்கினைத் தொடரும் உரிமையுண்டு.

ஒரு போலியன் வழக்கின் மூலம் உரிமை பாதிப்புற்ற கடன்கொடுனர் கடனாளியினால் மோசடியாகக் கைமாற்றம் செய்யப்பட்ட ஆதனத்தினை விற்பனை செய்வதற்க்காகத் தமது கடனை அடைக்கத் தேவையான அந்த உறுதியினை வலிதற்றதாக்கி ஆதனத்தை விற்று தமது கடனைப் பெற்றுக் கொள்ளலாம். இது தொடர்பான ஏற்பாட்டை குடியியல் நடபடிமுறைக் கோவையின் பிரிவு 218 செய்துள்ளது. இருப்பினும் கைப்பற்றப்பட்ட ஆதனத்தின் பெறுமதி கடன் பெறுமதியை விட கூடுதலாக காணப்பட்டால் கடன் தொகையை பெற்றபின் எஞ்சிய பணம் போலியன் வழக்கு எவருக்கெதிராக கொண்டு வரப்பட்டதோ அவரிடம் கொடுக்கப்படல் வேண்டும். (Punchimenike case)

இவ் போலியன் வழக்கில் மோசடியான உறுதி முற்றாக இரத்துச் செய்யப் படமாட்டாது. எந்த அளவிற்கு கடனைச் செலுத்த குறித்த ஆவணத்தைவிற்க வேண்டி வருமோ அந்த அளவிற்கே உறுதி வெறிதாகுமென Gunnawardhana V Bilindahamy என்ற வழக்கில் தீர்மானிக் கப்பட்டது. மேலும் கடனுக்காக, விற்பனை செய்யப்பட்ட மிகுதி ஆதனம் காணியை வாங்கியவரிடம் விட்டு வைக்கப்படும். அதாவது மிகுதி ஆதனம் மாற்றியவருக்கு சேராது மாறாக யாருக்கு மாற்றப்பட்டதோ அவருக்கே சேரும். இது Punchi Banda V Perera என்ற வழக்கில் தீர்மானிக்கப்பட்டது.

இவ் போலியன் வழக்கானது கடன் பெற்றவர் தன் சொத்துக்களைக் கைமாற்றிய நேரத்தில் கடன் கொடுத்தோராக இருந்த அனைவராலும் கொண்டுவரப்பட முடியும் என்பதுடன் இவ் வழக்கு வைக்கும் உரிமை கடன் கொடுத்தவர்களுக்கு மட்டுமன்றி அவர்களிடமிருந்து உரித்தினைப் பெற்றவர்களுக்கும் உண்டு என Suppaiya V Meerasaibu என்ற வழக்கில் தீர்மானிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் Mukthar V Ismail என்ற வழக்கில் நீதிமன்றம் கணிக்கப்படாத நட்டம் ஒன்று கடன்கொடுத்தோருக்கு ஏற்படுமாயின் போலியன் வழக்கில் நிவாரணம் வழங்க முடியாது என தீர்மானித்தது. பின்னைய காலங்களில் இவ் விடயம் பல வழக்குகளில் மீளப் பரிசீலிக்கப்பட்டது. கணிக்கப்படாத நட்டத்திற்கு நிவாரணம் வழங்காது விடப்படும் போது கடன்கொடுத்தோர் பாதிக்கப்படுவதுடன் கடன் பெற்றவர் இதனை ஒரு வாய்ப்பாகக் கருத முடியும் என்பதால் Jeyasooriya V Iris என்ற வழக்கில் போலியன் செயற்பாட்டுக்கு நிவாரணம் வழங்கப்பட முடியுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

போலியன் வழக்கிற்கு தேவையான அம்சங்கள்

### 1. மோசடி இருந்ததென்பது நிரூபிக்கப்படல் வேண்டும்

கடன் கொடுத்தவர்களை மோசடி செய்யும் திட்டம் இருந்திருக்க வேண்டும். அத்துடன் உண்மையாகவே கடன் கொடுத்தவர் மோசடி செய்யப்பட்டார் என்று காட்டப்படின் நிவாரணம் உண்டு.

### 2) பிரதி பயன் இல்லாமை

குறித்த கொடுக்கல வாங்கல் எதுவித பிரதிபயனும் இல்லாமல் இடம்பெற்றிருப்பின் அது மோசடிக்கு வழிவகுக்கும் எனக் குறிப்பிடப்படுகின்றது. Sriwardana V Charilssingo எனும் வழக்கில் ஆதனமானது பிரதிபயனை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறாமையினால் மோசடி இடம் பெற்றதாகக் கருதப்பட்டதுடன் போலியன் நடவடிக்கை செயற்படுத்தப்பட்டது.

### 3) கடனாளியின் கைவசம் சொத்து போதியளவு இல்லாமை

வழக்கில் எதிராளிதன் கைமாற்றத்தின் பின் வங்குரோத்து நிலைமையை அடையாவிடின் போலியன் நடவடிக்கையைக் கொண்டுவர முடியாது. ஆனால் கைமாற்றத்தின் பின் தன் கடனை அடைக்க முடியாது என்ற விளைவை எதிராளி தெரிந்து கொண்டே அவ் கைமாற்றத்தினை மேற்கொண்டிருப்பின் போலியன் வழக்கினைக் கொண்டுவர முடியும் என Subramaniyam Chetty V Gunawardena என்ற வழக்கில் தீர்மானிக்கப்பட்டது.

### 4) கடன் கொடுத்தவர் உண்மையாகப் பாதிக்கப்பட்டமை


குறித்த கொடுக்கல் வாங்கலில் எதிராளியின் மோசடி மட்டும் நிரூபிக்கப்பட்டால் மட்டும் போலியன் வழக்கினைக் கொண்டு வர முடியாது. வழக்காளி குறித்த பரிமாற்றத்தின் போதுதான் பாதிக்கப்பட்டதையும் மன்றில் நிரூபித்தல் வேண்டும். இது Fernando V Fernando என்ற வழக்கில் நீதிமன்றத்தால் உறுதிப்படுத்தப்பட்டது.

கடன் கொடுநருக்கு சார்பாக அவருக்கு கிடைக்க வேண்டிய கடன் தொகை தொடர்பில் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் செய்யப்பட்ட கைமாற்றப்பட்ட உறுதி தொடர்பில் போலியன் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளவிடத்து அங்கு கைமாற்றப்பட்ட ஆதனம் மீண்டும் கடனாளிக்குச் செல்லாது. மோசடியாகக் கைமாற்றம் செய்த உறுதி முற்றாக வலிதற்றதாக்கப் படாது. எனினும் வழக்குத் தீர்ப்பினைச் செலுத்தும் முகமாக தேவையான அளவு அவ் உறுதியில் வலிதற்றதாக்கப்படும். விற்பனைக்குத் தேவைப்படாத ஆதனத்தின் உரித்து கைமாற்றம் செய்பவருக்குண்டு.



▶ கிழக்கு மாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பிரிவில் நடத்தப்பட்ட சிறந்த சுகாதாரசேவையாளர் தெரிவில் நிந்தவூர் ஆதாரவைத்தியசாலையை சேர்ந்த ஏழு பேர் தேர்வாகி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். வைத்தியசாலை அத்தியட்சர் டொக்ரர் சஹிலாராணி இஸடின், பதிவு வைத்தியஅதிகாரி டொக்ரர் ஜே.சலீம், மருந்துக்கலவையாளர் ஏ.எம்.சித்தீக், மருத்துவ மாது எஸ்.எம்.எஸ்.ஜஸீவா, ஆய்வுகூட உதவியாளர் எம்.சீ.எம்.சலீம், அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.எம்.றபீக், சுகாதார உதவியாளர் எஸ்.ஐ.இல்யாஸ் ஆகியோரே விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.





▶ மட்டக்களப்பு வின்சென்ற் தேசிய பெண்கள் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு அண்மையில் நடந்தது. பாடசாலை அதிபர் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுனர் ரோஹித போகொல்லாஹம பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.



## கலெக்டர் ஆவாராம் வம்சம் ஜோதிகா!

சன் டிவியின் வம்சம் தொடரில் ஜோதிகாவாக நடிப்பவர் பிரியங்கா. மாநில அளவில் மேடைப்பேச்சுக்களில் பரிசில் பெற்றவர் இவர். படிக்கும் காலத்தில் பண்பலை வானொலியொன்றில் ஒரு மாதம் அறிவிப்பாளராக இருந்ததுதான் இவரது மீடியா அனுபவம். பின்னர் உள்ளூர் சனல் ஒன்றில் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்க தொடங்கி, இன்று நடிகையாகிவிட்டார். பாரதிராஜாவின் அன்னக்கொடி படத்திலும் நடித்துள்ளார். இப்பொழுது வர்த்தகத்திலும் இறங்கி விட்டார். கலெக்டர் ஆக வேண்டுமென்ற ஆர்வத்துடன் படித்துக் கொண்டிருந்தவரை, நடிப்பு திசைமாற்றி விட்டதாம். விரைவில் படிப்பை தொடர்ந்து கலெக்டர் ஆகுவாராம்.




ஹர்சதா பட்டேல்

## வில்லங்க தொடர்

திரைப்படங்களில்தான் ஆபாசம் என்றால் இப்பொழுது சின்னத்திரையிலும் ஆபாசம் தாராளமாகிறது. சொனி தொலைக்காட்சியில் பெஹ்ரிதார் பியா கி என்ற தொடர் கடந்த சில மாதங்களிற்கு முன்பிருந்து ஆரம்பமாகியது. அது ஒரு ஜமீன் குடும்பத்து கதை. கலகலப்பாகத்தான் கதை நகர்ந்து கொண்டிருந்தது. திடீரென வில்லங்கமாகிவிட்டது. ஜமீன் குடும்பத்தை சேர்ந்த ஒன்பது வயது சிறுவனுக்கும் ஜமீன் குடும்பத்தை சேர்ந்த இருபது வயது பெண்ணுக்கும் காதல் வருகிறது. சிறுவனின் பெயரிலுள்ள சொத்துக்களை அபகரிக்க, பெண் குடும்பம் காதலுக்கு உதவுகிறது. இருவருக்கும் திருமணம் செய்து வைக்க, அவர்கள் குடித்தனம் நடத்துகிறார்கள் என கதை போகிறது. சமூக வலைத்தளங்களில் இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்ப, 8.30 மணிக்கு ஒளிபரப்பாகி வந்த தொடரை 10.30 மணிக்கு மாற்றினார்கள். எதிர்ப்பு அடங்கவில்லை. சில தன்னார்வ அமைப்புக்கள் நீதிமன்றம் போக தயாரானபோது, தொடரை நிறுத்தி விட்டார்கள்.

## தொடர்கள் மாற வேண்டும்

வாணி ராணி தொடரில் நெகடிவ் நடிப்பை வெளிப்படுத்தியவர் ஜெயராம் மோகன். பின்னர் தாமரை, அழகி தொடர்களில் ஒப்பந்தமானார். குடும்பங்களில் நடக்கும் மோசமான விடயங்களை முக்கியப்படுத்தாமல், நல்ல விடயங்களை முக்கியப்படுத்தினால் தொடர்களின் தரம் உயரும் என கூறியுள்ளார். 'சீரியல் என்பது மக்களின் வாழ்வோடு கலந்து விட்டது. சீரியல்களை பார்க்கும் நேயர்கள் அதில் வரும் பிரச்சனைகளை தங்களுக்கு ஏற்படுவதை போலவே உணருகிறார்கள். அதனால்தான் குடும்ப சூழ்நிலையை மையமாக வைத்து அதிக சீரியல்கள் வருகின்றன. குடும்ப பிரச்சனைகளில் தவறான உறவுகளை சித்தரிக்கும் கதைகளை தவிர்த்துவிட்டு, நல்ல ஆரோக்கியமான விசயங்களை சேர்க்கலாம். காமெடி காட்சிகளை சேர்க்கலாம். குழந்தைகள் தொடர்பான விடயங்களை சேர்க்கலாம்' என கூறியுள்ளார்.

## புளித்த முத்தம்!

சரவணன் மீனாட்சி ஜோடி செந்தில் ஸ்ரீஜா ஜோடி மீண்டும் இணைந்துள்ள தொடர் மாப்பிள்ளை. விஜய் டிவியில் ஒளிபரப்பாகி வருகிறது. இன்னொரு ஜோடி கமல் ஜனனி. இவர்களின் ரொமான்ஸ் காட்சிகள் சினிமாவிற்கு இணையாக படமாக்கப்பட்டு வந்தது. பல முத்தக்காட்சிகளில் நடித்திருந்தனர். ஆனால் இப்போது அவர்களின் பாத்திரம் எதிரும் புதிருமாக மாற்றப்பட்டுள்ளது. காதலனுக்கே வில்லியாகி விட்டார் ஜனனி. இது பற்றி கமல் கூறும்போது முத்தக்காட்சிகளில் நடிக்க பலர் தயங்குவார்கள். ஆனால் ஜனனி சாதாரணமாக எடுத்துக்கொண்டு நடித்தார். ஜனனி இப்பொழுது எனக்கு எதிரியாகி விட்டார். நிஜமாகவே எனக்கு இது பெரிய அதிர்ச்சிதான். முன்னர் ஜனனியின் முகத்தை பார்க்க ஆவலாக இருந்தேன். இப்பொது பயமாக உள்ளது. காரணம், அவ்வளவு கொடூர வில்லியாகி விட்டார் என்றார்.

## நிஷாவின் மாமியார் பிரச்சனை!

விஜய் டிவியில் காமெடியில் கலக்கிக்கொண்டிருக்கும் மூன்று அணியையும் இணைத்து 'கலக்கப் போவது யாரு சம்பியன்ஸ்' காமெடி ஷோ நடத்தப்பட்டு கொண்டிருக்கிறது. இதில் அறந்தாங்கி நிஷா முக்கியமானவர். தற்போது சிவகார்த்திகேயனுடன் இணைந்து ஒரு படத்தில் காமெடியில் கலக்கியிருக்கிறாராம். காமெடி நிகழ்ச்சியில் மாமியார் பிரச்சனையை அடிக்கடி சொல்வதை கேட்டு, தனக்கும் மாமிக்கும் பிரச்சனையென ரசிகர்கள் நினைக்கிறார்கள் என்பதுதான் நிஷாவின் கவலை. மாமியாரை காண்பவர்கள் எல்லோரும், 'மருமகளுடன் பிரச்சனையா' என கேட்கிறார்களாம்.

## சின்னத்திரைக்கு வருகிறார் ரேவதி!

தமிழ் சினிமாவில் ரேவதிக்கென தனியிடம் உள்ளது. கதாநாயகியாக நடித்தபோதும், தற்போது அம்மா வேடத்திலும் அவர் பெயர் சொல்லும் நடிகையாகியுள்ளார். தமிழ், தெலுங்கில் தற்போது அம்மா வேடத்தில் நடித்து வருகிறார். சினிமாவில் பிசியாக இருந்தாலும் தற்போது அழகு என்ற தொடரில் முதன்மை பாத்திரத்தில் நடிக்கிறார். அவரது கணவராக நடிப்பவர் தலைவாசல் விஜய். குடும்பத்தில் நடக்கும் பெரிய பிரச்சனைகளையெல்லாம் குடும்பத்தலைவியான ரேவதி எப்படி சமாளிக்கிறார் என்பதுதான் கதை. தற்போது இந்த தொடரின் படப்பிடிப்பு நடந்து வருகிறது. விரைவில் ஒளிபரப்பாகும்.

சமூக வலைத்தளங்களில் /deepamlive



# வண்ணத் திரை

## வடிவேலுவின் தம்பி விஜய்!

பெப்ஸி வேலைநிறுத்தம் காரணமாக விஜய் நடித்த மெர்சல் படப்பிடிப்பு தாமதமாகி வந்தது. படத்தின் இறுதிக்கட்ட பணிகள் நெருங்கிய சமயத்தில் இந்த வேலைநிறுத்தம் ஆரம்பித்து, படப்பிடிப்பு தாமதமாகியது. பெப்ஸி வேலைநிறுத்தம் முடிந்ததும் கடந்தவாரம் மீண்டும் படப்பிடிப்பு ஆரம்பித்தது. நகைச்சுவை நடிகர் வடிவேலுவை முதன்முறையான குணசித்திர நடிகராக்கியுள்ளார் அட்லி. இதற்கு முன் சில படங்களில் குணசித்திர வேடங்களில் நடித்திருந்தாலும் அதில் காமெடி காட்சிகளும் கலந்திருந்தன. அப்பா வேடத்தில் நடித்துள்ள விஜய்க்கு அண்ணாவாக நடித்துள்ளார் வடிவேலு. வடிவேலுவின் மனைவியாக கோவை சரளா நடித்துள்ளார்.

## ஓவியாவிற்கு பிறகு இவரா?

துருவங்கள் பதினாறு படத்தில் யஷிகா ஆனந்தை மறந்திருக்க மாட்டீர்கள். பிக்பாஸ் சீசன் இரண்டில் கலந்து கொள்வாராம். முதல் பாகத்தில் கலந்து கொள்ள அழைப்பு வந்ததாகவும், படப்பிடிப்புக்கள் காரணமாக கலந்து கொள்ள முடியாமல் போய்விட்டதாகவும் கூறியிருக்கிறார். இரண்டாம் பாகத்தில் கட்டாயம் கலந்து கொள்வேன் கூறியுள்ளார். ரசிகர்களே, யஷிகா ஆர்மியை உருவாக்க ரெடியாகுங்கள்!

## சிம்புவிற்கு குரு பெயர்ச்சி!

மணிரத்தினத்தின் அடுத்த படத்தில் விஜய் சேதுபதியுடன் சிம்பு நடிப்பது உறுதியாகி விட்டது. இது குறித்து டி.ராஜேந்தர் பேசியிருக்கிறார் மணிரத்னத்தின் அண்ணன் ஜி.வியும் நானும் நெருங்கிய நண்பர்கள். மணிரத்னமும் நண்பர்தான். குரு பெயர்ச்சி தினத்திலன்று மணிரத்னம் தன்னை வந்து பார்க்க சொன்னதாக சிம்பு சொன்னார். மணிரத்னமும் குரு ஸ்தானத்தில் இருப்பவர்தான், உன்கு சரியென்றால் போய் பார்த்து விட்டு வா என்றேன்" என கூறியுள்ளார். சிம்பு, நயன்தாரா நடித்த இது நம்ம ஆளு படத்தை தெலுங்கில் டப்பிங் செய்து வெளியிடவுள்ளாராம். தமிழில் சூரி நடித்த 40 நிமிட காட்சிகள் தெலுங்கு காமெடியன் ஒருவரை வைத்து மீள்படப்பிடிப்பு செய்யப்பட்டுள்ளது.

## அக்சன் ஹீரோவிற்கு வந்த நிலைமை!

சங்கரின் பாய்ஸ் படத்தில் அறிமுகமான ஐந்து பாய்ஸில் ஒருவர் பரத். காதல் படத்தின் மூலம் பேசப்பட்டார். சில பல படங்களில் நடித்துக் கொண்டிருந்தவர், சொந்த செலவில் சூனியம் வைப்பதை போல, சின்னத்தளபதி என்ற அடைமொழியுடன் அக்சன் ஹீரோவாகினார். இயல்பான வேடத்தில் நடித்துக் கொண்டிருந்தவர் அக்சன் அவதாரம் எடுத்ததை மக்கள் ரசிக்கவில்லை. எல்லா படங்களும் தோல்வி. இதையடுத்து ஹீரோ அவதாரத்தை விட்டு, நல்ல வேடங்களை தேர்வுசெய்து நடித்து வருகிறார். அப்படித்தான் ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கிய ஸ்பைடர் படத்திலும் நடித்து முடித்திருக்கிறார். மெயின் வில்லன் எஸ்.ஜே.சூர்யா திட்டமிடுவதை செய்து முடிக்கும் அடுத்த வில்லனாக நடித்துள்ளார்.

## சாய்னாவாகிறார் ஷிரத்தா!

சாஹூ படத்தில் தற்போது ஒப்பந்தமாகியுள்ளார் ஷிரத்தா கபூர். இந்த படம் முடிந்ததும் இந்தியாவின் தங்கமங்கை சாய்னா நெய்வாலின் வாழ்க்கை சரித்திரத்தில் நடிக்கவுள்ளார். கடந்த வாரம் சாய்னா வீட்டிற்கு சென்ற ஷிரத்தா கபூர் பட்மிண்டன் பயிற்சியும் சாய்னாவிடம் பெற்றுள்ளார். அத்துடன், சாய்னாவின் தாயார் சமைத்துப் போட்ட ஹைதராபாத் பிரியாணியையும் ஒரு கட்டுகட்டியிருக்கிறார். கொஞ்ச நேரம்தான் சாய்னா வீட்டில் அவர் தங்கியிருந்தாலும், அந்த சந்திப்பு மறக்க முடியாததென ஷிரத்தா கூறியுள்ளார்.

## பியாவின் மச்ச முத்தம்!

ஆசியாவின் முதல் பெண் ஒளிப்பதிவாளர் பி.ஆர். விஜயலட்சுமி நீண்ட இடைவெளிக்கு பின்னர் இயக்கியுள்ள அபியும் அனுவும். இதில் மலையாள



ஓவியாவிற்கு பிறகு இவரா?

துருவங்கள் பதினாறு படத்தில் யஷிகா ஆனந்தை மறந்திருக்க மாட்டீர்கள். பிக்பாஸ் சீசன் இரண்டில் கலந்து கொள்வாராம். முதல் பாகத்தில் கலந்து கொள்ள அழைப்பு வந்ததாகவும், படப்பிடிப்புக்கள் காரணமாக கலந்து கொள்ள முடியாமல் போய்விட்டதாகவும் கூறியிருக்கிறார். இரண்டாம் பாகத்தில் கட்டாயம் கலந்து கொள்வேன் கூறியுள்ளார். ரசிகர்களே, யஷிகா ஆர்மியை உருவாக்க ரெடியாகுங்கள்!

பார்வதி சர்மா

## ஜெயம் ரவியின் புது உத்தி!


வனமகன் படத்தை தொடர்ந்து சக்தி சௌந்தரராஜன் இயக்கும் டிக் டிக் டிக் படத்தில் நடித்து வருகிறார். விண்வெளியில் நடக்கும் ஹாரர் கதையிது. படம் முழுக்க வானவீதிகளில் நடக்கும் கதை என்பதால் ஏஞ்சல்ஸ் கெட்டப்பில் வெள்ளை நிற உடையணிந்து நடித்திருக்கிறார். ஜெயம் ரவியின் ஜோடி நிவேதா பெத்துராஜ். டிசம்பர் மாதம் படம் வெளியாகிறது. படத்தின் இறுதிக்கட்ட பணிகள் நடந்து வருகிறது. தீபாவளிக்கு ரிலீசாகும் விஜய்யின் மெர்சல் படம் திரையிடப்படும் தியேட்டர்களில் டிக் டிக் டிக் படத்தின் ட்ரெய்லர் மற்றும் டீசர் வெளியிட தீர்மானித்துள்ளனர்.

கு.நக்கீரன்
உளவள ஆலோசகர்



# மனமே நலமா?

## உங்கள் சந்தேகங்களை கேளுங்கள்



**பெண் (வயது 23)**
**பளை**

**கேள்வி: எனது மாமா மகனை ஆறு மாதமாக காதலிக்கிறேன். இப்போது வீட்டுக்குத் தெரிந்து கடும் எதிர்ப்பாக உள்ளது. நாங்கள் வீட்டை விட்டு சென்று திருமணம் செய்ய விரும்புகின்றோம். அவர் சொந்தமாக ஸ்ரிக்கர் பிரிண்டிங் கடை வைத்துள்ளார். சொந்தத்தில் திருமணம் செய்வது நல்லதல்ல என நண்பிகள் பயமுறுத்துகிறார்கள். நான் என்ன செய்வது?**

பதில்: அன்புச்சகோதரி! உங்கள் திருமணம் தொடர்பாக பல்வேறுபட்ட மனக்கிலேசங்களுடன் நீங்கள் இருப்பது தெளிவாகிறது. உங்கள் வயது திருமணத்துக்கு மிகப்பொருத்தமான வயதே. உங்கள் மச்சானை ஆறுமாதமாக காதலித்துள்ளீர்கள். இப்போது வீட்டுக்கு தெரிந்து கடும் எதிர்ப்பாக உள்ளதாக கூறியுள்ளீர்கள். அதற்கான காரணம் என்னவென்று கூறவில்லையே. பொதுவாக காதல் என்பதற்கான எதிர்ப்பாக இருந்தால் சரிசெய்து கொள்ளலாம். ஆனால் உங்கள் வீட்டாரின் எதிர்ப்புக்கு ஏதாவது பழைய புரையோடிப்போன, ஆழமான பழைய நோக்கள் ஏதும் காரணமாக இருப்பின் உங்கள் , திருமணம் சில வேளைகளில் தொடரும் துன்பமாகவும் அமையலாம். மாறாக புதிய அன்னியோன்னிய யுகத்திற்கும் அழைத்துச்செல்லலாம். எல்லாம் காலத்தைப் பொறுத்தது.

அடுத்து வீட்டை விட்டு ஓடிப்போய் திருமணம் செய்வது என்பது, முற்றிலும் முட்டாள்தனமான காரியம். திருமணம் என்பதன் நோக்கம் ஊர், உறவுகள் கூடி மகிழ்ந்து உறவுகளை வலுவூட்டவதே. தனியே ஆண், பெண் சேர்க்கை என்பது மட்டும் அல்ல. ஊர், உறவுகள் கூடி இவ்விருவரின் இணைவுக்கும் சாட்சிகளாக இருக்கிறார்கள். ஏன் எமது இந்து சமயத்தில் இதற்கு மேலதிகமாக சூரியனை, சந்திரனை, அக்னியை எல்லாம் சாட்சிக்கு அழைத்தே திருமணத்தை செய்கிறார்கள். அப்படி எதுவித சாட்சிகளும் இல்லாமல் இருவர் மட்டுமே ஓடிச்சென்று உறவுகொண்டு, பின்னர் சிக்கல்கள் வரும்போது ஊர், உறவுகள் சிக்கல்களைத் தீர்க்க உதவிக்கு வராது. இறுதியில் நீதிமன்றத்திலேயே நிற்கவேண்டி வரும். இதுதான் இன்று எமது பிரதேசத்திலே தாராளமாக நடைபெறுகிறது. நீதி, சட்டம், ஒழுங்கு, பண்பாடு, கலாச்சாரம் எதுவும் இல்லாமல் ஒரு ஆணும் பெண்ணும் இணைய மனம்கொண்டால் ஆண்கள் இல்லா இடம் சென்று இணைந்து குடும்பம்? நடத்துகிறார்களாம். இவர்களில் அநேக மானவர்களின் இந்த குடும்ப விளையாட்டு அதிகமாக சில நாட்கள் தொடக்கம் சில மாதங்கள் வரையே. எனவே உங்களுக்கும் சில வேளைகளில் அப்படி ஒரு நிலை வராது என்பது என்ன நிச்சயம்? எனவே ஓடிப்போகும் சிந்தனையை கைவிடுங்கள்.

அடுத்து மாமா மகனைத் திருமணம் செய்வது உண்மையில் உயிரியல் லீறிதியாக ஆரோக்கியம் அற்ற ஒரு விடயமே. ஏனெனில் மீள் உற்பத்தியாக்க செயற் பாட்டில்,' வெவ்வேறு தொடர்பில்லாத புதிய இயல்புகளின் சேர்க்கையே நல்ல ஒரு வெளியீட்டைத்தரும். ஆனால் உங்கள் மாமாவின் பரம்பரை இயல்புகளும், உங்கள் அம்மாவின் இயல்புகளின் ஒரு வகையே. ஏனெனில் ஒரு பெற்றோரின் பிள்ளைகளே. எனவே இவர்களின் பிள்ளை களான உங்களின் பரம்பரை இயல்பு களும் ஒரேவிதமானவையே. எனவே நீங்கள் இருவரும் திருமண பந்தத்தில் இணை யும்போது, உங்களின் பிள்ளைகளும் அதே இயல்புகளுடனே மீளமீள இணைக் கப்படுகிறார்கள். இவ் மீளிணைப்பு மருத்து வாறிதியாக ஆரோக்கியமான ஒரு சந்ததியை தோற்றுவிக்காது என்பதுடன், சிலபல பிறப்புக் குறைபாட்டு நோய்களைக்கூட உருவாக்கலாம். எனவே உண்மையில் இரத்த உறவுகள் திருமணபந்தம் மூலம் குழந்தைகளைப் பெறுவதை பொதுவாக மருத்துவமனை அனுமதிப்பதில்லை.

ஆக மொத்தத்தில் உங்களின் இந்தக் காதலும் அது தொடர்பான திருமண பந்தமும் அவ்வளவு சிறப்பான வரவேற் புக்குரிய தகைமைகளைக் கொண்டிருக்க வில்லை. சொந்தமாக ஒரு "ஸ்ரிக்கர்" கடை நடத்துகிறார் என்பது ஒரு சிறப்பான தகைமை அல்லவே. எனவே அவரின் மனப்பாங்கு, நற்பண்பு, எதிர்காலத்தில் எப்படி குடும்பத்தை கையாளுவார் என்பது போன்ற பல்வேறு விடயங்களையும் சீர்தூக்கிப்பார்த்து உமது காதலனுக்கு உம்மைவிட பொருத்தமான ஒரு காதலி அமையுமெனில் இதைக்கைவிடுவதே உசிதம். எதற்கும் "தெரிந்த பேய் தெரியாத பிசாசைவிட மேல்" எனும் தத்துவத்தையும் ஒருமுறை யோசியுங்கள். எல்லாம் நல்லதாக நடக்கும். "ஊழிற் பெருவலி யாவுள்? மற்றொன்று சூழினும் தான் முற்றும்" என்ன செய்வது?

**பரதன்; (வயது 36)**
**வட்டுக்கோட்டை**

**கேள்வி: நான் சாதாரண கடவுள் நம்பிக்கை உள்ளவன்தான். பூமியில் உள்ள மற்ற உயிரினங்களை கொல்லக் கூடாது என நினைப்பவன். கடந்த சில வருடங்களாக இந்த மனநிலை அதிகரித்து, மாமிசத்தை தவிர்த்துவிட் டேன். நடக்கும்போது, Bike ஓடும் போது எறும்புகளை மிதிக்ககூடாதென நினைக்கின்றேன். வீடு கூட்டும்போது எறும்புகளை கூட்டி, கூட்டத்தை விட்டு தனித்துவிடக்கூடா தென நினைத்து செயற்படுகின்றேன். காய விட்ட உடுப்பை எடுத்தவரும்போது, அதில் பூச்சிகள் இருந்தால், திருப்பி அந்த இடத்திலேயே கொண்டு விடுகின்றேன். எனது இந்த இயல்பை பார்ப்பவர்கள் சிரிக்கின்றார்கள். என்னை ஒரு மாதிரி பார்க்கின்றார்கள். இது சாதாரண இயல்பா? அல்லது வேறு சிகிச்சைகளிற்கு போகவேண்டுமா? என பயமாக உள்ளது.**

பதில்: அன்புச்சகோதரா! உமது கேள்வியை பார்க்கும்போது நீர் முற்று முழுதாக ஒரு குழம்பியநிலை தெளிவாகத் தெரிகிறது. நான் நினைக்கின்றேன், நீர் ஆன்மீகப்பாதையில் வேகமாகப் பயணிக்க எத்தனிக்கின்றீர் போலத் தெரிகிறது. ஏனெனில் சரியான குருவின் வழிகாட்டலின்றி ஆன்மீகப்பாதையில் பயணிக்க எத்தனிப்பவர்கள் பொதுவாக இந்த மாதிரியான பிரச்சினைகளை எதிர்கொள்வதுண்டு. நான் அறிந்திருக்கின் றேன், சிலர் ஆன்மீகப்பயணத்தின் ஒரு கட்டத்தில் தற்கொலை செய்துகொள்வது முண்டு. பித்துத்பிடித்து அலைவதுமுண்டு.

கடவுள் நம்பிக்கை என்பது என்ன? "அவனின்றி ஒரு அணுவும் அசையாது" எனும் அறிவைப்பெறுதல் என்று கூறலாம். அண்ட சராசரங்களின் இயக்கத்துக்கும் பொறுப்பான ஒரு சக்தியே கடவுள். இந்த சக்தியே பூகம்பத்தையும் உருவாக்குகிறது. பூவையும் மலர்விக்கின்றது. ஆக்கமும் அதனாலேயே, அழிவும் அதனாலேயே. அந்த இயற்கைசக்தி, உண்மைசக்தி, சத்தியமான நித்தியசக்தி. தன்பாட்டிற்கு காரியம் ஆற்றிக்கொண்டிருக்கிறது. அதைப் புரிதலே கடவுள் நம்பிக்கை எனப்படும். அந்தக் கடவுள் நம்பிக்கை என்பதன் அடிப்படையில் வாழ்தல் என்பது ஒரு ஞானநிலையான வாழ்க்கை.

ஆனால் நீர் குறிப்பிட்ட விடயங்கள் ஒரு வாழ்வியல்முறை தொடர்பானது. அதாவது நீர் ஒரு அகிம்சைவாதியாக வாழ முனைகின்றீர். அதாவது பிற உயிர்களுக்கு தீங்கு புரியாமல் வாழ்தல் என்பதைக் குறிப்பிடலாம். பிற உயிர்னளுக்கு துன்பம் அல்லது தீங்கு விளைவிக்காது வாழ்த்ல் என்பது முற்றிலும் முடியாத ஒரு விடயம். ஏனெனில் உமது பிறப்பே உமது தாயின் துன்பத்திலேயே தொடங்கியது. ஒரு உயிரின் வாழ்வு இன்னொரு உயிரின் துன்பத்தில் தங்கியிருப்பதும் இயற்கை நியதியே. மானின் இறப்பிலே புலியின் வாழ்வு. மரத்தின் இறப்பிலே மானின் வாழ்வு. மரம், செடி, கொடிகளுக்கும் உயிர் உண்டுதானே. மரத்தின் இலையை/கிளையை வெட்டினால் மரம் வாடுகின்றதே. மனிதன் மனம் வாடுதலும், மரம் வாடுதலும் ஒன்றே.

அகிம்சைவாதி காந்தி கூறியிருக்கின்றார், "Least vialence is the non-violence" அதாவது ஒரு மனிதன் அகிம்சையைக் கடைப்பிடிக்கவேண்டுமெனில் மிகக் குறைந்தளவு இம்சையை செய்ய முயல வேண்டும். எண்ணம், சொல், செயல் மூன்றாலும் (திரிகரணங்கள்) இன்னொரு உயிருக்கு தீங்கு செய்யாமல் இருக்ககூடியளவு முயன்றால் அது ஒருசிறந்த மனிதவாழ்வு. உன்னதமான மனிதனாக வாழ இது போதும். ஆனால் இறைவன் மீது நம்பிக்கை என்று கூறிக்கொண்டு எறும்பை காலால் நசித்துவிடுவோமோ? என்று குனிந்து ஏறும்பைத்தேடி நடந்தால் அவரை அந்தக் கடவுளே பார்த்து சிரிப்பார். உயிர்களுக்கு தீங்கு செய்யக்கூடாது என்பதற்காக நீர் செய்வதுபோல எல்லாம் செய்ய முயற்சித்தால் சமூகம் உம்மை "முழுவிசரன்" எனப்பட்டம் சூட்டி வைத்தியசாலைக்கு ஏற்றிவிடுவார்கள். உமது தத்துவத்தின்படி பார்த்தால் நெல்லை அறுவடை செய்வதும் பாவம், கத்திரிக்காயை வெட்டுவதும் பாவம், ஏன் சுவாசிப்பது கூட பாவம்தான். ஏனெனில் நீர் சுவாசிப்பதால் இன்னொருவருக்கு காற்று போதாமல் போகிறது என்பது உமக்குத் தெரியுமா? நீர் நீர் குடிப்பதால் இன்னொருவருக்கு நீர் வற்றிப்போகிறது தெரியுமா? இப்படியெல்லாம் யோசிக்க லாமா? அன்புச்சகோதரா!

எனவே கடவுள் நம்பிக்கை எனும் பெயரில் வாழ்க்கையை கேலிக்கூத்தாக்கி விடாமல், அன்றே எந்தன் ஆவிஉடைமை எல்லாம், குன்றே எனையாண்டபோதே கொண்டிலையோ? எனும் திருவாசகப்படி இறைவனிடம் பூரணசரணாகதியாகி எல்லாம் உன் செயல் இறைவா! என்று பூரணமாக நம்பி மனிதாபிமானம், பண்பாடு, நேர்மை, ஏனையவருக்கு தேவையானபோது உதவுதல் போன்ற நல்ல இயல்புகளை கைக்கொண்டு சுவாசிக்கின்ற ஒவ்வொரு தடவையும் இறைவனின் பிரசித்தத்தையும் மனதில் கொண்டு வாழ்வீர்களேயானால் அதுவே போதுமான மேலான வாழ்வு. ஒரு குழப்பமும் வேண்டாம்எல்லாம் அவன் செயல் உணர்ந்து கொள்ளும்.







எம்.ஜி.ஆர்
100
நெடுந்தொடர் 74

# குழந்தை உள்ளம்!

ஸ்ரீதர் சுவாமிநாதன்

**எம்.ஜி.ஆர்.** நாட்டின்எதிர் காலச் செல்வங்களான குழந்தைகள் மீது மிகுந்த அன்பு வைத்திருந்தார். நல்ல கருத்துக்களை குழந்தைகளுக்குச் சொல்வதோடு, தவறு செய்தாலும் அன்பால் அவர்களை திருத்த வேண்டும் என்பதில் கவனமாக இருந்தார்.

எம்.ஜி.ஆர் தனது மானசீக குருவாகக் கருதியவர்களின் திரையுலக மேதை வி.சாந்தாராம் முக்கியமானவர். எம்.ஜி.ஆர் முதல்வராக இருந்தபோது, தமிழக அரசின் சார்பில் சென்னை கலைவாணர் அரங்கில் குழந்தைகள் திரைப்பட விழா கொண்டாடப்பட்டது. குழந்தைகள் படச் சங்கத்தின் தலைவராக அப்போது இருந்த சாந்தாராமும் விழாவில் கலந்து கொண்டார். எம்.ஜி.ஆர் பேசத் தொடங்கும்போது, "எனது மானசீக ஆசான் சாந்தாராம் அவர்களே!" என்று அழைத்து பெருமைப்படுத்தினார்.

குழந்தைகளுக்கான படங்களின் தேவையைப் பற்றி எம்.ஜி.ஆர் அருமையாக உரையாற்றினார். குழந்தைகள் மனதில் விபரீத எண்ணங்கள் தோன்றக்கூடாது என்றும் அதை விளக்க, தான் படித்த தமிழாக்கம் செய்யப்பட்ட வங்கமொழி சிறுகதையையும் கூறினார்.

கதையின் களம் வங்கத்திலே இந்து முஸ்லிம் கலவரம் நடந்து கொண்டிருந்த சமயம். இரண்டு குழந்தைகள். ஒன்று இந்து, மற்றொன்று முஸ்லிம். இருவரும் நெருங்கிய நண்பர்கள். தினமும் விதவிதமாய் விளையாடி மகிழ்வார்கள். ஒருநாள் இன்று என்ன விளையாடுவது? என்று அவர்களுக்குள் விவாதம்.

"அப்பா அம்மா விளையாட்டு" என்று யோசனை கூறியது ஒரு குழந்தை.

"எத்தனை முறைதான் அதையே விளையாடுவது? அலுத்துவிட்டது" என்றது மற்றொரு குழந்தை.

"சமையல் விளையாட்டு"

"ஊகூம், வேண்டாம்"

பல விளையாட்டுக்களைப் பற்றி விவாதித்த பின்னர் இறுதியில் ஒரு குழந்தை கேட்டது, "கத்தி எடுத்து ஒருவரை ஒருவர் குத்திக் கொண்டு விளையாடலாமா?".

அந்தக் குழந்தையின் கேள்வியோடு கதை முடிகிறது. இந்தக் கதையை எம்.ஜி.ஆர் குறிப்பிட்டு, குழந்தைகளுக்கு முன்மாதிரிகளான நாம் எப்படி ஒற்றுமையாகவும் அன்போடும் இருக்க வேண்டும் என்பதையும் நல்ல சூழலில் குழந்தைகள் வளர வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டினார். "குழந்தை உள்ளத்தை நன்கு அறிந்தவர்கள் அவர்களுக்கான படம் எடுக்க வேண்டும். அதற்கு சாந்தாராம் பொருத்தமானவர்" என்று பாராட்டினார்.

1967ம் ஆண்டு ஜனவரி 8ம் தேதி. மதுரையில் திமுக பிரமுகர் ஒருவருடைய மகளின் பரத நாட்டிய அரங்கேற்றம், சவுராஷ்டிரா உயர்நிலைப் பள்ளியில் நடக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்போது, சட்டப்பேரவைக்கு தேர்தல் அறிவிக்கப்பட்ட நேரம். திமுகவுக்கு ஆதரவாக தமிழகம் முழுவதும் எம்.ஜி.ஆர் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தார்.

ராமநாதபுரத்தில் தேர்தல் பிரசாரத்தில் இருந்த எம்.ஜி.ஆர், விழாவுக்கு வருவாரா என்று சந்தேகம். இரவு ஏழு மணி ஆகியும் எம்.ஜி.ஆர் வரவில்லை. நாட்டிய அரங்கேற்ற நிகழ்ச்சி தொடங்கியது. கூட்டத்தினருக்கு ஏமாற்றம்.

சற்று நேரத்தில் தெப்பக்குளம் பகுதியில் இருந்து விரைவாக வந்த எம்.ஜி.ஆரின் கார், விழா நடந்த பள்ளி மைதான வளாகத்துக்குள் நுழைந்தது. இரவில் வந்த சூரியனைப் போல் வெளிச்ச மனிதராய் காரில் வந்த எம்.ஜி.ஆரைக் கண்ட கூட்டம் ஆர்ப்பரித்தது. பெரியவர்களே உற்சாகத்தின் உச்சிக்குச் சென்றபோது, சிறுவர்களைப் பற்றி கேட்க வேண்டுமா? திடீரென இரண்டு சிறுவர்கள் எம்.ஜி.ஆர் வந்த காரின் ஜன்னலில் கையை விட்டு தொங்கியபடி வந்தனர். சிறிது தூரம் சென்று மேடை அருகே கார் நின்றது.

காரில் இருந்து கோபத்துடன் வேகமாக இறங்கிய எம்.ஜி.ஆரைப் பார்த்து, காரில் தொங்கியபடி வந்த சிறுவர்கள் ஓட முயன்றனர். அந்த சிறுவர்களின் கைகளை சடாரென பிடித்துக் கொண்ட எம்.ஜி.ஆர், அவர்களை ஓங்கி அறையப் போவதுபோல கையை ஓங்கினார். ஆனால், அடிக்கவில்லை. அந்த சிறுவர்களைப் பார்த்து, "ஏன் இப்படி காரில் தொங்கிக் கொண்டு வந்தீர்கள்? கொஞ்சம் தவறியிருந்தால் விபரீதமாகியிருக்குமே? உங்கள் பெற்றோருக்கு யார் பதில் சொல்வது? இனிமேல் இப்படி செய்வீர்களா?" என்று அதட்டலாக கேட்டுக் கொண்டிருந்த போதே பயத்தில் சிறுவர்கள் அழ ஆரம்பித்துவிட்டனர்.

அதற்குள் கூட்டம் எம்.ஜி.ஆரை சுற்றி நெருக்கியது. அவரை பாதுகாப்பாக அழைத்துச் சென்று முன்வரிசையில் அமர வைத்தனர். நாட்டிய நிகழ்ச்சியை எம்.ஜி.ஆர் ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது ஒரு சிறுமி தன் தாயின் பிடியில் இருந்து விடுபட்டு எம்.ஜி.ஆரை நோக்கி வர முயற்சித்தாள். அருகில் இருந்தவர்கள் அந்த சிறுமியை தடுத்தனர். இதை கவனித்த எம்.ஜி.ஆர், அந்த சிறுமியை அருகில் அழைத்தார். வெட்கத்துடன் வந்த சிறுமியை தன் மடியில் உட்கார்த்தி வைத்துக்கொண்டு நாட்டியத்தை பார்த்தார். அந்த சிறுமிக்கு மகிழ்ச்சி ஒருபுறம், எல்லோரும் தன்னையே பார்க்கிறார்களே என்ற வெட்கம் மறுபுறம். புகைப் படங்கள் எடுக்கப்பட்டபோதும் எம்.ஜி.ஆர் மடியில் அமர்ந்தபடி வெட்கத்துடன் நகம் கடித்தபடி இருந்தாள் சிறுமி.

> 'தூங்காதே தம்பி தூங்காதே‌ஞ்', 'திருடாதே பாப்பா திருடாதே‌ஞ்', 'சின்னப் பயலே, சின்னப் பயலே சேதி கேளடா‌ஞ்' என்பன போன்ற, குழந்தைகளுக்கு அறிவுரை சொல்லும் திரைப்படப் பாடல்கள் எம்.ஜி.ஆர் படங் களில்தான் அதிகம் இடம் பெற்றன.

நிகழ்ச்சி முடிந்தபின், நாட்டியம் ஆடிய திமுக பிரமுகரின் மகளை எம்.ஜி.ஆர் பாராட்டி பரிசளித்தார். அவர் பேசும்போது, காரில் தொங்கியபடி வந்த சிறுவர்களின் செயலைப் பற்றிக் கூறிவிட்டு, "குழந்தைகள் அக்கறையாக கவனமுடன் வளர்க்கப்பட வேண்டும்" என்று குறிப்பிட்டார். கார் வந்து கொண்டிருக்கும்போதே கையை விடச் சொல்லி சத்தம்போட்டால் பதற்றத்தில் சிறுவர்கள் கையை விட்டு சக்கரத்தில் மாட்டி விபரீதம் ஆகியிருக்கும் என்பதால்தான் காரில் இருந்து இறங்கிய பின் அவர்களைக் கண்டித்ததாக தெரிவித்தார்.

நிகழ்ச்சி முடிந்து திரும்பும்போது, பயத்துடன் கூட்டத்தில் ஓரமாக நின்று கொண்டிருந்த சிறுவர்களைப் பார்த்த எம்.ஜி.ஆர், சிரித்தபடியே அவர்களின் கன்னத்தை செல்லமாக தட்டிவிட்டு புறப்பட்டார். தங்களது தவறுக்கு மன்னிப்பு கிடைத்துவிட்ட நிம்மதியும் மகிழ்ச்சியும் சிறுவர்கள் முகத்தில் மின்னியது.

எம்.ஜி.ஆர் நடித்த 'நீதிக்குத் தலை வணங்கு' படத்தில் இடம்பெற்ற 'இந்தப் பச்சைக் கிளிக்கொரு செவ்வந்திப் பூவில் தொட்டிலைக் கட்டி வைத்தேன்‌ஞ்' என்ற அருமையான தாலாட்டுப் பாடலில் வரும் வரிகள் இவை...

**'எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான்**
**மண்ணில் பிறக்கையிலே**
**பின் நல்லவராவதும் தீயவராவதும்**
**அன்னை வளர்ப்பதிலே!'**



தொடரும்...

அன்ரனி பாலசிங்கம்

உலகநாயகன் கமல்ஹாசன் அரசியலுக்கு வரப் போகிறார்!

கடந்த சில வருடங்களாக இதற்காக எழுதிய ஸ்கிரிப்டின்படி தன்னைப்பற்றிய இமேஜை உருவாக்கி வந்தவர் கடந்த சில மாதங்களாக உசைன் போல்ட் வேகத்தில் அரசியலை நோக்கி ஓடத்தொடங்கி விட்டார். ஜெயலலிதாவின் மரணம் ஏற்படுத்திய வெற்றிடம் தனக்கான வாய்ப்பை ஏற்படுத்துமென நம்புகிறார். ஸ்ராலினும் அப்படி நம்புகிறார். இன்னும் தொண்டர்களே இல்லாத லொட்டு லொசுக்கு கட்சிகளின் தலைவர்களும் முதலமைச்சர் கனவில் மிதக்கிறார்கள்.

மிதப்பவர்கள் மிதக்கட்டும். நாம் நமது காரியத்தில் கண்ணாயிருப்போம். கமல்ஹாசன் முதலமைச்சரானால் ஈழத்தமிழர்களிற்கு உதவுவாரா?

இன்றைய ஈழத்தமிழர்களின் அரசியலுக்கு தமிழக முதலமைச்சர்களின் அரசியல்ரீதியான ஆதரவு கட்டாயம் அவசியமானது. கருணாநிதியோ, ஜெயலலிதாவோ முதலமைச்சராகியிருந்தால் அது நிச்சயம் கிடைக்கும். தமது நோக்கங்களிற்காக அதை அவர்கள் செய்தாலும், இனப்படுகொலை தீர்மானம் போல சில அதிரடிகளை காட்டி அசரவைப்பார்கள்.

இப்பொழுதுதான் தமிழக முதல்வர்கள் அரசியல்ரீதியான உதவியுடன் நின்று விடுகிறார்கள். முன்னொரு காலத்தில் பொருளாதார உதவிகளும் தாராளமாக செய்தார்கள். இதில் எம்.ஜி.ஆர் முதன்மையானவர். புலிகளிற்கு அள்ளிஅள்ளி கொடுத்தவர். ரெலோ போன்ற இயக்கங்களிற்கு கருணாநிதியும் சில பல உதவிகள் செய்தார். முதல்வர்கள் மட்டுமல்லாமல், அரசியல் தலைவர்கள் பலரும் இயக்கங்களிற்கு உதவிகள் செய்தனர்.

யாரெல்லாம் உதவி செய்தார்கள்?

எம்.ஜி.ஆர் பற்றி சொல்ல வேண்டிய தில்லை. ஈழத்தமிழர்களிற்கு அரசியல் ரீதியான ஆதரவாகட்டும், பணரீதியான ஆதரவாகட்டும் எதுவென்றாலும் தயங்காமல் தாராளமாக வழங்கியவர் அவர். ஒருமுறை புலிகளிற்கு பண நெருக்கடி ஏற்பட்டபோது நான்கு கோடி ரூபாவை அள்ளிக்கொடுத்தார். இப்படி பல சம்பவங்கள்.

எம்.ஜி.ஆர் காலத்தில் சினிமாவில் இரண்டு துருவங்கள் இருந்தன. ஒன்று எம்.ஜி.ஆர். மற்றையது சிவாஜி கணேசன். திரையில் மட்டுமல்ல, நிஜத்திலும் எம்.ஜி.ஆரிற்கு நேர்எதிரான துருவம்தான் சிவாஜி கணேசன். சாப்பிட்ட கையால் காகம் கலைக்காத ஆள் என்பார்களே... அப்படியானவர். யாருக்கும் இலேசில் காசு கொடுக்கமாட்டார். இந்த இயல்பால்தான் பொதுவாழ்வில் அவரால் ஜொலிக்க முடியவில்லை.

சினிமாவில் மாமேதையான அவர் ஏனைய துறைகளில் கற்றுக்குட்டி குறிப்பாக அரசியலில். எம்.ஜி.ஆர் அரசியலில் உச்சத்திற்கு வந்ததன் பின்னர் சிவாஜியும் அரசியலுக்கு வந்தார். எம்.ஜி.ஆர் போராடி அடைந்த உச்சம் அது. சினிமாவில் கிடைத்த புகழின் மூலம் அப்படியொரு உச்சத்தை தொட சிவாஜி நினைத்தார்.

1960ஆம் ஆண்டு முதலே காங்கிரஸ் உறுப்பினராக இருந்து வந்தாலும், தீவிர அரசியலில் ஈடுபட்டதில்லை. 1980களின் நடுப்பகுதியின் பின்னர்தான் தீவிரமாக அரசியலில் ஆர்வம் காட்டினார். அவர் அரசியலில் இருக்கிறார் என்பதே அப்போதுதான் தெரிந்தது. அதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. இந்திரா காந்தி இருந்தவரை சிவாஜிக்கு பிரச்சனையில்லை. தமிழக விடயங்களில் சிவாஜியுடனும் ஆலோசித்தார். அவர் மரணமான பின்னர் ராஜிவ் காந்தி அப்படி நடக்கவில்லை. சிவாஜி பற்றிய உயர்வாத மதிப்பீடு ராஜிவிடம் இருக்கவில்லை. ஆள் நடிகன்தானே என்றுதான் நினைத்தார்!

தன்னை ராஜிவ் காந்தி கணக்கெடுக்கவில்லையென்ற கோபம் சிவாஜியிடம் இருந்தது. 1989 சட்டமன்ற தேர்தலில் அதிமுக இரண்டாக பிளவுபட்டு நின்றது. யாருடன் கூட்டணி அமைக்கலாமென காங்கிரஸ் யோசிக்க... ஜானகி அணியை சிவாஜி கைகாட்டினார். ராஜிவ் காந்தியின் தெரிவு ஜெயலலிதா. இதனால் கோபமடைந்த சிவாஜி ஆரம்பித்ததுதான் தமிழக முன்னேற்ற முன்னணி. ஆரம்பித்த வருடத்திலேயே கலைக்கப்பட்டது வேறு கதை. என் தமிழ் மக்கள் என்ற படத்தை தயாரித்து ராஜிவ் காந்தியை போட்டுத்தாக்கியிருந்தார் சிவாஜி கணேசன்.

தமிழக முன்னேற்ற முன்னணி தலைவர் சிவாஜி கணேசனிற்கு இலங்கை பிரச்சனை பற்றி பெரிதாக ஒன்றுமே தெரியாது. சாதாரண பொதுமக்கள் அவரைவிட அதிகமாக இலங்கைப் பிரச்சனையை அறிந்து வைத்திருந்தனர்.

இந்திய அமைதிகாக்கும்படை இலங்கையில் அட்டூழியம் செய்கிறதென தமிழகத்தில் கடுமையான எதிர்ப்பு எழுந்த சமயத்தில் தமிழக முன்னேற்ற முன்னணி ஒரு பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தியது.

இதில் ராஜிவ் காந்தியை குறை சொல்வதிலேயே அதிக நேரத்தை செலவிட்ட சிவாஜிக்கு, பிரபாகரனின் பெயர் நினைவுக்கு வரவில்லை.

“அங்கு புலிகள் நன்றாக சண்டை பிடிக்கிறார்கள். அதை வழிநடத்தும் அந்த தம்பி... அவர் பெயர்” என சிவாஜி தடுமாறிக்கொண்டிருக்க, பக்கத்தில் உட்கார்ந்திருந்தவர்தான் பிரபாகரன் என முணுமுணுக்க, “ஆமா... பிரபாகரன். அந்த தம்பிதான்” என்றார்.

“இந்தியப்படைகள் தமிழர்களை கொல்கிறார்கள். அதுதான் மோதல் ஆரம்பித்தது” என்ற விளக்கமும் கொடுத்தார்.

தமிழக முன்னேற்ற முன்னணியை கலைத்தபின்னர், வி.பி.சிங் தலைமையிலான ஜனதா தளம் கட்சியில் சிவாஜி கணேசன் இணைந்து கொண்டார். கட்சியின் தமிழக பிரிவுக்கு தலைவரானார்.

இந்த சந்தர்ப்பத்தில் ஒரு சுவாரஸ்ய சம்பவம் நடந்தது. ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியில் இருந்து பிரிந்த டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.டி.பியை ஆரம்பித்திருந்தார். கட்சி முழுமையாக தமிழகத்தில் நிலைகொண்டிருந்தது. புதிய கட்சியென்பதால் பயங்கர பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருந்தார்கள். உதவி கேட்கலாமென நினைத்து சிவாஜியிடம் டக்ளஸ் தேவானந்தா போனார். முகாமில் உணவில்லாததால் போராளிகளின் நெருக்கடியை குறிப்பிட்டு, பணமாகவோ உணவுப்பொருளாகவோ உதவிசெய்ய வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

டக்ளஸ் தேவானந்தா சொல்வதை மிக அக்கறையாக கேட்டுக்கொண்டிருந்த சிவாஜி கடைசியில் சொன்னார் போராளி களிற்கு உதவுவது எங்களது கடமை. இந்த விடயத்தை தலைமைக்கு அறிவித்து, விரைந்து நடவடிக்கை எடுக்க சொல்கிறேன். கவலைப்படாமல் போய்வாருங்கள்!

அதன் பின் சிவாஜியின் தொடர்பே ஈ.பி.டி.பிக்கு கிடைக்கவில்லை.


ஈ.பி.டி.பிக்கு முன்னர் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் உள்ளிட்ட சில அமைப்புக்கள் சிவாஜி கணேசனை சந்தித்து நிதியுதவி பெற முயன்றன. அவர்களை சிவாஜி சந்திக்கவேயில்லை.

நடிகர்கள், அரசியல் தலைவர்களை விட பொதுவாழ்வில் இருந்த பலர் தம்மாலான உதவிகளை ஈழ இயக்கங்களிற்கு செய்தனர். கொளத்தூர் மணி போன்றவர்கள் தமது பண்ணைகளை இயக்கங்களின் பயிற்சிமுகாமாக்கினார்கள். இப்படி ஏராளமானவர்கள் இருக்கிறார்கள்.

நடிப்பில் மட்டுமல்ல, இயக்கங்களிற்கு உதவும் விடயத்திலும் சிவாஜியின் சீடப்பிள்ளைதான் கமல்ஹாசன். அவர் ஈழ இயக்கங்களில் நல்ல அபிப்பிராயமே கொண்டிருக்கவில்லை. 1985இல் ஒரு சம்பவம் நடந்தது. அப்போது ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பு அரசியல் தலைவர்கள், நடிகர்களை சந்தித்து நிதியுதவி கேட்டுக்கொண்டிருந்தது. இந்த பணிகளிற்கு டேவிற்சன் பொறுப்பாக இருந்தார்.

ஈழ இயக்கங்கள் என்றதும் முதலில் சந்திக்கவே கமல் தயங்கினார். டேவிற்சனும் விடாக்கண்டனாக இருக்க, கடைசியில்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...



# பிரபாகரனின் பெயரை மறந்த சிவாஜி கணேசன்...

# டக்ளஸ் தேவானந்தாவை விரட்டிய கமலஹாசன்!

## உலகமகா நடிப்புடா சாமி கதைகள்

**ஈழ இயக்கங்கள் என்றதும் முதலில் சந்திக்கவே கமல் தயங்கினார். டேவிற்சனும் விடாக்கண்டனாக இருக்க, கடைசியில் சம்மதித்தார். ஈ.பி.ஆர்.எல்.எவ் காரர்கள் போராட்டத்தின் நியாயத்தை சொல்லி, பணத்தேவையை சொன்னார்கள். ‘சரி... சரி. கிளம்புங்கப்பா’ என அனுப்பாத குறையாக வெளியில் அனுப்பினார் கமல்.**

11-ம் பக்க தொடர்ச்சி...

தங்கள் சக இலுமினாட்டிகளிடம் தகவல்களைப் பரிமாறுகிறார்கள். அவற்றை decode செய்து கண்டுபிடிப்பது அவ்வளவு சுலபம் அல்ல. இலுமினாட்டிகளின் நடவடிக்கைகளை ஆராய்ந்து, அவர்கள் தகவல்களை decode செய்து மக்களுக்கு வெளியிடும் conspiracy theorists பலர் இருக்கிறார்கள்.

அவர்களது கட்டுரைகள் புத்தகங்கள் மூலம் இணையதளங்கள் வழியே பல நூற்றாண்டுகளாக திரைமறைவில் உலகை ஆட்டிவைத்துக் கொண்டிருந்த இலுமினாட்டி இயக்கம் பற்றிய இரகசியங்கள் இப்போது ஓரளவுக்குக் கசியத்துவங்கி இருக்கிறது.

இணையத்தில் இன்றைய ஹாட் டாபிக் இதுதான். ஆனால் இது கொஞ்சம் ஓவராகவே ஆகிவிட்டது எனவும் சொல்லலாம், கொசு கடித்தால்கூட அதையும் இல்லுமினாட்டி சதி என்று அலறும் பைத்தியங்களும் இன்று பெருகிவிட்டார்கள்.

மலேசிய விமானம் MH370 தொலைந்த அதேநேரத்தில் ரஷ்யா உக்ரேன் பிரச்சனை இன்னொரு பக்கம் நடந்து கொண்டிருந்தது. இரண்டையுமே இலுமினாட்டி சதி என்று பலரும் கூறிவந்தனர்.

ஆனால் அதற்கான ஆதாரம் அப்போது ஒன்றும் சிக்கவில்லை. இலுமினாட்டிகள்தான் சொல்லி அடிப்பவர்களாயிற்றே இதுபற்றி ஏதாவது முன்கூட்டியே சொல்லி வைத்திருக்கிறார்களா என்று ஆராய்ந்து சில conspiracy theoristகள் சில திடுக்கிடும் தகவல்களை இணையத்தில் வெளியிட்டிருந்தார்கள். அந்தத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டுதான் இந்தக்கட்டுரை எழுதப்பட்டிருக்கிறது.

இலுமினாட்டிகளின் மதத்தில் Poseidon என்ற ஒரு நெப்டியூன் கடவுளுண்டு, இது கடலுக்குரிய கிரெக்கக் கடவுளாகும். இதன் கையில் ஒரு மும்முனை குத்தீட்டி வைத்திருக்கும். அந்த மும்முனை குத்தீட்டி(Trident) அதிகாரத்தின் அடையாளமாகும்.

உலகத்தின் அதிகாரம் கடவுளிடமிருந்து சைத்தானுக்கு கைமாறுவதை கொண்டாடும் விதமாக கடல் தெய்வமான நெப்டியூனுக்கு கடலில் நடத்தும் ஒரு சடங்காகவும் 2014ஆம் ஆண்டில் இந்த மும்முனை குத்தீட்டி சின்னத்தை(Trident) எல்லோருடைய ஆழ்மனதிலும் பதிக்கும் விதமாகவும் அதை உலகம் முழுவதிலும் பிரபலப்படுத்துவது இவர்கள் நோக்கம்.

மக்களது ஆழ்மனதில் இதை ஏன் பதிய வைக்க வேண்டும் என்று conspiracy theoristகளைக் கேட்டால் அவர்கள் இலுமினாட்டிகளை mind manipulators என்று அழைக்கிறார்கள். இவர்கள் இன்று உலகத்தை ஆண்டு கொண்டிருப்பதே மக்களை உளவியல் ரீதியில் மூலம் mind control செய்துதானாம்.

2014ஆம் ஆண்டில் தங்கள் மும்முனை குத்தீட்டி செய்யப்போகும் காரியத்தை மசெராட்டி என்ற புகழ்பெற்ற இத்தாலிய கார் விளம்பரத்தில் ஏற்கனவே சொல்லி விட்டார்கள். We have prepared, now we strike என்று தெளிவாகவே சொல்லுகிறார்கள். உடனே மும்முனை குத்தீட்டி சின்னம் பொறித்த கார் நம்மை நோக்கி சீறிப்பாய்ந்து வருகிறது.

அடுத்து MH370க்கு நேரப்போவதை முன்கூட்டியே 2013 இல் வெளியான Man of Steel என்ற ஹாலிவுட் படத்தில் அறிவித்துவிட்டார்கள்.

ஒரு எரிந்து கொண்டிருக்கும் மும்முனை குத்தீட்டி போன்ற விண்கலம் இந்தியப் பெருங்கடலில் விழப்போவதை அந்தப் படம் முன்னறிவிக்கிறது. மேலும் எண் 370 ஐத் தூக்கப்போகிறோம் என்பதையும் அதே படத்தில் தெளிவாகக் காட்டிவிட்டார்கள்.



அதற்குப் பின்பு ஒரு ஜூலை 17அன்று MH17 இன்னொரு மலேசிய விமானம் உக்ரேனில் சுட்டி வீழ்த்தப்பட்டதை யாவரும் அறிவோம். இதில் ஒரு ஒற்றுமை என்னவென்றால் மசெராட்டி, உக்ரேன், மலேசிய விமானம் அனைத்துக்கும் ஒரு பொதுவான ஒற்றுமை உண்டு அதுதான் மும்முனை ஈட்டி லோகோ.

இன்னொரு கூடுதல் தகவல், உலகத்தின் ஆளுகை இறைவனிடமுருந்து சைத்தானுக்கு கைமாறியதன் அடையாளமாக இரு மும்முனை ஈட்டிகள் இன்னொரு முக்கியமான இடத்திலும் இப்போது வைக்கப்பட்டுள்ளது, அதுதான் நியூயார்க் இரட்டைக் கோபுரம் இடிக்கப்பட்டதன் நினைவாக நியூஜெர்ஸியில் எழுப்பப் பட்டிருக்கும் நினைவகம்.

மலேசியன் ஏர்லைன்சில் உள்ள இரட்டை மும்முனை குத்தீட்டிக்கும், இரட்டைக் கோபுரம் இடிக்கப்பட்டதன் நினைவாக நியூஜெர்ஸியில் வைக்கப் பட்டிருக்கும் இரட்டை மும்முனை ஈட்டிக்கும் ஒரு ஒற்றுமை உண்டு அது சைத்தானுக்குரிய எண்ணாகிய 33ஐயும் குறிக்கிறது. இன்னும் வரும் நாட்களில் நீங்கள் திரும்புமிடமெல்லாம் மும்முனை குத்தீட்டியை உலகம் முழுக்க பார்க்கலாம். மும்முனை குத்தீட்டியை மக்கள் ஆழ்மனதில் பதிக்கும் விதத்தில் இனி திரையுலக நாயகர்கள்கூட படத்தில் அதைத் தூக்கிக்கொண்டு ஸ்டைலாக போஸ் கொடுப்பார்கள் என்பதையும் எதிர்பார்க்கலாம்..

வெறும் இந்த ஆதாரங்களை வைத்து இதுதான் நடந்திருக்கும் என்று எப்படி நம்புவது என்று கேட்டால், இதில் எழுதியிருப்பது எதுவுமே எனது சொந்தக் கற்பனையோ கருதுக்களோ அல்ல, conspiracy theory என்பது வெவ்வேறு புள்ளிகளை இணைத்து ஒரு புரிந்து கொள்ளுதலுக்கு வருவதாகும்.

conspiracy theorists இணையத்தில் ஆங்கிலத்தில் சொல்லுவதை தமிழில் உங்கள் பார்வைக்கு கொண்டு வந்திருக்கிறேன். அவ்வளவே! அவர்களால்கூட இதற்கு ஒருபோதும் சட்டம் ஏற்றுக் கொள்ளும்படியான ஆதாரங்களைக்காட்ட இயலாது. இது எப்போதும் கோட்பாட்டளவிலேயேதான் நிற்கும். நம்புவதும் நம்பாததும் அவரவர் விருப்பம். ●

---

சம்மதித்தார். கமலின் வீட்டிற்கு சென்ற ஈ.பி.ஆர்.எல்.எவ் காரர்கள் போராட்டத்தின் நியாயத்தை சொல்லி, பணத்தேவையை சொன்னார்கள். 'சரி... சரி. கிளம்புங்கப்பா' என பலவந்தமாக அனுப்பாத குறையாக வீட்டுக்கு வெளியில் அனுப்பினார் கமல்.

அதற்கடுத்த வருடம் வெளியான புன்னகை மன்னன் படத்திலும் ஈழப்போராளிகள் தவறாக சித்தரிக்கப்பட்டிருந்தார்கள். ஈழத்தமிழர் போராட்டத்தை கொச்சைப் படுத்தியதற்காக ஒரு திரைப்படத்திற்கு முதலில் எதிர்ப்பு கிளம்பியதென்றால், அது புன்னகை மன்னனிற்குத்தான். கடுமையான எதிர்ப்புக்கள் கிளம்பியதையடுத்து படத்தை இயக்கிய பாலசந்தர் வருத்தம் தெரிவித்தார். கமல் எதையும் கண்டுகொள்ளவில்லை.

இயக்கங்களிற்கு உதவுவதில் கமலைப் போன்றவர்தான் ரஜினியும். எம்.ஜி.ஆர் சிவாஜி காலத்திற்கு பின்னர் திரையுலக ராஜாக்களான இருவரையும் பல இயக்கங்கள் உதவிக்காக நாடின. கமல்ஹாசனாவது ஈ.பி.ஆர்.எல்.எவ் காரர்களை ஒருமுறை வீட்டுக்கு கூப்பிட்டார். ரஜினி அதையும் செய்யவில்லை. இயக்கங்கள் சார்பாக யாராவது தொடர்பாளர்கள் ரஜினியை அணுகினால், அனுதாபமாக கதைப்பார். அவ்வளவுதான். இயக்கங்களை சந்திப்பதை சாதுரியமாக தவிர்த்து வந்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ அமைப்புக்களிற்கு ரஜினியுடன் கசப்பான அனுபவங்கள் உள்ளன.

எம்.ஜி.ஆருக்கு பின்னர் இயக்கங்களிற்கு அதிகம் உதவிய ஒரே நடிகர் விஜயகாந்த் மட்டும்தான். தனது சொந்தப்பணத்தில் இருந்து பெருந்தொகை பணத்தை கொடுத்திருக்கிறார். விடுதலைப்புலிகளில் விஜயகாந்திற்கு பேரபிமானம் உள்ளது. அதனால்தான் தனது மகனிற்கு பிரபாகரன் என்ற பெயரும் வைத்தார். அப்போது புலிகள் பணம் தேவையென விஜயகாந்த் வீட்டு கதவை எந்த நேரமும் தட்டலாம். எம்.ஜி.ஆரும் அப்படித்தான். புலிகளிற்கு இருவரும் நிறைய உதவினார்கள்.

மற்றைய இயக்கங்களிற்கு இப்படியான உதவிசெய்பவர்கள் கிடைக்கவில்லை. ரெலோவிற்கு உதவுவதை போல கருணாநிதி காட்டினாலும், பெரிய உதவிகள் கிடைக்கவில்லை.



**அதிகம் உதவிய ஒரே நடிகர் விஜயகாந்த் மட்டும்தான். தனது சொந்தப்பணத்தில் இருந்து பெருந்தொகை பணத்தை கொடுத்திருக்கிறார். விடுதலைப்புலிகளில் விஜயகாந்திற்கு பேரபிமானம் உள்ளது. அப்போது புலிகள் பணம் தேவையென விஜயகாந்த் வீட்டு கதவை எந்த நேரமும் தட்டலாம்.**


தென்னிந்திய பாடகர்களில் மனோவிற்கு தமிழர் போராட்டத்தில் பேரபிமானம் உள்ளது. சிறிய தொகை வாங்கிக்கொண்டு புலிகளின் புரட்சிப்பாடல்களை பாடிக் கொண்டிருந்தார். இன்குலாப் போன்ற கவிஞர்களின் இரத்தத்தில் விடுதலை உணர்வு ஓடிக்கொண்டிருந்தது. புரட்சிப் பாடல்களிற்காக அவர் பணம் வாங்கியதில்லை. இந்திய அமைதிப்படை காலத்தில் இன்குலாப் எழுதி, மனோ பாடிய 'ஏழு கடல்களும் பாடட்டும்' என்ற பாடல் வெகு பிரபல்யம்.

அந்த சமயத்தில் எஸ்.பி.பாலசுப்ரமணியத்தையும் பாடவைக்க புலிகள் முயன்றனர். ஆனால் எஸ்.பியின் சம்பளம் மிக அதிகமாக இருந்ததால் அந்த திட்டத்தை கைவிட்டு விட்டனர்.

திலீபன் மரணமாகிய நேரம். ஒரு இசைநாடாவை வெளியிட புலிகள் முயன்று கொண்டிருந்தனர். அதில் ஒரு பாடலை புதுவை இரத்தினதுரை எழுதியது வாணி ஜெயராம் பாடினால் நன்றாக இருக்குமென தோன்ற, அவரை அணுகினார்கள். வாணி ஜெயராமின் சம்பளமும் அதிகம்தான். அப்பொழுதே ஒரு பாடலுக்கு நாற்பதாயிரம் ரூபா அளவில் வாங்கினார். ஒரு பாடலுக்கு நாற்பதாயிரம் என்பதிலிருந்து வாணி ஜெயராம் விட்டுக்கொடுக்கவில்லை. திலீபனின் தியாகத்தை சொல்லி, தமது பண நெருக்கடியையும் சொல்லி புலிகளின் பிரதிநிதிகள் தயவாக பேரம்பேசினார்கள். இறுதியில் இருபத்தைந்தாயிரம் ரூபாவிற்கு பாட ஒப்புக்கொண்டார். அந்தப்பாடல்தான் 'பாடும் பறவைகள் வாருங்கள்... புலிவீரன் தியாகத்தை பாடுங்கள்'.

குறிப்பிட்ட நாளில் பாடல் ஒலிப்பதிவு தொடங்கியது. பாடலை பாடிக்கொண்டிருந்த போதே வாணி ஜெயராம் உணர்வு மேலீட்டால் கலங்கிவிட்டார். அவர் குரல் கமறியது. பாடும்போது கண்ணீர் தானாக வழியத் தொடங்கியது. பாடி முடிந்ததும் எதுவும் பேசாமல் ஸ்ரூடியோவை விட்டு வெளியில் போனார். பணத்திற்கான காசோலையை ஒருவர் கொண்டுபோய் நீட்ட, கையெடுத்து கும்பிட்டு விட்டு எதையும் வாங்காமல் வாணி ஜெயராம் போய்விட்டார்.

இப்பொழுது கமல், ரஜினி அரசியலுக்கு வரப்போகிறார்களாம். இதில் கமல் தனது முடிவை பகிரங்கமாக அறிவித்து விட்டார். இவர்கள் யார் அரசியலுக்கு வந்தாலும், பதவிகளிற்கு வந்தாலும் ஈழத்தமிழர் விடயத்தில் ஆத்தார்த்தமாக உதவுவார்கள் என சொல்வதற்கில்லை. ஜெயலலிதா, கருணாநிதியின் ஈழத்தமிழர் ஆதரவு ஆத்மார்த்தமானதல்ல. மேலே சொன்ன நடிகர்கள் யாரும் தமிழக முதலமைச்சரானாலும், அவர்கள் கருணாநிதி, ஜெயலலிதா போல காரியத்துடனான ஆதரவையாவது வழங்குவார்களா என்பது சந்தேகம்தான். ஈழத்தமிழர்களிற்கு ஆத்மார்த்தமாக உதவும் அரசியல் யுகம் தமிழகத்தில் எம்.ஜி.ஆருடன் மரணமாகிவிட்டது. ●



# குரு பகவான கல்யாணத்திற்கு உதவுவாரா?

(சென்ற இதழ் தொடர்ச்சி)

ராகுவை, யோககாரகன், போககாரகன் என்று சாஸ்திரம் சிறப்பித்துக் கூறுகிறது. இப்படிப்பட்ட ராகு பவித்திரமான குருவுடன் சேரும் போது எதிர்பாராத விஷயங்கள் கூடிவந்து விடுகிறது. ஒருவகையில் குருவும் போககார கனாகும். குரு சண்டாள யோகம் ஒருவருக்கு பரிபூரணமாக பலன் தரும்போது நடக்குமா, நடக்காதா, கிடைக்குமா, கிடைக்காதா என்று ஏங்கித் தவித்த விஷயங்கள் எல்லாம் சர்வ சாதாரணமாக நடைபெறும்.

உயர் பதவிகள், அதிகார மையங்களின் தொடர்புகள், ஒரு காலத்தில் சாதாரண நிலை, இன்று நினைத்துப் பார்க்க முடியாத மிரள வைக்கும் அசுர வளர்ச்சி, போக இச்சை, வன்முறை, அடக்குமுறை, அடியாள், கட்ட பஞ்சாயத்து, கொடுஞ் செயல்கள், அதிகார துஷ்பிரயோகம் என்று பல்வேறு வகைகளில் கொடிகட்டிப் பறப்பார்கள். அரசியலில் உயர்பதவிகள் தேடிவரும். லட்சுமிதேவியின் அருள் தானாக வந்து தழைக்கும். பொன்னும், பொருளும், முத்து சிவிகையும் கிடைக்கும் என்கிறது புலிப்பாணி பாடல். இந்த காலத்தில் மிக உயர்ந்த நான்கு சக்கர வாகனம். ராகுவின் மூலம் வரும். செல்வம், யோகம் எல்லாம் நிழலான, மறைவான, சட்டத்திற்கு புறம்பான வகையில்தான் கிடைக்கும் என்பது சாஸ்திர நியதியாகும்.

### குரு தர்ம பாக்கிய யோகம்

ராகுகேது இருவருக்கும் எதிர்மறையான குண இயல்புகள் உண்டு. ராகு மூலம் எது கிடைத்தாலும் அதில் எதிர்மறை நீச்சத்தன்மை இருக்கும். ஆனால், கேது மூலம் ஏற்படுகின்ற அமைப்புகள் சீரும் சிறப்பும் உடையதாக இருக்கும். குருவிற்கும், கேதுவிற்கும் ஜோதிட அமைப்புகளில் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. குரு, தவம், ஞானம், மந்திர சித்தி, மகான்கள், நீதி, மதம் போன்றவற்றை தன்னகத்தே கொண்டவர். கேது, ஞானம், மதம், குருஸ்தானம், மருத்துவம், ஞான மோட்சகாரகன் என்ற அமைப்பைப் பெற்றவர். குருவும்கேதுவும் சம்பந்தப்படுவது நல்ல அமைப்பாகும். குரு கேதுசாரம், கேதுவுடன் சேர்க்கை, சார பரிவர்த்தனை, ஒருவருக்கொருவர் கேந்திரம், பார்வை என்று எந்த வகையிலாவது சம்பந்தம் ஏற்பட்டால் மதம், மதக்கோட்பாடு, இறைசக்தி, வேதாந்த ஞானம், கௌரவம், செல்வாக்கு, தலைமைப்பதவி, சாதனை படைப்பது, நல்லோர் சேர்க்கை நாடாளும் யோகம் என ராஜயோக பலன்கள் ஏற்படும்.

குருவுடன், கேது சேர்க்கை பெற்று, அந்த குருவிற்கும், கேதுவிற்கும் ஒன்பதாவது வீட்டில் புதனும், சுக்கிரனும் சேர்க்கை பெற்றிருக்க வேண்டும். அல்லது இருவரில் ஒருவராவது இருக்க வேண்டும். இத்தகைய அமைப்புள்ள ஜாதகம் எந்த வகையிலாவது கோடீஸ்வர ராஜயோகத்தை அனுபவிக்கும். ஜாதகத்தில் எந்த வகையிலாவது குருகேது சம்பந்தப்பட்டு இந்த இருவரின் தசா, புக்தி காலங்களில் அவரவர் கர்ம பூர்வ புண்ணிய சுகிர்த விசேஷத்திற்கேற்ப குபேர சம்பத்தை ஜாதகர் அனுபவிப்பார். ஆன்மிக விஷயங்களில் ஜாதகரை ஈடுபட வைப்பார். மத போதகர், மதப்பிரசாரகர் மற்றும் கதை, காலட்சேபம், சொற்பொழிவு போன்றவற்றில் முன்னிலைப்படுத்துவார். மகான்களின் ஆசி பெறுவர்.

மடாதிபதி, அறநிலையத்துறை, கோயில் தக்கார், அறங்காவலர்கள் போன்ற பதவிகள் கிட்டும். கோயில் கட்டுதல், புனரமைத்தல், குளம் வெட்டுதல், கும்பாபிஷேகம் போன்றவற்றை முன் நின்று நடத்தும் பேறு பெறுவர். பெரிய தர்மஸ்தாபனம், கட்டளைகள் அறச் செயல்கள், கல்விச்சாலைகள், வேத பாட சாலைகள், நிதிநிறுவனங்கள் அமைக்கும் பாக்கியம் கிடைக்கும். ஜோதிடம், சாஸ்திர ஆராய்ச்சி, இஷ்ட தெய்வ உபாசனை. குறி சொல்லுதல் போன்றவற்றில் தேர்ச்சியும், ஞானமும் கிடைக்கும். இயல், இசை, நாடகம், நடனம், நாட்டியம், சங்கீதம், பாட்டு ஆகியவற்றில் சிறப்படைவர்.

### வியாழ வட்டம்

ரிஷபம், சிம்மம், தனுசு, கும்பம் ஆகிய நான்கு ராசிகள் வியாழ வட்டம் என்றும், குருவளையம் என்றும் அழைக்கப்படுகின்றன. நம் ஆட்காட்டி விரல் குருவிரல் என்றும் அந்த விரலுக்கு கீழே உள்ள மேடு குரு மேடு என்றும் அழைக்கப்படுகிறது. மேற்சொன்ன ராசிகளில் குரு இருக்கப் பிறந்தவர்களுக்கு, குருமேட்டைச் சுற்றி மோதிரம் போன்ற வளையம் தோன்றும். இதற்கு குருவளையம் (சாலமன் ரிங்) என்று பெயர். இத்தகைய அமைப்புள்ள ஜாதகர்கள் மரியாதையும், மாண்புகழும் உடையவர்களாக இருப்பார்கள். நாட்டின் உயர் அந்தஸ்துள்ள பதவிகளில் அமருவர். நிதி, நீதித்துறைகளில் இவர்களின் பங்களிப்பு இருக்கும். வெளிநாட்டுத் தூதுவர்களாக நியமிக்கப்பட இடமுண்டு. சமூகத்தில் இவர்களின் சொல்லிற்கும், பேச்சிற்கும், எழுத்திற்கும் மதிப்பு இருக்கும்.

### வெளிநாட்டு சம்பந்தம்

ஜலராசி அமைப்பு என்பது முக்கியமானதாகும். இதில் குருவின் பங்கு மிகவும் முக்கியமானதும், இன்றியமையாததுமாகும். காரணம் கடகம் என்ற ஜலராசியில் குரு உச்சம் பெறுகிறார். மீனம் என்ற ஜலராசியில் குரு ஆட்சி பெறுகிறார். மகரம் என்ற ஜலராசியில் குரு நீச்சம் அடைகிறார். இதில் கடகம், மீனம் ஆகிய இரண்டு ராசிகளிலும் குருவின் நட்சத்திரங்களான புனர்பூசம், பூரட்டாதி அமைகின்றன. மேலே சொன்ன ராசிகளில் குரு இருப்பது அல்லது பார்வை, சம்பந்தம் கொண்டு பிறக்கும் ஜாதகர்கள் வெளிநாட்டில் நிரந்தரமாகத் தங்குவதற்கான பாக்கியம் இருக்கும். அடிக்கடி கடல்கடந்து சென்று வருவார்கள். தொழில்ஸ்தான அமைப்பு சம்பந்தப்படும்போது ஏற்றுமதி, இறக்குமதி தொழில்கள் கைகொடுக்கும். தண்ணீர் சம்பந்தமான, மீன்வளத்துறை மற்றும் கப்பல், வாணிபம் கூடிவரும்.

### சந்திராதி யோகங்கள்

கிரக சேர்க்கை, பார்வை மூலம் பலவகையான யோகங்கள் உண்டாகின்றன. குரு சம்பந்தமாக பல்வேறு யோக அம்சங்கள் நிறைய உள்ளன. யோகங்கள் பெரும்பாலும் லக்னம், சந்திரனை வைத்து செயல்படுகிறது. சந்திரனுக்கு கேந்திரத்தில் அதாவது, ராசிக்கு 4, 7, 10 ஆகிய வீடுகளில் குரு இருப்பது கஜகேசரி யோகம், குருவுடன் புதன் சேர்ந்தால் வித்யா கஜகேசரி யோகம். இந்த அமைப்பு ஜாதகரை உச்சத்திற்கு கொண்டு செல்லும். கல்வியில் பிரகாசிப்பார்கள். செல்வாக்கு, சொல்வாக்கு உண்டு. குருவும் சந்திரனும் ஒரே ராசியில் இருந்தாலும் அல்லது ராசிக்கு 5, 9 ஆகிய இடங்களில் குரு இருந்தாலும் குருசந்திர யோகம் உண்டாகிறது இதனால் நிறைய உயர்வுகள் இருந்தாலும் மனக்குறை இருந்துகொண்டே இருக்கும். பெரும்பான்மையானவர்களுக்குப் படித்த படிப்பிற்கும், பார்க்கும் வேலைக்கும் சம்பந்தம் இருக்காது.

## தர்ப்பணம் செய்ய அமாவாசை சிறந்தது ஏன்?




பித்ருக்கள் எனப்படும் முன்னோர் உலகில் நமக்கு வளர்பிறை பகல் நேரமாகவும், தேய்பிறை இரவு நேரமாகவும் உள்ளது. அமாவாசை என்பது பகல் ஆரம்பிப்பதற்கு முன்புள்ள விடியற்காலம் போன்றது. காலைப்பொழுது பூஜைக்குச் சிறந்தது என்பதால், முன்னோர் வழிபாட்டுக்கு அமாவாசையைத் தேர்ந்தெடுத்தனர். இந்நாளில் புரோகிதர் மூலமாக தர்ப்பணம் செய்வது சிறப்பு. (தர்ப்பணம் என்பதற்கு திருப்தியுடன் செய்வது என்று பொருள். சிரார்த்தம் என்றால் சிரத்தையுடன் (கவனம்) செய்வது என்று அர்த்தம்) அவ்வாறு இயலாத பட்சத்தில், மந்திரம் ஏதும் சொல்லாமல் பக்தியுடன் மனதார பித்ருக்களை வழிபட்டு அவருக்கு கொடுக்க வேண்டிய அரிசி, காய்கறி, பழம், தட்சிணை, வஸ்திரம் முதலானவற்றை வேறு யாருக்கேனும் தானம் செய்யலாம். ஏழைகளுக்கு அன்னதானம் செய்யலாம். பசுக்களுக்கு பழம், அகத்திக்கீரை கொடுப்பது இன்னும் நல்ல பலன் தரும். பித்ரு பூஜையைச் சரியாகச் செய்யாவிட்டால் முன்னோர்களின் சாபம் ஏற்படும். அவ்வாறு சாபம் பெற்ற குடும்பங்களில் தான் ஊனமுற்ற குழந்தைகள் பிறப்பதாக சாஸ்திரம் சொல்கிறது.

## பித்ரு தர்ப்பணத்தில் எள் தர்ப்பை பயன்படுத்துவது ஏன்?

எள் என்னும் கருமை நிற விதை திருமாலின் வியர்வைத் துளியிலிருந்து வெளிவந்த பரிசுத்தமான தானியம் என்பது வேதக்கூற்று. பித்ருக்களுக்கு செய்யப்படுகிற தர்ப்பன வழிபாட்டில் கருமைநிற எள்ளைப் பயன்படுத்துவதால் நமது முன்னோரும் தேவர்களும் மகிழ்ச்சி அடைகின்றனர்.

மகாளய பட்சம் வருவதற்கு 15 நாட்கள் முன்னதாகவே ஒரு வீட்டின் பானையில் கொட்டி வைக்கப்பட்டுள்ள எள்ளானது பித்ரு வருவதைச் சொல்ல நிமிர்ந்து நிற்பதாக நம்பப்படுகிறது. தர்ப்பை புல் ஆகாயத்தில் தோன்றியது என்று கூறுவர். இதில் ஒரு முனையில் பிரம்மாவும், மறு முனையில் சிவபெருமானும், நடுப்பகுதியில் திருமாலும் வாசம் செய்வதாகக் கூறுவர்.

தர்ப்பைக்குக் குசம், திருப்புல், தெய்வப்புல் அமிர்த வீரியம் என்ற பெயர்கள் உண்டு. நிலத்தில் வாடாமல் நீரில் அழுகாமல் விதை, செடி, பதியம் இல்லாமல் சுயமாகத் தோன்றுவதே தர்ப்பை. ஆன்மா தோற்றம் போன்று புதிரான தர்ப்பை தானே தோன்றி வளர்வதால் தர்ப்பையில் ஆன்மாவை ஆவாகனம் செய்து வழிபடுவர். உஷ்ணம் மிகுந்த தர்ப்பை அமாவாசையிலும் கிரகண காலத்திலும் அதிக வீரியம் உடையதால் தர்ப்பணம் இட பயன்படுத்தப்படுகிறது. அதனால் தான் தர்ப்பண பூஜைக்கு இதை பயன்படுத்துவர்.



# மனதை ஒருமுகப்படுத்தும் நடராஜாசனம்

**செய்முறை:** நேராக தடாசனத்தில் நில்லுங்கள். ஆழ்ந்து மூச்சை விட்டபடி, வலது காலை பின்னால் தூக்குங்கள். வலது காலை வலது கையால் பிடித்துக் கொள்ளவும்.

உங்களின் மொத்த எடையையும் இடது கால் தாங்கும்படி பலன்ஸ் செய்து கொள்ளுங்கள். இப்போது மெதுவாக இடதுகையை முன்னால் நீட்டவும். உங்களின் நீட்டிய இடது விரல்களுக்கு நேராக உங்கள் பார்வையை குவியுங்கள்.

இந்த நிலையில் 20 நொடிகள் நிற்கவும். பின்னர் மெதுவாய் கால், கைகளை தளர்த்து இயல்பு நிலைக்கு வாருங்கள். இப்போது இடது காலுக்கு செய்ய வேண்டும். இவ்வாறாக வலது காலில் இரண்டு முறை, இடது காலில் இரண்டு முறை செய்யவும்.

**பலன்கள்:** உடல் எடை குறையும், இடுப்பு, கால்,கைகளுக்கு பலம் தரும், ஜீரண சக்தியை அதிகப்படுத்தும், மன அழுத்தத்தை குறைக்கும்.

**குறிப்பு:** ஆரம்பத்தில் இந்த ஆசனத்தை செய்யும்போது, பலன்ஸ் செய்ய கடினமாக இருந்தால் சுவற்றைப் பிடித்துக் கொண்டு செய்யலாம். குறைவான ரத்த அழுத்தம் உள்ளவர்கள் இந்த ஆசனத்தை செய்ய வேண்டாம்.

# சளி, இருமலுக்கு உகந்த கற்பூரவல்லி சட்னி



**தேவையான பொருட்கள்:** கற்பூரவல்லி இலைகள் 15, தேங்காய்த் துருவல் கால் கப், பச்சை மிளகாய் 2, புளி கோலி குண்டு அளவு, பெருங்காயம் சிட்டிகை, கடுகு, உளுந்தம் பருப்பு தலா கால் டீஸ்பூன், உப்பு தேவையான அளவு, எண்ணெய் அரை டீஸ்பூன்.

**செய்முறை :** கற்பூரவல்லி இலைகளை நன்றாக கழுவி வைக்கவும். வாணலியில் சிறிதளவு எண்ணெய் விட்டு பச்சை மிளகாய், கற்பூரவல்லி இலைகள், தேங்காய்த் துருவல், புளியை தனித்தனியாக சேர்த்து வதக்கி ஆற விடவும்.

அனைத்தும் நன்றாக ஆறிய பின் மிக்சியில் போட்டு உப்பு சேர்த்து அரைத்த கொள்ளவும். அதே வாணலியில் மீதமுள்ள எண்ணெய் விட்டு சூடானதும் கடுகு, உளுந்தம் பருப்பு, பெருங்காயம் சேர்த்து தாளித்து சட்னியில் சேர்த்து கலந்து பரிமாறவும்.

சூப்பரான கற்பூரவல்லி சட்னி ரெடி.

# முகத்தின் கருமையை போக்க சோப்பிற்கு பதிலாக இதை பாவியுங்கள்

வெயிலினால் சருமம் கருமையாகி விடுகிறது. இந்த கருமையை போக்க பல க்ரீம்கள் மற்றும் இராசாயனப் பொருட்களை தான் முகத்தில் தடவ வேண்டும் என்ற அவசியம் இல்லை. நமது வீட்டில் கிடைக்கும் சில பொருட்களை கொண்டு முகத்தில் பொழிவை அதிகரிக்க செய்யலாம்.

சிறிதளவு வெண்ணெயை முகத்தில் தடவி மசாஜ் செய்தால் முகம் வெண்ணெய் போலவே மிருதுவாக மாறும். உங்களுக்கு பிரகாசமான முகம் கிடைப்பதும் உறுதி.

தக்காளி, வெள்ளரிக்காய் ஆகியவற்றை முகத்திற்கு பயன்படுத்துவதன் மூலம் முகத்தில் ஈரப்பதத்தை தக்க வைத்துக்கொள்ளலாம். விட்டில் தக்காளி, வெள்ளாரிக்காய் ஆகியவற்றை நறுக்கும் போது எல்லாம், முகத்திற்கும் சிறிதளவு எடுத்து போட்டுக் கொள்வது எளிதாகவும் இருக்கும்.

சோப்பிற்கு பதிலாக பாசிப்பயறு மாவு, கடலை மாவு, கஸ்தூரி மஞ்சள் ஆகியவற்றை பயன்படுத்தினால், முகத்திற்கு ஒரு தனி கவர்ச்சியே கிடைக்கும். உங்களது அழகு பல்லாண்டு காலம் நீடித்திருக்கும்.

தினமும் இரவு தூங்குவதற்கு முன்னர் சிறிதளவு பாலில், மஞ்சளை கலந்து பேக் போட்டுக்கொண்டால், முகம் வசீகரமாக இருக்கும். தினமும் காலையில் உங்களது முகத்தில் ஒரு ஒளியை காணமுடியும்.

தினமும் குளிப்பதற்கு முன்னர் கற்றாழை ஜெல்லுடன் மஞ்சளை கலந்து மசாஜ் செய்து பின்னர் குளித்தால், முகப்பருக்கள் இல்லாத தெளிவான சருமத்தை பெறலாம்.

# ஸ்டைலிஷாக தெரிய பெண்கள் செய்ய வேண்டியவை

ஸ்டைலிஷாகத் தெரிய வேண்டும் என்று நினைக்கும் பெண்கள் முதலில் தங்களது உடல்வாகுக்கு ஏற்ற ஸ்டைல் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். ஹெயார் ஸ்டைல், மேக்கப், சிம்பிள் அக்சசரீஸ் மற்றும் உடைகள் என தன் உடலோடு பொருந்தி அழகை கூட்டிக் காட்ட வேண்டும் என்பதே முக்கியம். ட்ரெண்டில் இருக்கிறது என்பதற்காக எல்லாப் பொருள்களும் அனைத்துப் பெண்களுக்கு ஒரே மாதிரியாகப் பொருந்தாது.

ட்ரெண்டியாகவும் தெரிய வேண்டும் அதே சமயம் அழகிலும் மாற்றுக் குறையக் கூடாது என்று நினைக்கும் பெண்கள் கீழே கூறப்பட்டிருக்கும் 8 விதிகளை மறக்கமால் பின்பற்ற வேண்டும்.



1) உங்களை ஸ்டைலாகக் காட்டுவதில் முதல் இடம் வகிப்பது உங்களது ஹெயார் ஸ்டைல். மனதுக்கு நெருக்கமான அழகுக் கலைஞரை சந்தித்து உரையாடுங்கள். ட்ரெண்டி ஹெயார் ஸ்டைலுக்கு மாறுங்கள்.
2) நீங்கள் உடுத்தும் உடை உங்களைப் பற்றிச் சொல்வதில் முதலிடத்தில் உள்ளது. எதை உடுத்தும்போதும் நம்பிக்கையோடு உடுத்துங்கள். உடை கம்பீரமாகவும், தன்னம்பிக்கைஅளிப்பதாகவும் இருக்கும் பட்சத்தில் அதுவே உங்கள் மீதான மதிப்பீட்டை உயர்த்தும். உடை உங்களின் உயர்ந்த எண்ணங்களை வெளிப்படுத்துவதாக இருக்கட்டும்.
3) அலுவலகம் செல்வதற்கு, பார்ட்டிக்கு செல்ல, திருமண விழாக்களில் கலந்துகொள்ள என்று சூழலுக்குப் பொருந்தும் உடைகளை அணிந்து செல்லுங்கள். எனது வாழ்க்கைப் பயணத்தில் எது வந்தாலும் அதனை என்னால் இன்முகத்துடன் ஏற்றுக்கொள்ள முடியும் என்பதை உணர்ந்துகொள்ள முடியும். சூழலுக்கு ஏற்ப உங்களை மாற்றிக் கொள்வதும் எளிதாகும்.
4) எவ்வளவு அதிகம் பணம் கொடுத்து வாங்கியிருந்தாலும் உங்களது உடல் வாகுக்கு பொருந்தாத உடைகள் ட்ரெண்டியாகக் காட்டாது. எந்த உடையாக இருந்தாலும் சிக்கென பொருந்தும்படி அணிந்து செல்லுங்கள். பாராட்டுகளை அள்ளுங்கள்.
5) அணியும் உடை 50 சதவிகிதம் மற்றவர்களுக்குப் பிடித்திருந்தால் போதும். மீதம் 50 சதவிகிதம் அது உங்களுக்கு ஆத்மார்த்தமாகப் பிடித்திருக்கவேண்டும். செல்லும் இடத்தில் இருக்கும் நபர்கள் உங்களைப் பற்றி என்ன நினைக்க வேண்டும் என்பதையும் உடைகளால் தீர்மானியுங்கள். எனவே, உடையில் எப்போதும் சிறப்புக் கவனம் செலுத்துங்கள். உங்கள் மனதுக்குப் பிடிக்காத உடை எப்போதும் வேண்டாம்.
6) ட்ரெண்டியாகத் தெரியவேண்டும் என்பதற்காக உங்களது தோற்றத்தை தலைகீழாக மாற்ற வேண்டியதில்லை. சின்னச் சின்ன விஷயங்களில் மாற்றம் செய்தாலே ட்ரெண்டியாகத் தோன்றலாம். பெல்ட் அணிவது, துப்பட்டாவை வித்தியாசமாகப் போடுவதும் ஸ்டைலை மாற்றும். அணிகலன்களிலும் வித்தியாசம் காட்டுங்கள்.
7) இப்படி மட்டும்தான் இருப்பீர்கள் என்ற ஒற்றை அடையாளத்தை உருவாக்கி விடாதீர்கள். ஜீன்ஸ் டீஷர்ட் என்று ட்ரெண்டியாக டிரஸ் செய்தாலும் தங்கச் செயின் வளையல், கொலுசு போன்றவற்றை மாற்றிக் கொள்ளவே மாட்டேன் என்ற கொள்கை முடிவுகளை விட்டு விடுங்கள். என்ன உடுத்துகிறீர்களோ அதற்கு ஏற்ப அணிகலன்களையும் மாற்றி உங்களை பர்பெக்டாக உணருங்கள்.

# தேவதைகளின் தீட்டுத்துணி

யோ.கர்ணன்

காணிக்கை மலரின்ர புருசன்காரன் விட்டுட்டு போய் மூன்றாவது வருசம் பிறந்தவனான றொக்கட் அல்லது போர்ப்புலி என அழைக்கப்படுகின்ற கிறிஸ்துதாசன் ஒரு சிகப்பு கலர் லேலண்ட் பஸ்சிலவந்து செட்டிகுளம்முகாமிலஇறங்கி வரிசையில போய் ஒரு சோத்துப்பாசல் வாங்கி ஒதுக்குப்புறமாக மர நிழலொன்று பார்த்துக் குந்தி சோத்துப் பாசலை விரிச்சு கழுவாத கையை வைக்கிறதோட இந்தக் கதைக்குள்ள என்ரராகிறான்.

நாலைந்து நாளாக அன்னந் தண்ணியை கண்டிராத பொடியன் அவக் அவக்கெண்டு குனிந்த தலை நிமிராமல் பூசணிக்காயயும் சோத்தயும் திண்டு முடிச்சிட்டு அரை வயிறு கால்வயிற்றோட நிமிர்ந்து பார்த்தான். கொஞ்சத் தூரம் தள்ளி ஒரு வாகனத்தைச் சுற்றி சனம் நின்று முண்டியடிக்குது. இவன்ர மூளைக்குள்ள மின்னல் வெட்டி மறையுது. அடுத்த பார்சல் ரெடி. பாய்ந்து போனான். முப்பத்து சொச்ச தாவலில ஆள் கூட்டத்தில என்ரர் . இப்பிடி கூட்டங்களுக்க நுழையிறது வேலி தாவிறது பிரிக்கிறதில இவனுக்கு ஊரிலயே நல்ல எக்ஸ் பீரியன்ஸ் இருந்தது. அதனால தான் றொக்கட் என்ற பெயர் ஊரில அடிபட்டது.

இதை விட ஆள் இயக்கத்தில பதினொரு நாள் றெயினிங் வேற எடுத்திருக்கிறான். நாற்பது சொச்ச பேருக்கு கீழாலையும் முப்பது சொச்ச பேருக்கு மேலாலையும் போய் 'வாகனத்துக்கு முன்னால நின்று

**அன்று மில்லுக்குப் போக மனம் வரவில்லை. வீட்டுக்குப் போய்ப் படுத்திட்டான். அடுத்த நாள் இவன்ர வீட்டிலயே ரவுண்டப் பண்ணி ஆக்கள் பிடிக்கேக்க, இவனையும் பிடிச்சுப் போட்டினம். பத்துப் பதினைஞ்சு பேரைச் சின்ன ஜீப்பில அடைஞ்சு கொண்டு போச்சினம். ஆரோ ஒரு பெட்டையையும் பிடிச்சு ஏத்தியிருந்தினம். அது அழுது கொண்டிருந்தது.**

இரண்டு கையையும் நீட்டி 'சேர்... சேர்... நாலு நாளா சாப்பிடல... அம்மா அப்பாக்கும் ஏலாது சேர் மூன்று பாசல் தாங்கோ சேர்...' என்று முகத்தயும் ஒரு மாதிரியா வைத்து கொண்டு கத்தினான். இவன் மட்டுமா கத்திறான்! செட்டிக்குளம் முகாமே கத்துது. இதுக்குள்ள இவன்ர முக அக்சனை ஆரும் கணக்கெடுத்த மாதிரி தெரியல. இயக்ககாரர் பேோட்ட பெரிய பெரிய பண்டுகளை எல்லாம் ஏறி கடந்து வந்த சனம் ஒரு லொறியை என்ன செய்யும்? சனத்தின்ட மூர்க்கத்துக்கு முன்னால லொறியில நிண்டு சாப்பாடு குடுத்தவை திணறிப் போச்சினம். லொறிய சுத்தி நின்று கத்துறதும் லொறிக்கு அடிக்கிறதுமாக சனமும் ஒரு மார்க்கமாத்தான் நிண்டினம். சாப்பாடு குடுக்கிறவை சிங்களத்தால ஏதோ பேசிப் போட்டு சாப்பாடு குடுக்கிறதை நிப்பாட்டிப் போட்டினம். சீன் இப்படி ஏறுக்கு மாறாக போய்க்கொன்டிருக்க ஆரோ ஓடிப்போய் ஆமிக்குச் சொல்லிப் போட்டினம். கொஞ்ச ஆமிக்காரர் பாய்ந்தோடி வந்திச்சினம். ஊரில முயல் பிடிக்கிற ஆட்கள் கொண்டு திரியிற சைஸ் பொல்லுகளோட வந்த வேகத்தில கொஞ்சப் பேருக்கு அடி. பிறகென்ன நிலமை சீர். எல்லாரையும் நிலத்தில இருக்க வைச்சாச்சு. சத்தம் போடமல் இருந்தால்தான் சாப்பாடாம். இதுக்குள்ள கொஞ்சம் கொஞ்சம் தமிழ் கதைக்கிற ஆமிக்காறன் ஒருத்தன் பேசினான் 'ஏ ஓங்கள எல்லாம் பிரபாகரன் எப்படிட கொன்றோல் பண்ணினான்?"

முகரியக்சனுகளை வைச்சுப் பார்க்கேக்க தங்கட வீரத்தநினைச்சுகொஞ்சத்தமிழர்கள் புளகாங்கிதப்பட்ட மாதிரித்தானிருந்தது. இவனுக்கு உதிலயெல்லாம் கவனமில்லை. எப்படியும் ஒன்றிரண்டு சோத்துப் பாசல் வாங்கிட வேணும். ஒன்றை தாய்க்காரிக்கு தின்ன குடுத்துட்டு மிச்சத்த வைக்க வேணும். இரவுப் பாடு என்ன மாதிரியோ தெரியாது எண்ட லைன்ல இவன்ர மூளை ஓடிக் கொண்டிருந்தது. கடுமையாக திங் பண்ணிப் பார்த்தான். ஒன்றும் சரியாகப் படவில்லை. கொஞ்சம் பொறுத்துத் தான் பார்ப்பமே எண்டிட்டு வடிவா நிலத்தில குந்தியிருந்து கொண்டு தலைய சுத்தி கூட்டத்தைப் பார்த்தான். எல்லா முகத்திலயும் சோத்துக் களை. ஒவ்வொரு முகமாக பார்த்து கொண்டு போனான். வலது பக்க தொங்கலில் பாலை மரத்தோட இருந்த முகம் இவனையே பார்த்துக் கொண்டிருந்தது. கண்ணை ஒரு முறை சுருக்கி யோசிச்சுப் பார்க்க... பாலன் எண்டது பிடிபட்டது.

பிறகென்ன இரண்டு பேரும் கட்டிப் புடிச்சு மாறி மாறி கொஞ்சிறது மாதிரியான சென்டிமென்ட் சீனை மனசுக்கஓடவிட்டுப் பாருங்கோ .

பாலன் மன்னார்ப் பக்கத்துப் பொடியன். பிரச்சினை தொடங்க இடம் பெயர்ந்து வந்து இவனிருந்த வட்டககச்சிக்கு வந்திட்டான். ஆனால் அப்ப இவனுக்குப் பாலனை தெரியாது. பாலன் எங்கேயோ உடுப்புக் கடையில நிண்டிருக்கான் இவன் லாலா அண்ணயின்ர மில்லில வேலை செய்தான். சின்ன வயசில வேலைக்கு போயிற்றான். கொஞ்ச நாளில எல்லைப் படை ரெயினிங் எடுத்து லைனுக்கு போன லாலா அண்ணை செத்து போனார். பிறகு சுந்தரி அக்கா வந்து மில்லில நின்றா. இவன்தான் முழு வேலையும். சுந்தரியக்காவுக்கு இவனைப் பிடிக்கும். இவனுக்கு சுந்தரியக்காவைப் பிடிக்கும்.

அந்த ரைமிலதான் இவனுக்கு லவ் வந்தது. வசந்தி பெரிய எழுப்பமான ஐற்றம் என்றில்லாவிட்டாலும் ஓரளவு அம்சமான பெட்டை தான். இவன்ர லவ் ஸ்ரோரி இப்பிடி அமைஞ்சுது. அந்தப் பெட்டை கிளிநொச்சியில ஒரு கொமினிகேசன் சென்ரரில வேலை பார்த்தது. இவனுக்கு வட்டக்கச்சியை விட்டால் வேறு ஒரு இடமும் ஆக்கள் இல்லை. ஆனாலும் 077 என்றோ 021 என்றோ தொடங்கி பத்து நம்பர் வரத் தக்கதாக எழுதிக்கொண்டு போவான். கடைக்குப் போய் அதுட்ட குடுத்துட்டு நிப்பான். அதுவும் நம்பரை குத்தி குத்தி அடிச்சுக் கொண்டிருக்கும். பிறகு களைச்சுப் போய் துண்டத் திருப்பிக் குடுக்கும். கொஞ்ச நாளில அதுக்கு எல்லாம் விளங்கீற்றுது. பிறகென்ன, கிளிநொச்சியில இருக்கிற கடை முழுக்க ஐஸ்கிறிம் குடிச்சு லவ் பண்ணிச்சுதுகள்.

அப்பதான் வீட்டுக் கொராள் இயக்கத்துக்கு வரவேணும் எண்டது மாதிரியான றூள்ஸ் வந்துது. காணிக்கை மலருக்கு இவனும் மரியசீலியும்தான் பிள்ளையள். அவள் ஆறு மாசம் முதல் எங்கேயோ மண்ணெண்ணைக் கடை வைச்சிருக்கிற ஒருத்தனை லவ் பண்ணுறன் என்டும், கட்டினால் அவனைத்தான் கட்டுவன் எண்டும் ஒற்றக் காலில நிண்டு கட்டிக் கொண்டு போயிற்றாள். அவள் போனவள் போனவள்தான். பிறகு இஞ் சால் பக்கம் தலை வைச்சும் படுக்கிறதில்ல. இப்ப இவன் தான் ஒரு பொடியன். தான்தானே தாயைப் பார்க்க வேணும். தனக்கு பிரச்சனை வராது எண்ட மாதிரியான கணக்கைப் போட்டு கொண்டு திரிஞ்சான்.

ஒரு நாள் மில்லுக்குப் போகேக்க, நாலைஞ்சு இயக்கக்காரர் நிண்டு மறிச்சினம். அதில ஒரு வடிவான பொம்பிளப் பிள்ளயும் இருந்தா. கொஞசம் பெரிய மீசையோட, உடம்பாக இருந்த ஒராள் இவனோட கதைச்சார். மிச்ச ஆக்கள் எல்லாம் அந்தப் பெட்டயோடயே சிரிச்சுச் சிரிச்சுக் கதைச்சுக் கொண்டிருந்தினம். மீசைக்காரன் கேட்டார்

'வீட்டில எத்தனை பேர்?'

'ஒராள்...'

'நீர் தனிப் பிள்ளயோ?'

'இல்ல அண்ண... அக்காவும் இருந்தவா. ஆனால் அவ ஒருத்தனோட ஓடிற்றா... இப்ப எங்கேன்றே தெரியாது. நான்தான் உழைக்கிறன். அம்மாக்கும் ஏலாது.'



'தம்பி... தம்பி நிப்பாட்டு. என்ட பேர் பாயும்புலி. எனக்கும் நிறைய குடும்பப் பொறுப்பு இருந்தது. ஆனால் அதை விடப் பெரிசு...'

என்று நீளமாக லெக்சர் ஒன்று அடிச்சுப் போட்டு, 'இப்ப போய் வீட்டுக்குரிய ஏற்பாடுகளைச் செய்திட்டு இரண்டு நாளில சேர்ந்திடணும்' என அனுப்பி விட்டார்.

இவனுக்கு அன்று மில்லுக்குப் போக மனம் வரவில்லை. வீட்டுக்குப் போய்ப் படுத்திட்டான். அடுத்த நாள் இவன்ர வீட்டிலயே ரவுண்டப் பண்ணி ஆக்கள் பிடிக்கேக்க, இவனையும் பிடிச்சுப் போட்டினம். பத்துப் பதினைஞ்சு பேரைச் சின்ன ஜீப்பில அடைஞ்சு கொண்டு போச்சினம். ஆரோ ஒரு பெட்டையையும் பிடிச்சு ஏத்தியிருந்தினம். அது அழுது கொண்டிருந்தது. அந்தக் கவலையிலும் அதோட ஒட்டுப் பட்டுக் கொண்டுபோனது இவனுக்குக் கிளுகிளுப்பாகயிருந்தது.

முத்தையன்கட்டுக் காட்டுக்க ரெயினிங். கிறிஸ்துதாஸன் எண்டும் றொக்கட்

தொடர்ச்சி 26-ம் பக்கம்...

எண்டும் ஊரில அடிபட்ட பேரைப் போர்ப்புலி எண்டு மாத்திச்சினம். அன்று கக்கூசுக்குள்ள போயிருந்து கொண்டு தன்ர கையிரண்டையும் புலியின் நகம் போல விரித்து, பற்களைப் பெரிதாக காட்டி, புலிமாதிரி ஒரு முறை சீறிப் பார்த்தான். இவனுக்கு இந்தப் பேர் பிடிக்கயில்லை. ஏதாவது இங்கிலிஸ் பேர் றெக்ஸ், அலெகஸ், ஜேம்ஸ், அல்லது பண்டாரவன்னியன், சங்கிலியன், கரி காலன்,கடாபி,காமினி,லலித்எண்ட மாதிரி யாவது வைச்சிருந்திருக்கலாம். ஆனால், மாஸ்ரர் வைச்ச பேரை மாற்ற முடியாது. பேசாமல் இருந்து விட்டான். ரெயினிங் காம்பிலதான் பாலன் இன்ரடியுஸ் ஆகிறான். ரெண்டு பேரும் ஒரே ரீம். பக்கத்துப் பக்கத்துப் படுக்கை. இவனும் வீட்டுக்குத் தனி ஆம்பிளைப் பிள்ளை.

இவன் பதினொரு நாள்த் தான் ரெயினிங் எடுத்தான். ஏ.கே எல்லாம் கழட்டிப் பூட்டுவான். பன்னிரண்டு ரவுண்ஸ் டச் அடிச்சிருக்கிறான். அதில ஒண்டு புள். ஒன்பது காடு. சத்தியப் பிரமாணம் தரோவான பாடம்.

இவன் ரெயினிங் காம்பில இருந்து ஓட முடிவெடுத்தான். பாலனைக் கேட்டான். அவன் பயந்தவன். மறுத்து விட்டான். அன்றிரவு இவனுக்கு இரண்டாவது சென்ரி. வெளிக்கிட்டு 'பரலோகத்தில் இருக்கும் பிதாவே..'யும் 'அருள் நிறைந்த மரியாவே...' யும் சொல்லிக்கொண்டு அருவியை பிடித்து நடந்தான். பெருங்காடு. யேசுவும் மரியாளும் துணையிருக்க, பரந்தன் புதுக்குடியிருப்பு றோட்டில ஏறி, அடுத்த நாள் வீட்டுக்கு வந்து சேர்ந்திட்டான் . தாய்காரியிட்ட சொல்லிப் போட்டு இரவோடு இரவாக புதுக்குடியிருப்பில இருக்கிற நட்சத்திரம் மாமா வீட்டுக்கு வந்திட்டான். பிறகு இவன் வட்டக்கச்சிக்கே போகவில்லை. கொஞ்ச நாளில வட்டக்கச்சி இடம் பெயர்ந்து அங்க வந்திது.

சனம் முழுக்க மாத்தளன், முள்ளிவாய்க்கால் பாதுகாப்பு வலயத்துக்க அடைஞ்சு கிடந்த நாளில இவன் புதுக்குடியிருப்பு பக்கம் தேங்காய்க்கு வாறவன். ஒரு தேங்காய் ஐந்நூறுக்கு மேல போகும். இயக்கக்காரரின் 'லைன்' மட்டும் வருவான். அவ்வளவு துணிஞ்சவன். அப்படி வரேக்க ஒரு நாள் பாலனைக் கண்டிட்டான். ஒரு ஏ.கே யைக் கொழுவிக் கொண்டு 'வோக்கி' கதைச்சபடி வந்தான். இவனுக்கு பெருமையாய் இருந்திது. தன்னோட 'ரெயினிங்' எடுத்த பெடியன் 'வோக்கி'யெல்லாம் வைச்சிருக்கிறான். பொறுப்பாளனாக வந்திட்டான் போல என்ற கணக்கில யோசிச்சு கொண்டு போய் கட்டிப் பிடிச்சுக் கதைச்சான். . அவன் நல்லா மாறியிருந்தான். நாங்கள் ஆமிக்காரனுக்கு நல்ல அடியாக ரெண்டு அடி குடுத்தால் போதும். தமிழ் நாட்டில கருணாநிதி ஆட்களும் கதைக்கினம். அவையளும் கொஞ்சம் கூட கதைக்க வேணும். 'ஓட்டமற்றிக்'காக எல்லாம் சரியாகும். எண்ட 'லைனில்' அவன்ர கதை இருந்திது. இவனுக்குத் தெரிஞ்ச ஒரே கருணாநிதி மூன்றாம் வகுப்பில் வகுப்பாசிரியராக இருந்த ஆள்தான். அந்த ஆள் வீட்டுப் பாடம் செய்யாவிட்டாலும் சரி பள்ளிக்கூடம் போகாவிட்டாலும் சரி எல்லாவற்றிற்கும் கடிதம் கொண்டு வா என்று நிற்கும்.

வீட்டில தாய்க்காரியிடம் வாய் ஓயாமல் பாலனைப்பற்றியும் அவன் சொன்ன கதைகளை பற்றியும் சொல்லிக் கொண்டிருந்தான். தாய்க்காரிக்கு இதில அக்கறையில்லை. குடுக்குற கஞ்சியை நேரம் தவறாமல் வாங்கிறதிலதான் குறியாய் இருந்திது. ஒரு நிமிசம் வீட்டில இருக்கவிடாது. ஓடிப் போய் 'லைனில்' நில் என்று கலைக்கும். இப்பிடித்தான் ஒரு நாள் வாளியோட போய் 'லைனில்' நிற்க வயிற்றை தள்ளிக்கொண்டு வசந்தி வந்திது. இவனைக் கண்டதும் தலையில் போட்டிருந்த துவாயின்ர தலைப்பை வாய்க்க வைச்சு மூண்டாம் ஆளுக்குத் தெரியாம அழுகுது. அழுகை எண்டால் சும்மா அழுகை இல்லை. மும்தாஜ், ஜுலியட் அழுத அழுகை. அழுகைக்கிடையில் விக்கி விக்கி அது சொன்ன விசயம் இதுதான். 'நான் என்ன செய்யிறது நீங்க போயிற்றியள் என்னையும் பிடிக்க வந்திச்சினம். வேற வழி தெரியாமல் கட்டிற்றன். அவர் நல்லவர்.' அது அழுகையை நிப்பாட்டுதில்லை. இவனுக்கு அது இல்லாமல் போனதால பெரிய நட்டமில்லை. வசந்தி இல்லாவிட்டால் என்ன ஒரு சுகந்தி இல்லாமலா போகும் என்ற மாதிரியான 'ரைப்'. ஆனாலும் முன்னால் ஒரு பெட்டை அழுதுகொண்டிருக்கேக்க அது மாதிரியான றியாக்ஸனைக் காட்டுறதுதானே முறை. கண்ணைக் கசக்கிக் கொஞ்சம் கலங்க வைச்சிட்டு, சிவாஜி கணேசன் மாதிரி வானத்தையும் பூமியையும் மாறி மாறிப் பார்த்து, நாலு எட்டு அங்கயும் இங்கயும் எடுத்து வைச்சிட்டுச் சொன்னான்: 'சரி சரி, அழாத நடந்தது நடந்திட்டுது, எல்லாம் எங்கட விதி. பிறக்கிறது ஆம்பிளைப் பிள்ளையாக இருந்தால் என்ர பேரை வை...' பிறகு அதுக்கும் கஞ்சி வாங்கிக் குடுத்திட்டு, தானும் வாங்கிக் கொண்டு வந்தான். அதுக்குப் பிறகு அவளையோ பாலனையோ காணவில்லை. இப்ப பாலனைக் காணுறான்.


பாலன், இவனைக் கட்டிப் பிடிக்க வந்தான். இவனும் விடயில்லை. கதையோட கதையாக இடையில் வானத்தைப் பார்த்துச் சொன்னான்:

'சீ... எல்லாம் அநியாயம்'

அந்த 'ரைம்' திரும்பவும் 'பார்சல்' குடுக்கத் தொடங்கிச்சினம். ரெண்டு பேரும் கூட்டத்துக்குள்ள புகுந்து உள்ள போச்சினம். இவன், ஒரு மனிசனுக்குப் பின்னால நிண்டு, ரெண்டு கையையும் நீட்டினான். ரெண்டு கையிலயும் பார்சலை வைச்சினம். 'யேசுவே' என்றபடி திரும்ப, பின்னுக்கு மூன்று பார்சல்களுடன் பாலன் நின்றான்.

மூன்றாம் நாள். நல்லா விடிஞ்சும் இவன் எழும்பயில்லை. 'ரென்ற்' வெக்கை காலையில் இதமாயிருந்திது. தாய்க்காரிதான் அடிக்காத குறையாக உலுப்பி எழுப்பிச்சுது. எரிச்சலுடன் எழும்பியிருந்தான். மனுசி சதுரம் பதறியபடி நிக்குது.

'டேய் தம்பி, 'ரவுண்டப்' அட. எனக்கெண்டால் என்ன செய்யிறதெண்டே தெரியேல்ல...'



இவனுக்கு மின்னல் மூளைக்குள் அடித்தது. ஏற்கனவே ரெடி பண்ணி வைச்சிருந்த, 'ஸ்ரோறியை' மனதுக்குள் ஓடவிட்டான். 'சேர்..நான் ஒரே பிள்ளை... அம்மாக்கும் ஏலாது. நான்தான் பாக்க வேணும். நான் இயக்கத்தில இருக்கயில்லை. கொஞ்ச நாள் சம்பளத்துக்கு வேலை செய்தனான்'

தியானப் பொசிசனில் கண்ணை மூடிக் கொண்டிருந்தவன், எழும்பி வெளியல வந்தான். 'எல்லா ஆம்பிளயளையும் ரவுண்டப்புக்குவரட்டாம். நீவரயில்லையா? பேயன் மாதிரி வராத... இது மாதிரி எதாவது செற் அப்போட வா' என தான் தூக்கிக் கொண்டு போன குழந்தையைக் காட்டிவிட்டுப் போனான் பரமு.

இவன் வெளிக்கிட தாய்க்காரியும் கூடவே வெளிக்கிட்டுது. இவன் அதட்டி, நிற்பாட்டிப் போட்டான். தனியாகத்தான் போனான்.

கிறவுண்டில சகல ஆம்பிளையளும் குந்தியிருக்க வைக்கப் பட்டிருந்திச்சினம்.

கிறவுண்டைச் சுத்தி நிறைய ஆமிக்காரர். இரண்டு மூன்று மேசையும் கதிரையும் போடப் பட்டிருந்தன. ஏதோ பதியிறதுக்கு ரெடியாகவும் கொஞ்ச ஆமிக்காரர் நிக்கினம். நல்ல வெள்ளையும் சுள்ளையுமாக இருந்த ஒருத்தன் அநேகமாக முஸ்லிமாக இருக்கவேணும் முன்னுக்கு வந்து சொன்னான்: 'அங்க ஆரும் எல்.ரி.ரி.ஈ காரர் இருந்தால், எழும்பி முன்னுக்கு வாங்க. ஒரு பிரச்சினையும் இல்ல. நாங்க விசாரிச்சுப் பதிஞ்சிட்டு விடுவம்...'

பொடியள் மட்டம், வயசாளியள் என பல தரத்திலயும் எழும்பிப் போயினம். எழும்பும்போதே ஒண்டு கேட்டுது... 'சேர், நான் ரெண்டு நாள்தான் இருந்தனான். சேர்... நானும் வரவேணுமே...'

'பரவாயில்ல வாங்க... ஒரு நாள் இருந்தாலும் வாங்க...'

இவனுக்குச் சதுரமெல்லாம் நடுங்கத் தொடங்கிச்சுது. பதினொரு நாள் இருந்திருக்கிறான். ஏ.கே கழற்றிப் பூட்டுவான். பன்னிரண்டு ரவுண்ஸ் அடிச்சிருக்கிறான். கண்ணை மூடிக் கொண்டு, ஒரு முறை செபம் சொன்னான்.

மெனிக் பாம் புழுதியைக் கிளப்பிக் கொண்டு, ஒரு பவள் வந்தது. அந்த ரென்சனான நேரத்திலயும் இவனுக்கு சினிமாக் காட்சிதான் நினைவுக்கு வந்தது. வில்லனின் வாகனம் எல்லாச் சினிமாவிலயும் இப்பிடித்தான் வரும். வாகனம் நின்றவுடன் கதவு திறக்கும். வில்லன் ஒற்றைக் காலை எடுத்து வைப்பார். கமெரா காலடியில இருந்து மேல போகும். கடைசியாக முகத்தைக் காட்ட, முகமே தெரியாமல் கருகருவென்ற தாடிவளர்த்த முகம் இருக்கும்.

வாகனத்திலயிருந்து ஒரு உருவம் இறங்கியது. முகமே தெரியவில்லை. அடையாளந் தெரியாத மாதிரி, கறுப்புத் துணியினால் முகம் மறைக்கப்பட்டிருந்தது. இரண்டு கண்ணுக்கும் மூக்குக்குமாக துணியில் மூன்று ஓட்டைகள். தமிழனுக்குத் தலையாட்டியைத் தெரியாதா என்ன? இவனுக்கு அடிவயிறு குளிர்ந்தது. அந்த உருவம் நடந்து வாறதைப் பார்க்க, எங்கோ பார்த்த மாதிரியிருந்தது.

ஒவ்வொருத்தராக எழும்பித் தலை யாட்டியின் முன்னால் வந்து விட்டுப் போகலாம் என்றார்கள். ஒவ்வொருத்தராகப் போய்க் கொண்டிருக்குது சனம். இவன் கொஞ்சம் பின்னடிச்சான். கொஞ்சம் லேற்றானால், தலையாட்டி களைச்சிடு வான். தெரிஞ்ச ஆளெண்டாலும் விட்டிடுவான் என்று நினைச்சான்.

தலையாட்டியும் இடைக்கிடை தலையை ஆட்டிக் கொண்டுதானிருந்தான். தலையாட்டுப் படுகிற ஆள், அங்கால ரெடியாக நிற்கிற பஸ்ஸில ஏற்றப்படுகிறார். அந்த உருவத்தின் அக்சன், உடம்புக்கட்டு, நடை எல்லாம் எங்கயோ தெரிஞ்ச ஆள் எண்டது மட்டும், இவனுக்கு விளங்குது. ஆரெண்டது மட்டும் பிடிபடுகுதில்லை.

நடக்கிறது நடக்கட்டும் எண்டு எழும்பினான். ஒரு பிதா சுதன் போட்டிட்டு, தலையைக் குனிஞ்சு கொண்டு போனான். வரிசை மெதுவாகப் போகுது. தலையாட்டிக்கு கிட்ட வரவர கால் உதறத் தொடங்கியது. சமாளிச்சுக் கொண்டு போய் நிண்டான். முகத்தை மிக அப்பாவித்தனமாக வைச்சுக் கொண்டு, தலையாட்டியின் கண்ணுக்கு நேராக, இருந்த ரண்டு துளைகளையும் உற்றுப் பார்த்தான். சில செக்கன் மௌனத்தின் பின், அந்த உருவம் தனது தலையை மேலிருந்து கீழாக ஒரு முறை அசைத்தது,

இவனுக்கு அழுகை அழுகையாக வந்தது. எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். ஆமி விடயில்லை. காணிக்கை மலரும் வந்து நிலத்தில ஒரு பாட்டம் விழுந்து குழறிப்பாத்தது. ஆமிக்காரர் நிறையச் சமாதானம் சொல்லி, தாய்க்காரியை அனுப்பிப் போட்டு, இவனைப் பஸ்ஸில ஏத்திச்சினம். மெனிக்பாம் செம்பாட்டு மண்ணில உருண்டு அழுது, உடம்பெல்லாம் செம்பாடு பத்திப் போய் நிக்கிற தாய்க்காரியைப் பார்க்க இவனுக்கு அழுகை பொத்திக் கொண்டு வந்தது. பஸ் யன்னலில முகத்தை வைச்சுக் கொண்டு அழுதான். கொஞ்ச நேரம்தான். பிறகு, ஒரு வைராக்கியம் வந்தவனாக, இறுகிய முகத்துடன் விறைத்து உட்கார்ந்திருந்தான்.

தலையாட்டப்படுகிற ஆட்கள் பஸ்ஸில ஏறிக் கொண்டிருந்தனர். யாரோ ஒருவன், பஸ்ஸினுள் பின்பக்கமாக நின்று தூசணத்தால், யாரையோ திட்டிக் கொண்டிருந்தான். திரும்பிப் பார்த்தான். பாலன். இவனைக் கண்டதும் பாலனுக்குக் கண் கலங்கிவிட்டுது. பக்கத்தில் வந்திருந்தவனுக்கு மூச்சு வாங்கியது. மூச்சை உள்ளிழுத்து ஆசுவாசப்படுத்தியவன்,

'மச்சான், தூத்தேறியாலதானே எனக்கு அங்கயும் சனியன் பிடிச்சது. வம்பில பிறந்தது. பிறகு இஞ்ச வந்தும், எங்களத்தானே பிடிக்கிது...'

அவனுக்கு மூச்சு கடுமையாக வாங்கியது. அந்த முகமூடி மனிதனைத்தான் திட்டு கிறான் என்பது புரிந்தது. யாரந்த மனிதன், என்பதை அறியவேண்டும் என்ற ஆவல் இவனுள் ஏற்கனவே இருந்ததுதான்.

'ஆர் மச்சான் அவன்?'

பாலன் ஒரு முறை இவனை மேலும் கீழுமாகப் பார்த்தான். பிறகு, மெல்லிய குரலில் சொன்னான் : அந்த உறண்டல்தான் பாயும்புலி.



இந்தவாரம்
வை.தவநாதன்
கிளிநொச்சி மாவட்டம்

# என்ன செய்தார்கள் நமது பிரதிநிதிகள்?

## வடமாகாணசபை உறுப்பினர்களின் ஸ்கான் ரிப்போர்ட் - 10

எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா ஈ.பி.டி.பியை பிரதிநிதித்துவப்படுத்தியே மாகாணசபைக்குள் நுழைந்தார். அவரும் கட்சியை விட்டு விலகியதாக சொல்லவில்லை, கட்சியும் நீக்கியதாக சொல்லவில்லை. ஒட்டுமில்லை, உறவுமில்லையென்ற மாதிரி இருக்கிறார். அவரை விட்டால், இப்போது மாகாணசபைக்குள் ஈ.பி.டி.பிக்கு இருப்பது ஒன்றே ஒன்று கண்ணே கண்ணு என ஒரேயொரு ஆசனம் தான். அது வைத்தியநாதன் தவநாதனுடையது. கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதிநிதி.

இந்த வார ஸ்கான் ரிப்போர்ட்டில் இடம் பெறும் மக்கள் பிரதிநிதி வை.தவநாதன்.

அதிகம் ஆர்ப்பாட்டமில்லாத, கட்சியின் மற்றைய உறுப்பினர்களை போல அதிகம் வில்லங்கமான கருத்துக்களை கூறி சர்ச்சையில் சிக்காதவர்.

தவநாதனின் அரசியல் வாழ்க்கை 1980களின் தொடக்கத்தில் ஆரம்பித்தது. புளொட் அமைப்பின் மாணவர் அமைப்பில் செயற்பட்டவர். யாழ்ப்பாணம் நெடுந்தீவுதான் இவரது குடும்பத்தின் பூர்வீகம். பின்னர் கிளிநொச்சியின் வட்டக்கச்சியில் குடியிருந்தனர். அங்கிருந்துதான் புளொட் தொடர்பு ஏற்பட்டு, அதன் மாணவர் அமைப்பில் செயற்பட்டார்.

அப்போது புளொட்டின் முன்னணி உறுப்பினராக இருந்தவர் ஞானப்பிரகாசம் ஞானசேகரன். பரந்தன் ராஜன் என்றால் தான் தெரியும்: புளொட் அமைப்பில் இருந்து பிரிந்து சென்று தனியாக இயங்கினார். பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ அமைப்புக்களில் இருந்து பிரிந்து



**இலகுவாக சந்திக்கலாம், பழகுவதற்கு எளிமையானவர் என நிறைய பிளஸ் இருந்தாலும், பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் அரசியல் செயற்பாடு மிஸ்ஸிங். அதிரடி செயற்பாடுகள், பேச்சுத்தான் அரசியலில் ஸ்கோர் செய்ய குறுக்குவழி. ஆனால் இதெல்லாம் தவநாதனிடம் கிடையாது.**

வந்தவர்களை இணைத்து ஈ.என்.டி.எல்.எவ் அமைப்பை உருவாக்கினார்.

அப்போது பரந்தன் ராஜனுடன் அதிருப்தியடைந்த குழுவொன்று ஈஸ்வரன் என்பவர் தலைமையில் பிரிந்து வந்து, ஈ.பி.டி.பியுடன் செயற்பட்டது. அதில் தவநாதனும் ஒருவர். பின்னர் இந்த அணி இந்தியாவிற்கு சென்றது. சிறிதுகாலத்தின் பின் இராமேஸ்வரத்தில் இருந்து அந்த அணியின் பெரும்பாலானவர்கள் படகு மூலம் இலங்கைக்கு திரும்பி வந்தனர். (வந்தவர்களில் பெரும்பாலானவர்கள் புலிகளின் தாக்குதலில் மரணமாகிவிட்டனர்) தவநாதன் இந்தியாவில் தங்கிவிட்டார்.

பின்னர் கொழும்பு திரும்பி குடும்ப வாழ்க்கைக்கு மாறிவிட்டார். இதன்பின் கொழும்பில்தான் வாழ்ந்தார். ஈ.பி.டி.பி செயற்பாட்டாளராக இருக்கவில்லை.

இயக்கங்களில் இருந்து திரும்பியவர்கள் அனேகர் செய்யும் தொழில் ஏஜென்ஸி வெளிநாட்டு முகவர். நீண்டகாலம் கொழும்பில் வெளிநாட்டு முகவராக செயற்பட்டு வந்தார்.

யுத்தம் முடிந்ததன் பின்னர் மீண்டும் ஈ.பி.டி.பி அமைப்புடன் நெருக்கமாக செயற்பட தொடங்கினார். அப்பொழுது சந்திரகுமார் கிளிநொச்சியில் ஈ.பி.டி.பி முக்கியஸ்தராக இருக்க, அங்கு தவநாதனும் செயற்பட்டார்.

2013 வடமாகாணசபை தேர்தலில் வெற்றிபெற்ற ஈ.பி.டி.பியின் "நிரந்தர மாகாணசபை உறுப்பினர்" அவர் மட்டும்தான். மற்றையவர்கள் கட்சியை விட்டு விலகும் நிலையேற்பட்டது.

கிளிநொச்சியில் சிறிதரன் கட்டியுள்ள இரும்புக்கோட்டைதான் ஈ.பி.டி.பிக்கு பெரும் சவால். சந்திரகுமார் ஓரளவு சவால் அளித்தபோதும், தற்போது அங்கு கட்சி திண்டாடுகிறது. தவநாதன்தான் இப்போது மாவட்ட அமைப்பாளர். என்றாலும், அவரால் கட்சியை தூக்கி நிறுத்த சிரமமாக இருக்கிறது.

இலகுவாக சந்திக்கலாம், பழகுவதற்கு எளிமையானவர் என நிறைய பிளஸ் இருந்தாலும்,பெரும்மாற்றத்தைஏற்படுத்தும் அரசியல் செயற்பாடு மிஸ்ஸிங். அதிரடி செயற்பாடுகள், பேச்சுத்தான் அரசியலில் ஸ்கோர் செய்ய குறுக்குவழி. ஆனால் இதெல்லாம் தவநாதனிடம் கிடையாது. ஈ.பி.டி.பிக்கு வாக்களிக்காத கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த சிலரிற்கு இவரை தெரியவில்லை என்பதையும் குறித்து வைக்க வேண்டும். (சிறுகிராமங்களில் ஊடக பரிச்சயம் குறைவாக உள்ளமையும் ஒரு காரணமாக இருக்கலாம்)

கிளிநொச்சியில் பரவலாக எல்லா



இடங்களிற்கும் போகிறார், மக்களுடன் பேசுகிறார் என்ற அபிப்பிராயம் உள்ளது. யுத்தகாலத்தில் கட்சியுடன் இணைந்திருக்காததால், கட்சியின் சில உறுப்பினர்கள் மீது உள்ள எதிர்மறையான அபிப்பிராயத்தை போன்றவை இல்லை. ஆனால் பெருமெடுப்பில் வாக்கை திரட்டும் கவர்ச்சிகரமான ஆளுமையாகவும் இன்னும் உருவெடுக்கவில்லை. இதற்கு இன்னும் நீண்டதூரம் பயணிக்க வேண்டும்.

மாகாணசபைக்குள் தவநாதனின் செயற்பாடு மென்மையானது. விவாதங்களில் ஓரளவு கலந்து கொள்கிறார். எதிரிக்கட்சியாக செயற்படுவதில்லையென்ற பொதுவான அபிப்பிராயம் சபைக்குள் உள்ளது. எதிர்க்கட்சி வரிசையில் உள்ள சில உறுப்பினர்களை போல சபையை அமளிதுமளிப்படுத்தாமல், நாகரிக பொருத்தமான விவாதங்களில் ஈடுபடுகிறார் என சபைக்குள் பாராட்டை பெற்றிருக்கிறார். பொதுவாகவே வடமாகாணசபைக்குள் ஆளுங்கட்சிக்குள்ளேயே எதிர்க்கட்சி இருப்பதாலோ என்னவோ, எதிர்க்கட்சி வரிசையில் இருப்பவர்கள் அவ்வளவாக கவனம் ஈர்ப்பதில்லை. இந்த குறை தவநாதனிடமும் உள்ளது.

மாகாணசபைக்குள் குறிப்பிடும்படியான பிரேரணைகள் எதுவும் சமர்ப்பித்ததில்லை. ஆனால் முக்கியமான விவகாரங்களில் விவாதத்தில் கலந்துகொள்வார்.

முன்னாள் எம்.பி சந்திரகுமாருடன் இணைந்து கிளிநொச்சியில் ஈ.பி.டி.பி அரசியலை தொங்கியவர். சந்திரகுமார் இல்லாத வெற்றிடத்தை எவ்வளவு தூரம் நிரப்பினார், தனது செல்வாக்கை எவ்வளவு வளர்த்து கொண்டிருக்கிறார் என்பதெல்லாம் இன்னொரு தேர்தல் வந்தால்தான் தெளிவாக கணிப்பிட முடியும்.

# கடற்படையை ஏமாற்றிவிட்டு புலிகள் ஆயுதம் கொண்டுவந்தது இப்படித்தான்!


கடற்புலிகளின் தாக்குதல் படகுகள்


**இறுதி யுத்தத்தில் நடந்தது என்ன 48**

பீஷ்மர்

நிக்கோபர் தீவுகள்தான் புலிகளின் ஆயுதக்ககப்பல்களின் தற்காலிக தங்குமிடம். இந்த கப்பல்கள் உலகெங்குமுள்ள பல நிறுவனங்களின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருக்கும் என்றாலும் தாய்லாந்து, இந்தோனேசியா, வியட்நாம், கம்போடியா போன்ற நாடுகளை அண்மித்ததாக நிற்க முயற்சிப்பார்கள். அதாவது இந்த நாடுகளை அச்சாக வைத்து சுற்றிக்கொண்டிருப்பார்கள். ஆயுதம் கிடைக்கும் நாடுகளிற்கு கப்பல் அனுப்பப்படும். அனேகமாக கிழக்காசிய நாடுகளில்தான் புலிகளிற்கு ஆயுதங்கள் கிடைத்தன. அங்கு ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு, மலேசிய, சிங்கப்பூர் கடற்பரப்பிற்கு அண்மையாக வந்து, இந்தோனேசியாவிற்கும் சிங்கப்பூரிற்குமிடையிலான கடற்பரப்பினால் பயணித்து, நிக்கோபர் தீவுகளின் உள் பக்கமாக ஏதாவதொரு ஆளற்ற தீவிற்கு அண்மையாக கப்பலை கட்டிவைத்து விடுவார்கள்.

ரினியூன் தீவுகளில் இருக்கும் அமெரிக்கரடரால் இவற்றை கண்காணிக்க முடியாது. தப்பித்தவறி அவர்களின் கண்ணில் பட்டாலும், 'அது இந்தியர்களின் ஏரியா... நமக்கு என்ன' என இருந்து விடுவார்கள். நிக்கோபர் தீவு இந்தியர்களின் கடலாதிக்கத்திற்கு உட்பட்ட இடம். ஆனால் இந்தியர்களின் கடற்படை, கடலோர காவல்படையின் இலட்சணம் முன்னர் எப்படியிருந்ததென தெரியும்தானே. அந்தமான் தீவுகளில் இந்திய கடற்படை தளம் இருந்தது. ஏதோ தண்டத்திற்கு இருப்பதை போல இருந்தார்கள். அவர்களிடம் நிக்கோபர் தீவுகளை கவனிக்கும் வசதியிருக்கவில்லை. நிக்கோபரின் புவியியல் அமைவிடமும் இதற்கு ஒரு காரணம்.

நிக்கோபர் தீவுகளில் கட்டப்படும் கப்பல் சில நாட்களும் தரித்து நிற்கலாம், ஆறு ஏழு மாதங்களும் தரித்து நிற்கலாம். கடற்புலிகள் கிளியர் செய்து எடுப்பதை பொறுத்தது அது. ஆயுதக்கடத்தல் பல பிரிவுகளின் ஒருங்கிணைந்த வேலையென்பதை முன்னர் சொல்லியிருந்தேன். ஆயுத பேரத்தை முடிப்பது ஒரு பகுதி, பணம் செலுத்தி ஏற்றும் விபரங்களை உறுதிசெய்வது ஒரு அணி, ஆயுதங்களை ஏற்றி வருவது ஒரு அணி. இந்த அணிதான் இப்பொழுது நிக்கோபர் தீவுகளிற்கு அண்மையில் கப்பலுடன் வந்து நிற்கிறது.

அடுத்த அணி வன்னியில் இருந்த கடற்புலிகள். அவர்கள் இனி ஆயுதங்களை வாங்க வேண்டும். ஒரு பெரிய கடற்சமரிற்கு தங்களை தயார்படுத்துவார்கள். அதன் பின்னரே ஆயுதங்களை இறக்க தயாராகுவார்கள். முல்லைத்தீவில் இருந்து செல்லும் கடற்புலி படகுகள் ஆழ்கடலில் ஆயுதக்கப்பலை சந்தித்து, ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு கரை திரும்புவதுதான் செயற்பாடு. அதை சாதாரணமாக சொல்லலாம். செய்வது கடினம்.

கடலில் டோரா படகுகளின் ரோந்து இருக்கும். முதலில் டோராக்களின் ரோந்து இல்லாத நாள், நேரம் பார்க்க வேண்டும். காங்கேசன்துறை கடற்படை தளத்தில் டோராக்கள் சில சமயம் குறைவாக இருக்கும். காங்கேசன்துறையில் இருந்து ரோந்து கிளம்பிய டோராக்கள் திருகோணமலையில் கட்டப்பட்டிருக்கும். ஓய்வின் பின் அடுத்த சுற்றில் திரும்பி வருவார்கள். இதுதான் கடற்புலிகளிற்கு பொருத்தமான சமயம். பருத்தித்துறை, காங்கேசன்துறையில் டோராக்கள் குறைவாக இருக்கும் சமயம், ஒரு கடற்சண்டைக்கு தயாராக உள்ள சமயம் எல்லாம் பொருந்தி வந்தால், கடற்புலிகள் ஆயுதம் இறக்க தயாராகுவார்கள். இந்த தகவல் நிக்கோபர் தீவுகளில் நிற்கும் கப்பலிற்கும் அறிவிக்கப்படும். அவர்கள் சர்வதேச எல்லையை கடந்தால் அடுத்தது இலங்கை கடற்பரப்புதான்.

பருத்தித்துறைக்கு அப்பால்தான் ஆயுத பரிமாற்றம் நடக்கும். அதற்கு காரணம் பருத்தித்துறையில் டோராக்கள் தரித்து நிற்பதில்லை. முல்லைத்தீவில் இருந்து கிளம்பும்போது கடற்படையின் ரோந்தை கவனித்து, இரகசியமாக புறப்பட்டு விடுவார்கள். போகும்போது கடற்படையுடன் முட்டுப்பட்டு சண்டை நடந்தால் ஆயுதங்களை இறக்க முடியாது. காங்கேசன்துறை பக்கம் ஒரு அணி, திருகோணமலை பக்கம் ஒரு அணி அரண் அமைக்க, நடுப்பகுதியால் ஆயுதங்கள் கரைக்கு கொண்டு வரப்படும். முல்லைத்தீவில் இருந்து கிளம்பும்போதே கடற்படையுடன் முட்டுப்பட்டால், நீண்டநேரம் கடற்சமர் புரிய வேண்டும். அது சாத்தியம் குறைந்தது. கடற்படை தன்னிடமுள்ள முழு வல்லமையையும் திரட்டி வந்தால் எதிர்கொள்வது ஆரம்பத்தில் கடற்புலிகளிற்கு சிரமமாக இருந்தது. ஓரிரண்டு கரும்புலி தாக்குதல்களுடன் சில மணி நேரங்கள் கடற்படையை சமாளிக்கலாம். ஆனால் நீண்டநேரம் சமாளிக்க முடியாது. ஆனால் 1999, 2000களில் இதில் கடற்புலிகள் ஓரளவு வளர்ச்சியடைந்து விட்டனர். முழு நாளும்கடலைகட்டுப்பாட்டில்வைத்திருந்த சம்பவங்களும் உள்ளன. அப்பொழுது பகலிலும் ஆயுதங்களை இறக்கினார்கள். சில விமான எதிர்ப்பு ஏவுகணைகளுடன் கடலில் உலங்கு வானூர்திகளையும் சுட்டு வீழ்த்தியிருந்தனர். இதன்பின்தான் அரசு கிபிர், மிக் போன்றவற்றை கடலில் பயன்படுத்த ஆரம்பித்தது.

கடற்படையின் ரோந்து கப்பல்கள் இல்லாத சமயத்தில் கடற்புலிகளின் விநியோக அணிகள் பருத்தித்துறைக்கு அப்பால் ஆழ்கடலிற்கு செல்ல, காங்கேசன்துறை மற்றும் திருகோணமலை கடற்பரப்பிலிருந்து வரும் கடற்படையை தடுக்க தாக்குதலணிகள் செல்லும். சில சமயம் திசைதிருப்ப காங்கேசன்துறை, திருகோணமலை, மன்னார் பகுதிகளில் கடற்படை தளங்கள், நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்படும். இதனால் கடற்படை பதற்றமடைந்து, அங்குதாக்குதல்படகுகளை வரவழைத்து கடலில் தேடுதல் நடத்தும். இந்த இடைவெளிக்குள் முல்லைத்தீவில் புலிகள் ஆயுதங்களை இறக்கிவிடுவார்கள்.

முல்லைத்தீவில் இருந்து அணிகள் வரும் என சொல்லப்படும், ஆனால் பல சமயங்களில் ஆயுதக்கப்பலும், கரையிலிருந்து செல்லும் விநியோக அணிகளும் சந்திக்காமலும் போகலாம். கடலில் ஏற்படும் திடீர் மோதல், ஆயுதக்கப்பலிற்கு ஏற்படும் திடீர் பிரச்சனைகள் காரணமாக திட்டம் குழம்பும்.


மீண்டும் அடுத்த வாய்ப்பு வரும்வரை நிக்கோபர் தீவுகளில் கப்பலை கட்ட வேண்டும். அதுவரை கப்பலில் உள்ள உணவைத்தான் சாப்பிட்டு சமாளிக்க வேண்டும். கப்பலில் உள்ள மருந்துகளை பாவித்து நோய்களை தீர்க்க வேண்டும். ஒருவருக்கு கடுமையான நோய் ஏற்பட்டால், அவருக்காக கப்பலை ஆயுதத்துடன் திருப்பி கொண்டு செல்ல முடியாது. ஆயுதத்துடன் கப்பலை எந்த கரைக்கு கொண்டு செல்வது?

இதற்குள் முல்லைத்தீவில் இருந்து வரும் விநியோக அணியை சந்தித்தால் நோயாளியையும் கொடுத்து விடுவார்கள். அப்படி நடந்தால், அவர் அதிஸ்டக்காரன். இல்லாவிட்டால் கப்பலிற்குள்ளேயே மரணமாக வேண்டியதுதான். இப்படி மரணமானவர்கள் அனேகர்.


ஆரம்பத்தில் ஆயுதக்கப்பலில் பொது மக்களே வேலை செய்தனர். இப்படி நோய்வாய்ப்பட்டு இறப்பவர்கள், மோதல்களில் இறப்பவர்கள் தொகை அதிகரித்ததையடுத்து ஆயுதக்கப்பல்களையும் போராளிகளிடம் ஒப்படைக்க புலிகள் தீர்மானித்தனர். 1990 இன் நடுப்பகுதியில் இருந்து போராளிகளே முழுமையாக ஆயுதக்கப்பல்களை பொறுப்பேற்று விட்டனர்.

அதற்கு முன்னர் சாதாரண பொது மக்களிடம் ஆயுதக்கப்பல் இருந்த சமயத்தில் சுமார் 10 தொடக்கம் 12 வரையானவர்கள் நோய்வாய்ப்பட்டு கப்பலில் இறந்தனர். இது நிக்கோபர் தீவுகளிற்கு அண்மையில் நிறுத்தி வைக்கப்பட்ட சமயத்திலேயே நடந்தது. அவர்களிற்காக நிக்கோபரின் ஆளற்ற தீவொன்றில் ஒரு நினைவுத்தூபியும் கட்டப்பட்டுள்ளது. (தொடரும்)


கடற்படையின் சுப்பர் டோரா அதிவேக தாக்குதல் கலம்



புலிகளின் ஆயுதக்கப்பல் மார்க்கம்



# A/L பரீட்சையின் பின் என்ன படிக்கலாம்?

ரமணன்

ஒருவழியாக க.பொ.த உயர்தர பரீட்சையை முடித்துவிட்டு நிம்மதியாக இருந்தவர்களிற்கு இப்பொழுது அடுத்த பிரச்சனை கிளம்பியிருக்கும். வீட்டில் அப்பா முணுமுணுக்க, நண்பனிற்கு நடுச்சாமத்தில் போன் போட்டு 'மச்சான்.. எந்த கோஸ் செய்வம்' என தீவிரமாக டிஸ்கஸ் செய்ய ஆரம்பித்திருப்பார்கள் நமது மாணவ மணிகள்.

அவர்களிற்காகவே இந்த பகுதியை தயார் செய்திருக்கிறோம். நண்பன் படிக்கிறான், அப்பா படிக்க சொன்னார் என்பதற்காக ஏதாவதொரு துறையை தேர்ந்தெடுத்து விட்டு, வாழ்க்கை முழுக்க திண்டாடிக் கொண்டிருக்காமல், எதையும் பிளான் பண்ணி செய்யுங்கள்.

அதிக வேலைவாய்ப்பு, அதிக சம்பளம், அதிகம் பேர் தேர்ந்தெடுக்காத சில துறைகளை இங்கு பட்டியல் படுத்தியுள்ளோம்.

## கடல்சார் இயந்திரவியலாளர் பயிற்சிநெறி

வர்த்தக கப்பல்களில் மாலுமிகளுக்கான ஆரம்ப பயிற்சிநெறி மற்றும் கடல்சார் ஆரம்ப இயந்திரவியலாளர் பயிற்சிநெறி. வர்த்தக கப்பல்களில், துறைமுகங்களில் பணிபுரிய ஆர்வமுள்ளவர்களிற்கான பயிற்சிநெறி இது. க.பொ.த சாதாரண தரம் வரை கல்வி பயின்றிருந்தாலே இந்த கற்கைநெறிக்கு போதுமானது. சாதாரணதரத்தில் சித்தியெய்திய பாடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப உயர்ந்த மட்டத்திலுள்ள கற்கைநெறிகளை தேர்வு செய்யலாம். ஐந்து, ஆறு பாடங்கள் சித்தியெய்திருந்தாலே கடல்சார் இயந்திரவியலாளர் கற்கைநெறியை தேர்வுசெய்ய முடியும்.

வடக்கில் தனியார் இதனை கற்பிக்கிறார்கள். 60,000 68,000 வரை கல்விக் கட்டணம். நான்கு மாத கற்கைநெறி. இந்த கற்கைநெறியை பூர்த்தி செய்தால் சகலநாட்டு துறைமுகங்கள், கப்பல்களில் வேலைவாய்ப்பு பெறலாம். கப்பல் நிறுவனங்களை பொறுத்து சம்பளம் வேறுபடும். அடிப்படை கற்கைநெறியை பூர்த்திசெய்த ஒருவர் 54,000 ரூபா தொடக்கம் 85,000 ரூபாவரை மாதாந்தம் சம்பளம் பெற வாய்ப்புள்ளது.

இலங்கை துறைமுக அதிகார சபையின் அங்கீகாரத்துடன் பணி புரிவதற்கான சந்தர்ப்பத்தை இந்த கற்கைநெறிகள் வழங்குகின்றன. பயிற்சிநெறி முடிவில் CDC – Continue Discharge Certificate வழங்கப்படுகின்றது.

மருதனார்மடத்திலுள்ள CINEC CAMPUS கொழும்பு மாலபேயில் உள்ள CINEC CAMPUS இலும் கற்கைநெறிகள் நடக்கின்றன.

## மருந்தகவியல் டிப்ளோமா கற்கை நெறி

மருத்துவத்துறையில் கல்வி கற்று வேலை செய்ய விருப்பமானவர்களுக்கு மருந்தகவியலில் உயர் தேசிய டிப்ளோமா கற்கைநெறியும் தாதியியலில் தொழில்வாண்மையான டிப்ளோமா கற்கைநெறியும் (Prof. Diploma in Nursing, HND in Pharmacy) பொருத்தமானது. அரச உயர்கல்வி நிறுவனங்களில் இணைந்து கற்கலாம். அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களும் இயங்குகின்றன.

தனியார் கல்வி நிறுவனங்களில் கற்கையை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு தனியார் மருந்தகங்களிலும் வைத்திய சாலைகளிலும் பணிபுரிவதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கிறார்கள். தாதியியல் கற்கை நெறிக்காக 3000 ரூபாவும் மருந்தகவியல் கற்கைநெறிக்கு 5000 ரூபாவும் தனியாரால் அறவிடப்படுகிறது. மாணவர்கள் பகுதி நேரமாகவும் கற்கை நெறிகளை தொடரமுடியும்.

அனைத்து கற்கைநெறிகளும் 1 வருட காலம் கற்பிக்கப்படுகின்றது. தாதியர் கற்கைநெறிக்கு கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பாறிட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும். மருந்தாளர் கற்கை நெறிக்கு சாதாரண தர சித்தியுடன் ஆங்கில அறிவும் பரிசோதிக்கப்படுகின்றது. செயல்முறை பயிற்சியுடன் கூடிய இலகுவான கற்கைநெறிகளாக வடிவமைக்கப் பட்டுள்ளன. கற்பதற்கு வயதெல்லை கிடையாது. திருமணமானவர்களும் கற்கலாம். பகுதி நேரமாகவும் கற்பதற்காக வசதிகள் உள்ளது.

CIMA – Chartered Institute of Management Accountants

BIT – Bachelor of Information Technology

MCSE – Software Engineering Web Engineering Network Engineering

பெருமளவானவர்கள் இந்த துறையைதான் தேர்வு செய்வார்கள். அத்துடன் web desingning, Auto cut, Hard ware and Networking போன்ற துணைக்கற்கை நெறிகளையும் கற்க முடியும். நிறைய அரச, தனியார் கல்வி நிறுவனங்கள் இதை கற்பிக்கின்றன. பொருத்தமானவர்களை அடையாளம் கண்டுசெல்வது அவசியம்.

சான்றிதழ் மட்டம் 04 மாத காலப்பகுதியில் கற்பிக்கப்படுகின்றது. முழுமையாக CIMA 11/2 வருடங்களும் BIT 3 வருடங்களும MCSE 1 வருடமும் கற்பிக்கப்படுகின்றது.

கற்கைநெறிகளுக்கான அடிப்படை கல்வித்தகுதிகளாக CIMA மற்றும் MCSE கற்கைநெறிகளுக்கு க.பொ.த சாதாரன தரம் போதுமானது. BIT கற்கைநெறிக்கு க.பொ.த உயர்தரம் கற்றிருத்தல் வேண்டும். க.பொ.த சாதாரன தரம் வரை கற்ற மாணவர்கள் அடிப்படை தகவல் தொழில்நுட்ப கற்கைநெறியை பூர்த்தி செய்த பின்னர் BIT கற்கைநெறியை தொடரமுடியும்.

இக் கற்கைநெறிகளுக்கு வங்கிகள், கணக்காய்வு நிறுவனங்கள், மென்பொருள் நிறுவனங்கள், கணக்காளர் துறைகளில் வேலை வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இக் கற்கைநெறிகளில் சான்றிதழ் கற்கை நெறியை பூர்த்தி செய்யும் மாணவர்கள் 75000 ரூபாவிலிருந்து ஊதியத்தை பெற்றுக்கொள்ள கூடியதாக உள்ளது.

## அழகு கலை

க.பொ.த உயர்தர பாறிட்சையில் கணித, உயிரியல், கலை வர்த்தக, தொழில்நுட்ப பிரிவுகளில் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தியெய்திய மாணவர்கள் அல்லது அழகுக்கலை மற்றும் சிகைஅலங்கரிப்பில் தேசிய தொழில் தகைமை மட்டம் 4 இனை பூர்த்தி செய்தவர்கள். Cosmetology (Beauty Culture) இக்கற்கைநெறியை கற்க முடியும்.

இக் கற்கைநெறியானது

- Nutrition, diet and exercise related to cosmetology
- Advance hair treatments and advance hair dressing
- Advance skin care, hand care, and foot care
- Advance make up
- Advance beauty therapy

போன்ற பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது.

இக் கற்கைநெறியை மாணவர்கள் முழுநேரமாக 3 வருடங்கள் கற்க முடியும். க.பொ.த உயர்தரம் சித்தியடைந்த மாணவர்களுக்கு மேலதிக கல்விக்குரிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்துகின்றது.

இக் கற்கைநெறியை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு மணப்பெண் அலங்காரம், சிகை அலங்கரிப்பு, முக அலங்காரம், அழகுச் சிகிச்சை துறைகளில் வேலைவாய்ப்புக்கள் காணப்படுகின்றது. இக கற்கைநெறி இலவசமாக யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்லூரியில் கற்பிக்கப்படுகின்றது. இலங்கையின் தொழில்நுட்பம் வாழ்க்கைத் தொழில் சார் கல்வி மற்றும் பயிற்சித் திட்டத்தினாலும் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சினாலும் அங்கீகரிக்கப்பட்ட கற்கைநெறியாக காணப்படுகின்றது.

இந்த துறையில் மிகச்சிறப்பாக பணியாற்றுபவர்கள் சீசன் நேரத்தில் ஓரிரு இலட்சங்கள் வரை கூட மாத வருமானம் பெறுகிறார்கள்.

## Hotel Management

சுற்றுலாத் துறையில் நட்சத்திர விடுதிகளில் பணிபுரிவதற்கான சந்தர்ப்பங்களை ஹோட்டல் முகாமைத்துவ கற்கைநெறிகள் வழங்குகின்றன. இக் கற்கைநெறி,

- Front office
- Coocery
- House keeping
- Hotel Reception
- Restaurant and Bar Services
- F & B Operation.

போன்ற பிரிவுகளை உள்ளடக்கியது.

இக்கற்கைநெறியானது முழுநேரமாகவும் பகுதிநேரமாகவும் கற்கக்கூடிய ஒரு கற்கைநெறியாகும். இக் கற்கையின் பிரிவுகளை தனியாக கற்க முடியும். ஒவ்வொரு பிரிவிற்குமான சான்றிதழ் கற்கைநெறிக் கட்டணமாக ஒரு மாதத்திற்கு 3500 ரூபா உள்ளது.

க.பொ.த சாதாரன தரப் பாறிட்சையில் இரண்டு தடைவைக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம், ஆங்கிலம் உட்பட 3 சாதாரண சித்தியும் 3 திறமைச் சித்தியும் பெற்றவர்கள் இக் கற்கைநெறியை தொடர்வதற்கு தகுதியானவர்கள். 18 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டும். ஆங்கிலம் சித்தியடையாதவர்கள் நிறுவனங்களால் நடாத்தப்படும் ஆங்கிலப் பாறிட்சையில் சித்தியடைய வேண்டும்.

டிப்ளோமா கற்கைநெறிக்கான மாதாந்த கட்டணமாக 5750 ரூபா காணப்படுகின்றது. 36 மாதங்கள் கற்பிக்கப்படும். முழுநேரமாக கற்க வேண்டும். க.பொ.த உயர்தரத்தில் 2 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் க.பொ.த சாதாரன தரத்தில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் பெற்றிருக்க வேண்டும். அல்லது க.பொ.த உயர்தரத்தில் 2 சித்திகளுடன் ஆங்கிலத்தில் சாதாரண சித்தியும் பெற்றவர்கள் கற்க முடியும். வயது 18 - 24 க்கு இடைப்பட்டதாக இருக்க வேண்டும்.


கற்கைநெறியை பூர்த்தி செய்யும் மாணவர்கள் ஆரம்ப சம்பளமாக 30,000 ரூபாவிலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது. அரச நிறுவனங்கள் சில மற்றும் யாழில் சில தனியார் நிறுவனங்களில் இக் கற்கைநெறியை பூர்த்தி செய்யலாம். ஆனால் கற்கைநெறிக்குரிய நிறுவனத்தை தேர்வுசெய்வதில் அவதானம் தேவை.

# இணைய யன்னல்




கடந்த வாரம் விக்னேஸ் சிவனின் பிறந்தநாள். காதலன் பிறந்தநாளை அமெரிக்காவில் கொண்டாட நயன்தாரா விரும்பினார். உடனே இருவரும் அமெரிக்கா பறந்து, விதவிதமாக போஸ் கொடுத்தனர். (www.instagram.com/ nayantharaofficial #காதலாகி கசிந்துருகி)


WWE சூப்பர் ஸ்டார் ரொக்கின் லேட்டஸ்ற் தோற்றம் இது. விருமாண்டி மீசையுடன் வலம் வருகிறார். அண்மையில் இன்ஸ்டகிராமில் பதிவேற்றிய இந்த படத்திற்கு மட்டும் கிட்டத்தட்ட பதினைந்தரை இலட்சம் லைக்ஸ். வீட்டில் இந்த இடத்தில் உட்கார்ந்து கொண்டு நிறைய தயாரிப்பு பணி, வியாபார நடவடிக்கைகளில் கைத்தொலைபேசி மூலம் ஈடுபட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார். (www.instagram.com/ therock # லைக்ஸ் மன்னன்)




சன்னி லியோன் நகைக்கடை திறப்பிற்கு போக, கேரள கொச்சிகள் அவரை ஈ மொய்த்ததை போல மொய்த்தனர். நமக்கும் ரசிகர்கள் இருக்கிறார்களாக்கும் என காட்டியுள்ளார் காஜல் அகர்வால். ஹைதராபாத்தில் ஷொப்பிங் மோல் ஒன்றை திறந்து வைத்தபோது, இந்த அரிய புகைப்படம் கிட்டியதாம். (www.facebook.com/KajalAggarwal #தானா சேர்ந்த கூட்டம்)



வீட்டில் இருந்து குட்டி ஜெயசூரியாவை தயார் செய்வதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார் சனத் ஜயசூரிய. மகனிற்கு கிரிக்கெட் களவியூகம் அமைப்பது பற்றி கற்பித்த சமயத்தில் எடுத்த படம். (www.instagram.com/sanath_ jayasuriya # ஸ்ரீனக்கொரு மகன் பிறந்தான்)



ரெண்டி ஒற்றனின் லேட்டஸ்ட் கலக்கல் அப்டேட் இது. ஏதோ ஒரு ஊர்வனவின் காலோ தொடையோ ரெண்டியிடம் சிக்கி சின்னாபின்னாமாகி கொண்டிருக்கிறது. இப்படி சாப்பிட்டால்தான் அப்படி குத்தலாமோ! (www.instagram.com/ randyorton # புல் கட்டு)



மேக்அப் கொஞ்சம் ஜாஸ்திதான். ஒன்றுமே செய்ய முடியாதென்கிறார்கள் வீரேந்திர சேவாக்கும், வி.வி.எஸ்.லட்சுமனணும். நிகழ்ச்சியொன்றிற்காக தொலைக்காட்சி நிலையத்திற்கு சென்றபின், வாயார... வயிறாரா உணவருந்த சென்றபோது. (www.instagram.com/ virendersehwag # ஈற்றிங் பார்ட்னஷிப்)





**www.facebook.com/vsivarathan**

நாங்க செய்றது எல்லாமே உயிர் வாழவே. அந்த உயிருக்கு ஒரு ஆபத்து என்றால் எது வேண்டுமானாலும் செய்வோம். அந்த உயிரையே விடுறேன் என்று சொல்லி தியாகம் செய்தவர் தியாகி திலீபன் அண்ணா. இதை வாசிக்க வேண்டுமானால் உங்களுக்கு சுலபமாக இருக்கும். ஆனால் ஒரு நிமிஷம் கண் மூடி யோசிச்சு பாருங்க. அந்த தியாகம் எவ்வளவு மகத்தானது என்று புரியும். ஒரு நேரம் சாப்பிடாமல் விட்டாலே தாங்க முடியாமல் தவிக்கிறோம். ஒரு நாள் அல்ல இரண்டு நாள் அல்ல மொத்தம் பன்னிரண்டு நாள் உணவும் இல்லாமல் தண்ணியும் இல்லாமல் இருந்து உயிரை விட்டவர் அவர் . அந்த தியாகம் பூசிக்கப்படவேண்டிய தியாகம் எதிரி கூட மதிப்பு கொடுக்கிற தியாகம் அவரது. அவருக்கு நீங்க மதிப்பு கொடுக்காட்டியும் பரவாயில்ல. ஆனால் அவமரியாதை செய்யாதீங்க. அவரது நினைவு சின்னத்துக்கு முன் டயர் போட்டு கொளுத்தினவன் தமிழனாக இருக்க மாட்டான் என்று நம்புறேன் ஏனெனில் விடுதலை புலிகளை பிடிக்காத தமிழர்கள் இருக்கிறார்கள். ஆனால் தியாகி திலீபனை பிடிக்காத, தியாகி திலீபன் மேல் கோபம் கொள்ள கூடிய தமிழன் இருக்க வாய்ப்பு இல்லை. நேற்றைய சம்பவம் ஒவ்வொரு தமிழனாலும் ஒவ்வொரு தமிழனாலும் தண்டிக்கப்படவேண்டும் என்று கூறி எனது கண்டனங்களையும் பதிவு செய்கிறேன் அதே நேரம் சம்பவம் கேள்வி பட்டு சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற கஜேந்திரன் அண்ணாவின் செயல் பாராட்டகூடியது. ஆனாலும் அவ்வளவு வேகமா வந்து எரிந்து கொண்டிருக்கும் டயரை ஸ்டைலாக நின்று பார்த்து கொண்டிருக்காமல் அதை தண்ணி ஊத்தி நூத்து இருந்தால் இன்னும் சிறப்பாக இருந்து இருக்கும்.



**www.facebook.com/saba.thanujan**

தமிழர் குடியிருப்புகளுக்கு மத்தியில், பௌத்தர்கள் இல்லாத இடத்தில் கொண்டுவந்து புத்தர் சிலையை வைக்கிறது என்னமாதிரியான ஆதிக்கத்தின் வெளிப்பாடோ! அதே போன்றதுதான் மற்றக் கிராமத்தில் மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் பிணம் எரிப்பதற்காக நிற்பதும். ஏனென்றால், ஆயிரம் வருடங்களுக்கு முன்பு பௌத்தர்கள் இங்கே வாழ்ந்தார்கள் (கந்தரோடை அதற்கான ஆதாரம்) எனவே, அது இந்த மண்ணின் பாரம்பரியம், பௌத்தனின் பண்பாட்டு உரிமை என்று சொன்னால் உன்னால் ஏற்றுக்கொள்ள் முடியுமா? அதையும் நாம் எதிர்ப்போம்.

அதனாலேயே, நாம் தமிழராய் ஐக்கியப்படுவதற்கு விடுதலைப் புலிகள் காலத்தில் சற்றுக் குறைந்திருந்த, ஸ்ரீஸ்ரீயின் காலத்தில் சலுகைகளால் மறைக்கப்பட்ட, இன்றைய மக்கள் பற்றிய அக்கறையே இல்லாத எங்களின் பாராளுமன்ற உறுப்பினர்களின் அக்கறையீனத்தால் ஆட்டம்போட வெளிக்கிடும் ஆதிக்கச் சிந்தனையை வேரோடு களையவே, அனைவருக்குமான சமத்துவமான இன விடுதலையை வென்றெடுக்கவே நாங்கள் குரல் கொடுக்கிறோம்.



**www.facebook.com/kananswamy**

மயானத்தை மாத்து மாத்து எண்றாங்கள் உலகம் பூரா மயானத்தை மாத்தோணுமேடா.! இதுக்காக பிணத்துடன் கருவாட்டையுமா சுடேலும்!?










இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 24.09.2017 அன்று வெளியிடப்பட்டது.